## Contents


1. பரிசுத்த ஆவியானவர் ..... 1

ஆள்தத்துவம் கொண்டவர்! ..... 1

ஆவியானவருக்கு கொடுக்கப்படும் தெய்வீக குணாதிசயங்கள் ..... 3

1. சகல வியாபி - எங்கும் நிறைந்தவர் – *Omnipresent* ..... 3

2. சர்வ வல்லமையுள்ளவர் – *Omnipotent* ..... 4

3. சர்வ ஞானி – *Omniscient* ..... 4

4. அநாதியானவர் – *Eternal* ..... 4

பழைய நியாயப்பிரமானத்தில் பரிசுத்த ஆவியானவர் - *Holy Spirit in the Old Covenant:* 5

பழைய நியாயப்பிரமான மனிதர்கள் மேல் அமர்ந்த பரிசுத்த ஆவியானவர் ..... 6

பிற்கால அபிஷேகத்தை குறித்து பழைய நியாயப்பிரமாணத்தில் தீர்க்கதரிசனங்கள் ..... 10

புதிய நியாயப்பிரமான மனிதர்கள் மேல் அமர்ந்த பரிசுத்த ஆவியானவர் ..... 13

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட மனிதர்கள் ..... 17

புதிய நியாயப்பிரமான சபையின் பிறப்பு ..... 19

சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் ..... 19

சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஊழியம் செய்தனர் ..... 21

புதிய நியாயப்பிரமான கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் ..... 24

குறிப்புகள் ..... 28

2. பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உணர்ந்து வாழ்வது எப்படி? ..... 31

உலகளாவிய பிரசன்னம் மற்றும் வெளிபடுத்தப்பட்ட பிரசன்னம் ..... 32

அவருடைய பிரசன்னம் நம்மோடு இருப்பதை உணர்த்தும் முக்கிய காரணிகள்! ..... 35

அவருடைய பிரசன்னத்தில் வாழ நடைமுறைகள் - *Practical steps to be in His presence* 39

1. நன்றி மனப்பான்மை: அவருக்கு நன்றி செலுத்துதல் - *Attitude of Gratitude: Thanking Him* ..... 39


குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*2. அவருடைய வார்த்தையை தியானித்தல் - Mediate His word................................40*
*3. ஜெபம் - Prayer ................................................................................................41*
*குறிப்புகள்.......................................................................................................................42*
*3. பரிசுத்த ஆவியானவரின் மூன்று பரிமாணங்கள்.........................................................45*
*ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார்..............................................................................45*
*பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம்செய்வதால் கிறிஸ்தவ வாழ்வில் பலன்கள்...49*
*கர்த்தர் நம்மோடு இருக்கிறார்...........................................................................................51*
*கர்த்தர் நம்மேல் இருக்கிறார்............................................................................................53*
*முடிவுரை..........................................................................................................................60*
*குறிப்புகள்.......................................................................................................................62*
*4. பரிசுத்த ஆவியானவரின் பணிகள்...................................................................................65*
*நீங்கள் கர்த்தருக்குள் நீதிமான்கள்.....................................................................................65*
*பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்................69*
*பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் ஆவி என்றும் அழைக்கப்படுகிறார்!! .................69*
*குறிப்புகள்.......................................................................................................................74*
*5. பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அறிந்துகொள்ளுதல்........................................77*
*பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் என்ன? ........................................................................77*
*நிர்வகிக்கும் வரம் -* Administration *......................................................................77*
*அப்போஸ்தல ஊழிய வரம் -* Apostleship *.........................................................78*
*கைவினை கலையின் வரம் -* Craftsmanship*.................................................82*
*பகுத்தறியும் வரம் –* Discernment*..........................................................................84*
*சுவிசேஷ வரம் -* Evangelism *....................................................................................88*
*உபதேச வரம் -* Exhortation*.........................................................................................91*

குறிப்பு:

______________________________________________________________________________

விசுவாச வரம் - Faith ... 92

கொடுக்கும் வரம் - Giving ... 93

சுகமளிக்கும் வரங்கள் - Healing ... 96

உதவும் வரம் - Helps ... 98

உபசரிக்கும் வரம் - *Hospitality* ... 100

மன்றாட்டு-ஜெப வரம் - Intercession ... 101

அறிவை உணர்த்தும் வரம் - Word of Knowledge ... 102

தலைமைத்துவ வரம் - Leadership ... 104

இரக்கத்தின் வரம் - Mercy ... 107

அற்புதத்தின் வரம் - Miracles ... 108

போதக / மேய்ப்பர் வரம் - Pastor/Shepherd ... 111

தீர்க்கதரிசன வரம் - Prophecy ... 114

விசாரிப்பு வரம் - Service ... 117

ஆசிரிய வரம் - Teaching ... 119

அந்நிய / நவமான பாஷை வரம் (மற்றும் வியாக்கியான வரம்) - Tongues (and Interpretation) ... 121

ஞான வார்த்தை வரம் - Word of Wisdom ... 124

நமக்கு கொடுக்கப்பட்ட வரங்களை அறிந்துகொள்வது எப்படி? ... 126

குறிப்புகள் ... 134

6. பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் உங்கள் ஊழியத்திற்கு ... 137

7. கிறிஸ்துவின் வரங்களும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் ... 143

பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் ... 146

குறிப்பு:

முடிவுரை ........ 151

குறிப்புகள் ........ 152

8. அனுதினமும் வரங்களை பயன்படுத்துதல் ........ 155

ஆவி ஆத்துமா சரீரம் ........ 157

கர்த்தர் யார்? ........ 158

குறிப்புகள் ........ 160

9. பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் ........ 163

ஆவியின் வரங்கள் ........ 165

மூன்று வெளிப்பாட்டு வரங்கள். ........ 166

மூன்று வல்லமை வரங்கள். ........ 166

மூன்று வாய்மொழி வரங்கள். ........ 166

1) ஞானத்தை போதிக்கும் வரம் - *The Word of Wisdom* ........ 166

2) அறிவின் வார்த்தை வரம் - *A Word of Knowledge.* ........ 172

3) ஆவிகளை பகுத்தறியும் வரம் - *Discerning of Spirits* ........ 174

வல்லமை வரங்கள் - *Power gifts* ........ 175

1. சுகமளிக்கும் வரங்கள் - *Gifts of healings* ........ 176

2. அற்புதத்தின் வரம் - *Working of miracles* ........ 178

3. விசுவாச வரம் - *Faith* ........ 178

வாய்மொழி வரங்கள் - *Vocal gifts.* ........ 181

1. தீர்க்கதரிசன வரம் - *Gift of prophecy.* ........ 181

2. நவமான / அந்நிய பாஷையின் வரம் - *Different kinds of tongues* ........ 184

3. வியாக்கியானம் பண்ணும் வரம் - *Interpretation of tongues.* ........ 189

குறிப்புகள் ........ 190

10. சுகமளிக்கும் வரங்கள் ........ 193

குறிப்பு:

இயேசு ராஜ்யத்தை குறித்து பிரசங்கிக்கும்படி தமது சீஷர்களுக்கு கட்டளையிட்டார். ........ 195
சுகமளிக்கும் வரங்கள் எப்படி கிரியை செய்யும்? ........ 208
குறிப்புகள் ........ 210
11. நவமான / அந்நிய பாஷையின் வரம் ........ 213
எபேசு சபை - Church in Ephesus ........ 217
நவமான பாஷைகள் ஒழிந்துவிட்டதா? ........ 222
ஏன் நவமான பாஷையை பேச வேண்டும்? ........ 224
எப்படி நவமான பாஷையை பேசுவது? ........ 228
குறிப்புகள் ........ 231
12. தீர்க்கதரிசன வரம் ........ 235
பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் ........ 235
மேசியாவின் வருகை ........ 240
புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் ........ 247
தீர்க்கதரிசனம் என்பது என்ன? ........ 248
தீர்க்கதரிசனம் என்ன செய்யும்? ........ 248
குறிப்புகள் ........ 251


குறிப்பு:

*குறிப்பு:*

# *1.* பரிசுத்த ஆவியானவர்

## *ஆள்தத்துவம் கொண்டவர்!*

***பிதா, குமாரன், பரிசுத்த ஆவி! மூவர்-ஒன்றான தேவன்!!***



*பரிசுத்த ஆவி ஒரு சக்தி அல்ல அவர் ஒரு ஆள்த்தத்துவம் கொண்ட மனிதர்!*

*அவர் திரியேகத்தில் மற்றவர்களுடன் சமமாக இருப்பவர்!*

***மத்தேயு 28:19,***

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து…*

***அப்போஸ்தலர் 5:3-4,***

> *[3]பேதுரு அவனை நோக்கி: "அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, **பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?***
>
> *[4]அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன **நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய்** என்றான்."*

*குறிப்பு:*

___

___

___

___

___

*பரிசுத்த ஆவியானவர் கர்த்தர் என்று இந்த வாக்கியங்கள் தெளிவாக கூறுகின்றன.*

*முதலும் முக்கியமுமாக நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டிய காரியம், **பரிசுத்த ஆவியானவர் கர்த்தர்**, அவர் நம்மை **ஆட்கொள்ளும் ஒரு சக்தி அல்ல**.*

***2 கொரிந்தியர் 13:14,***

> *கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், **பரிசுத்த ஆவியினுடைய** ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்..*

*கர்த்தருக்கு கொடுக்கப்படுவதற்கு ஒத்த நாமங்களே பரிசுத்த ஆவியானவருக்கும் கொடுக்கப்படுகிறது.*

***1 கொரிந்தியர் 6;11,***

> *உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய **இயேசுவின் நாமத்தினாலும்,** நமது **தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.***

***ரோமர் 8:9, 15;***

> *[9] **தேவனுடைய ஆவி** உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*
>
> *[15] அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற **புத்திர சுவிகாரத்தின்** ஆவியைப் பெற்றீர்கள்.*

***1 பேதுரு 1:11***

> *தங்களிலுள்ள **கிறிஸ்துவின் ஆவியானவர்** கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும்*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்..*

*பரிசுத்த ஆவியானவர் ஆண்டவர் என்றும் அழைக்கப்படுகிறார்.*

***2 கொரிந்தியர் 3:17,18***

*17**கர்த்தரே ஆவியானவர்;** கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. [18]நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, **ஆவியாயிருக்கிற கர்த்தரால்** அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*

## ஆவியானவருக்கு கொடுக்கப்படும் தெய்வீக குணாதிசயங்கள்

***Divine Attributes Recognised to the Spirit***

### 1. *சகல வியாபி - எங்கும் நிறைந்தவர் – Omnipresent*

**பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் எங்கும் நிறைந்தவர்**

***சங்கீதம் 139:7-10***

*[7]உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?*

*[8]நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.*

*[9]நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,*

*[10]அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

### *2. சர்வ வல்லமையுள்ளவர் – Omnipotent*

***பரிசுத்த ஆவியானவர் சர்வ வல்லமையுள்ளவர்***

***லூக்கா 1:35***

*தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.*

### *3. சர்வ ஞானி – Omniscient*

***பரிசுத்த ஆவியானவர் சகல ஞானமும் உடையவர்***

***1 கொரிந்தியர் 2:10-11.***

*[10]நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.*

*[11]மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் னுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.*

### *4. அநாதியானவர் – Eternal*

***பரிசுத்த ஆவியானவர் ஆரம்பமும் முடிவும் இல்லாதவர்***

***எபிரேயர் 9:14.***

***நித்திய ஆவியினாலே*** *தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!*

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பழைய நியாயப்பிரமானத்தில் பரிசுத்த ஆவியானவர் - *Holy Spirit in the Old Covenant:*

*மிக முக்கியமாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய காரியமானது: பழைய நியாயப்பிரமானத்தில் பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் வாசம் செய்யவில்லை.*

### 1. ஆதி சிருஷ்டிப்பு முதல் - *In Creation from the beginning*

***ஆதியாகமம் 1:1 -2***

> 1 *ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.*
>
> 2 *பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; **தேவ ஆவியானவர்** ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.*

### 2. மனிதனை சிருஷ்டிக்கும்போது - *In creating human*

***ஆதியாகமம் 2:7***

> *தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.*

### 3. ஆசரிப்பு கூடாரத்தை நிரப்பினார் - *Fills the Tabernacle*

***யாத்திராகமம் 40:34-38***

> *அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக் கூடாமல் இருந்தது. வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள்வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் பண்ணும் எல்லாப்*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*பிரயாணங்களிலும் அவர்களெல்லாருடைய கண்களுக்கும் பிரத்தியட்சமாகப் பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது.*

### 4. தேவாலயத்தை நிரப்பினார் - *Fills the Temple*

***1 இராஜாக்கள் 8:10-11***

*அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில், மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக் கூடாமற்போயிற்று; கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.*

## பழைய நியாயப்பிரமான மனிதர்கள் மேல் அமர்ந்த பரிசுத்த ஆவியானவர்

### *Holy Spirit upon the people in the Old Covenant*

#### 1. யோசேப்பு - *Joseph*

***ஆதியாகமம் 41:38***

*அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: **தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல** வேறொருவன் உண்டோ என்றான்.*

#### 2. மோசே மற்றும் 70 தலைவர்கள் - *Moses and 70 leaders*

***எண்ணாகமம் 11:16-17***

*16அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய்.*

*17அப்பொழுது நான் இறங்கிவந்து அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும்*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்.*

### *3. யோசுவா - Joshua*

***எண்ணாகமம் 27:18***

*கர்த்தர் மோசேயை நோக்கி: **ஆவியைப் பெற்றிருக்கிற** புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வைத்து;*

### *4. கிதியோன் - Gideon*

***நியாயாதிபதிகள் 6:34***

*அப்பொழுது **கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்;** அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து,*

### *5. யெப்தா - Jepthah*

***நியாயாதிபதிகள் 11:29***

*அப்பொழுது **கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார்;** அவன் கீலேயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்துபோய், கீலேயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போனான்.*

### *6. சிம்சோன் - Samson*

***நியாயாதிபதிகள் 14:5-6***

*[5]அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது.*

குறிப்பு:

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

[6]அப்பொழுது **கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால்,** அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப் போட்டான்; ஆனாலும் தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.

***நியாயாதிபதிகள் 15:14***

அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம்பண்ணினார்கள் அப்பொழுது **கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால்,** அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்து போயிற்று.

### *7. சவுல் - Saul*

***1 சாமுவேல் 10:10***

அவர்கள் அந்த மலைக்கு வந்த போது, இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது; அப்பொழுது **தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால்,** அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னான்.

### *8. தாவீது - David*

***1 சாமுவேல் 16:13***

அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள்முதற்கொண்டு, **கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்;** சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்.

குறிப்பு:

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

### *9. எலியா - Elijah*

***1 இராஜாக்கள் 18:12***

*நான் உம்மை விட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப் போய் அறிவித்த பின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே; உமது அடியானாகிய நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்.*

### *10. எலிசா - Elisha*

***2 இராஜாக்கள் 2:15***

*எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனைக் கண்டவுடனே,* ***எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருக்கிறது*** *என்று சொல்லி, அவனுக்கு எதிர் கொண்டுபோய்த் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கி.*

### *11. எசேக்கியேல் - Ezekiel*

***எசேக்கியல் 2:1-2***

*1அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, உன் காலூன்றி நில்; உன்னுடனே பேசுவேன் என்றார். 2இப்படி அவர் என்னோடே பேசும்போது,* ***ஆவி எனக்குள் வந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது****; அப்பொழுது அவர் என்னுடனே பேசுகிறதைக் கேட்டேன்.*

### *12. தானியேல் - Daniel*

***தானியேல் 6:3***

*இப்படியிருக்கையில் தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான்; தானியேலுக்குள்* ***விசேஷித்த ஆவி***

குறிப்பு:

___

___

___

___

___

*இருந்தமையால்* அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்.

### *13. மீகா - Micah*

***மீகா 3:8***

*நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, **கர்த்தருடைய ஆவி அருளிய** பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்.*

### *14. பிரதான ஆசாரியனாகிய சகரியா - Zachariah the High Priest*

***2 நாளாகமம் 24:20***

*அப்பொழுது **தேவனுடைய ஆவி ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனான சகரியாவின்மேல் இறங்கினதினால்,** அவன் ஜனத்திற்கு எதிரே நின்று: நீங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறது என்ன? இதினால் நீங்கள் சித்திபெறமாட்டீர்களென்று தேவன் சொல்லுகிறார்; நீங்கள் கர்த்தரை விட்டுவிட்டதினால் அவர் உங்களைக் கைவிடுவார் என்றான்."*

*மேலே கண்ட வசனங்களின் மூலம் பரிசுத்த ஆவியானவர் பழைய உடன்படிக்கையின் ஊழியக்காரர்கள் எவரிடமும் நிரந்தரமாய் தங்கியிருக்கவில்லை.*

## *பிற்கால அபிஷேகத்தை குறித்து பழைய நியாயப்பிரமாணத்தில் தீர்க்கதரிசனங்கள்*

### *Prophecy about the future outpouring in the Old Covenant*

### *1. யோவேல் 2:26*

*நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## *2. சகரியா 12:10-14*

*10நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் **கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்.** அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.*

*11அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும்.*

*12தேசம் புலம்பிக்கொண்டிருக்கும்; ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்,*

*13லேவி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், சீமேயி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்,*

*14. மற்றுமுண்டான சகல குடும்பங்களிலும் ஒவ்வொரு குடும்பத்தின் மனுஷர் தனித்தனியேயும் அவர்களுடைய ஸ்திரீகள் தனித்தனியேயும் புலம்புவார்கள்.*

## *3. எரேமியா 31:31- 34*

*31இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.*

*32நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

குறிப்பு:

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

*33அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*34இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்."*

**மேற்கண்ட வசனங்களிலிருந்து நாம் புரிந்து கொள்ளக்கூடியவை:**

1. **Selective** *(யாத் 31: 1 -5)* - **குறிப்பிட்ட நபர் / நேரம் / பணியை செய்பவர்:** *கர்த்தருடைய பணியையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்காக, சில தருணங்களில் பரிசுத்த ஆவியானவர் சிலர் மேல் மாத்திரம் வந்திறங்கினார்.*
2. **Temporary** - ***தற்காலிகமானவர்***: *பரிசுத்த ஆவியானவர் நிரந்தரமாக யாரிடமும் வாசம் செய்யவில்லை ஏனெனில் யாராலும் தங்கள் சுய மனசாட்சியின்படி பரிசுத்தமான பழுதற்ற வாழ்க்கை வாழ முடியவில்லை.*
3. **Task Oriented** - ***குறிப்பிட பணி நிமித்தமானவர்***: *கர்த்தருடைய பணியை செய்யக்கூடிய அனைத்து பழைய உடன்படிக்கை மக்களாலும் தங்கள் வாழ்வை தங்கள் விருப்பம்போல் வாழ முடிந்தும் கர்த்தருடைய சித்தத்தை தங்கள் வாழ்வின் சில பகுதிகளில் நிறைவேற்ற முடிந்தது. ஆனால் முழுமையாக இல்லை.*
4. **Conscience** - ***மனசாட்சி***: *தாவீது ராஜா கர்த்தரால் பயன்படுத்தப்பட்டும் தான் செய்த பாவத்தினிமித்தம் பரிசுத்த ஆவியானவரை தன் வாழ்விலிருந்து எடுத்துப்போடாதபடி கர்த்தரை வேண்டிக்கொள்ளுகிறான். (சங்கீதம் 51 படிக்க)*

குறிப்பு:

5. **Future** - ***எதிர்காலம்***: *அவர்கள் அனைவரும் தீர்க்கதரிசனமாக உரைத்தது:*

*கர்த்தர் தமது ஆவியை தமது ஜனத்தின்மீது பொழிந்தருளுவார், அவர்கள் புதிய இருதயத்தை பெற்றுக்கொள்வார்கள்.*

## ***புதிய நியாயப்பிரமான மனிதர்கள் மேல் அமர்ந்த பரிசுத்த ஆவியானவர்***

### ***Holy Spirit upon the people in the New Covenant***

### **இயேசுவின் வாழ்வும் ஊழியமும்**

***1. கருவில் - Conception***

***மத்தேயு 1:18***

*இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாராகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள்* ***பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்*** *என்று காணப்பட்டது.*

***லூக்கா 1:30-35***

*30 தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். 31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. 32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். 33 அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். 34 அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். 35 தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக:* ***பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.***

குறிப்பு:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

*2. **ஊழியத்திர்க்கென அபிஷேகம் - Anointed for ministry***

***லூக்கா 3:21-22***

*ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; **பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார்**. வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.."*

*3. **சோதிக்கப்ப்படும்படி பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டார் - Led by the Spirit to be tempted***

***லூக்கா 4:1***

*இயேசு **பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய்** யோர்தானைவிட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு,*

*4. **பரிசுத்த ஆவியானவரால் பெலப்படுத்தப்பட்டார் - Empowered by the Holy Spirit***

***லூக்கா 4:14***

*பின்பு இயேசு **ஆவியானவருடைய பலத்தினாலே** கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று.*

***லூக்கா 4:18-19,***

***கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்;** தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

***அப்போஸ்தலர் 10:38,***

> *நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.*

***மத்தேயு 12:28***

> *நான் **தேவனுடைய ஆவியினாலே** பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.*

***5. பரிசுத்த ஆவியானவரால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் - Raised from the dead by the Holy Spirit***

***ரோமர் 8:11***

> *அன்றியும் **இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி** உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்..*

*இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து தேவன் பரிசுத்த ஆவியைக்கொண்டு உயிர்ப்பித்தார் என்பதை நாம் மீண்டும் வேத வாக்கியங்களில் காண முடியும்.*

***6. விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் - Promised to the believers***

***அப்போஸ்தலர் 1:5 -8,***

> *4அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் **சில** நாளுக்குள்ளே பரிசுத்த **ஆவியினாலே** ஞானஸ்நானம் பெறுவீர்கள்.*

குறிப்பு:

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

*5ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.*

*6அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.*

*7அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.*

***8பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து**, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

## மேலே கண்ட இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியத்தின் சுருக்கம்:

- *ஆண்டவராகிய இயேசு கருவில் உருவானது முதல் உயிர்த்தெழுந்தது வரை அனைத்துமே பரிசுத்த ஆவியானவரின் பலத்தினால் (வல்லமையினால்) நிகழ்ந்தன .*

- *பரிசுத்த ஆவியானவர் தம்மோடு வாசம்செய்ததினால், இயேசு நேர்த்தியும் பரிசுத்தமுமான வாழ்வை வாழ்ந்தார்*

- *தம்மை பின்பற்றுகிற யாவரும் **அதே** ஆவியினால் நிரப்பப்படுவார்கள் என்று இயேசு வாக்குகொடுத்திருக்கிறார்.*

குறிப்பு:

__________________________________________________

## இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட மனிதர்கள்

***People were filled by Holy Spirit while Jesus was on the earth***

***1. யோவான் ஸ்நானகன் - John the Baptist***

***லூக்கா 1:13-17***

*13தூதன் அவனை நோக்கி: "சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.*

*14உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்.*

*15அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், **தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்**.*

*16அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்.*

*17பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்."*

குறிப்பு:

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

### *2. எலிசபெத்து - Elisabeth*

***லூக்கா 1:41***

*எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; **எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு,***

### *3. சகரியா - Zacharias*

***லூக்கா 1:67***

*அவனுடைய தகப்பனாகிய சகரியா **பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,** தீர்க்கதரிசனமாக ...*

### *4. சிமியோன் - Simeon*

***லூக்கா 2:25-26,***

*25அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்; **அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார்**.*

*26கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## புதிய நியாயப்பிரமான சபையின் பிறப்பு

### *New Testament Church birth*

### சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்

### *Disciples filled with Holy Spirit*

***அப்போஸ்தலர் 2:1-4,***

*1பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.*

*2அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.*

*3அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.*

*4**அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு**, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

***அப்போஸ்தலர் 8:14-17***

*14சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.*

*15இவர்கள் வந்தபொழுது அவர்களிலொருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,*

*16அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி,*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

*17அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்,* ***அப்பொழுது அவர்கள் பரிசுத்த***
***ஆவியைப் பெற்றார்கள்.***

***அப்போஸ்தலர் 10:44-47***

*44இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில்*
*வசனத்தைக்கேட்டவர்கள்* ***யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.***
*45அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும்,*
*46பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள்*
*கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும்*
*பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். 47அப்பொழுது பேதுரு:*
***நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற*** *இவர்களும் ஞானஸ்நானம்*
*பெறாதாபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,*

***அப்போஸ்தலர் 19:1-6***

*1அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல்*
*மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில*
*சீஷரைக் கண்டு: 2நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப்*
*பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி*
*உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.*
*3அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம்*
*பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம்*
*பெற்றோம் என்றார்கள். 4அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின்*
*வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று*
*ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக்*
*கொடுத்தானே என்றான். 5அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய*
*இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். 6அல்லாமலும் பவுல்*
*அவர்கள்மேல் கைகளை வைத்தபோது,* ***பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்;***
*அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ்*
*சொன்னார்கள்.*

குறிப்பு:

## சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஊழியம் செய்தனர்

## *Disciples ministered by the Holy Spirit*

***அப்போஸ்தலர் 3:6-8,***

*6அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; 7வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. 8அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.*

***அப்போஸ்தலர் 8:5-7***

*5அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்கு பிரசங்கித்தான். 6பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். 7அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.*

***அப்போஸ்தலர் 9:32-34***

*32பேதுரு போய் எல்லாரையும் சந்தித்துவருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான். 33அங்கே எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான். 34பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான்..*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***அப்போஸ்தலர் 9: 36-37, 40***

*36யோப்பா பட்டணத்தில் கிரேக்குப்பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்.*
*37அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். 40பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.*

***அப்போஸ்தலர் 14:8-10***

*8லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து,*

*9பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு:*

*10நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்..*

***அப்போஸ்தலர் 16:16-18***

*16நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.*

*17அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*[18]இப்படி அநேகநாள் செய்துகொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப்புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று..*

***அப்போஸ்தலர் 19:11-12,***

***11**பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.*

***12**அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.*

***அப்போஸ்தலர் 28:8***

*புபிலியுவினுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன்மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான்..*

***அப்போஸ்தலர் 5:11;15***

*11சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.*

*15பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## *புதிய நியாயப்பிரமாண கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியானவர்*

## *Holy Spirit in Christian life in the New covenant*

### *5. பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறத்தல் - Born again by the Holy Spirit*

***யோவான் 3:3-6***

*3 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*4 அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்.*

*5 இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் **ஆவியினாலும் பிறவாவிட்டால்** தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.*

*6 மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.*

### *6. கிறிஸ்தவனின் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் - Christian body is the temple of the Holy Spirit*

***1 கொரிந்தியர் 6:19-20***

*19உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற **பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்**, நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*

*20கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

***ரோமர் 12:1***

*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை..*

### *7. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சாயலுக்குள் இணைப்பவர் - Holy Spirit will conform to the image of Christ*

***2 கொரிந்தியர் 3:17-18***

*17கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.*

*18நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*

***ரோமர் 8:28-29***

*28அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.*

*29தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது **குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு** முன்குறித்திருக்கிறார்;*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

### *8. நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் - In dwelling of the Holy Spirit*

***யோவான் 14: 16***

> *நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் **சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை** அவர் உங்களுக்குத் தந்தருளுவார்*

***1 யோவான் 2:27***

> *நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் **உங்களில் நிலைத்திருக்கிறது**, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*

***யோவான் 16:7***

> *நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்..*

*பழைய மற்றும் புதிய நியாயப்பிரமானங்களில் பரிசுத்த ஆவியானவரின் குறிப்பிடத்தக்க வேறுபாடு என்னவென்றால், புதிய நியாயப்பிரமான விசுவாசிகள் தங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும்படியான ஒரு மகத்தான உரிமையை பெற்றுள்ளவதன் மூலம் நல்மனசாட்சி பெறுகிறார்கள்.*

*ஆனால் பழைய நியாயப்பிரமான காலத்தில் ஒரு குறிப்பிட்ட பணிக்காக மாத்திரம், ஒரு குறிப்பிட்ட நபருக்கு மாத்திரமே ஆவியானவர் கொடுக்கப்பட்டார்.*

*எபிரெயர் புத்தகத்தின் ஆசிரியர் அதிகாரம் 1: 1-3 கூறிய வசனங்களை வாசித்து இந்த முதலாம் பாடத்தை நிறைவு செய்வோம்:*

*குறிப்பு:*

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*1பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், 2இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். 3இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

# குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

*குறிப்பு:*

## *2.* **பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உணர்ந்து வாழ்வது எப்படி?**

### *கத்தார் சகல வியாபி – எங்கும் நிறைந்தவர் – God is Omnipresence*

*கர்த்தர் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று வாக்கியங்கள் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன. அப்படியானால் அவர் இல்லாத இடம் இல்லை, இந்த பிரபஞ்சத்தின் அண்டசராசரங்களில் எங்கும் ஆண்டவர் நிறைந்திருக்கிறார்.*

***எரேமியா 23:23-24,***

> *23நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> ***24யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ*** *என்று கர்த்தர் சொல்லுகிறார்;* ***நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.***

*கர்த்தர் இந்த பிரபஞ்சத்தில் எங்கும் வியாபித்திருக்கிறார். ஆகவே கர்த்தர் பிரபஞ்சத்தில் எங்கும் இருக்கிறார் என்று சொல்வதை விட இந்த பிரபஞ்சம் கர்த்தருடைய கையில் இருக்கிறது என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்!*

*கர்த்தர் சகல வியாபி என்று நாம் புரிந்துகொள்ளவில்லை என்றால், அவர் நம்மோடு ஆழமாக தொடர்புகொள்ள விரும்புகிறார் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியாது.*

*பழைய ஏற்பாடு நமக்கு இயேசுவை* ***இம்மானுவேல்*** *என்று அறிமுகப்படுத்துகிறது* ***ஏசாயா 7:14****.*

> *ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.*

*இதன் பொருள் கர்த்தர் நம்மோடு இருக்கிறார்!!*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*கர்த்தர் நம்மை படைத்ததின் காரணம் அவர் நம்மோடு நெருங்கிய உறவு கொள்ள வேண்டும் என்பதே. நாம் அவரோடு இருக்க வேண்டும் என்று விரும்புவதைவிட அதிகமாக அவரே நம்மோடு இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். கர்த்தர் படைத்த அனைத்திலும் அவர் மனிதனை மாத்திரமே தம்முடைய சாயலாக படைத்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.*

> ***யோவான் 17:24,*** *"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை* ***நீர் எனக்குத் தந்தவர்கள்*** *காணும்படியாக,* ***நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்****.*

> ***அப்போஸ்தலர் 17:27,*** *கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்;* ***அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே****.*

## உலகளாவிய பிரசன்னம் மற்றும் வெளிபடுத்தப்பட்ட பிரசன்னம்

### *Universal Presence and Manifested presence*

*கர்த்தர் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறார்!*

***யோவான் 4:20-23,***

> *எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்.*

> *21அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது.*

> *22நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*23உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.*

*ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் அல்ல கர்த்தர் எல்லா இடங்களிலும் இருக்கிறார்! ஆனாலும் அவர் நமக்கு பக்கத்திலும் இருக்கிறார்.*

***சங்கீதம் 139:7-12,***

*7உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?*

*8நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.*

*9நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,*

*10அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.*

*11இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்.*

*12உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.*

*கர்த்தர் தமது வெளிப்படுத்தப்பட்ட பிரசன்னத்தை (manifested presence) கூட்டுவதோ குறைப்பதோ கிடையாது மாறாக நாம்தான் அவர் எவ்வளவு பக்கத்தில் நம்மோடு இருக்கிறார் என்று உணர்ந்துகொள்கிறோம்!*

*நான் உங்களை விட்டு சற்று தொலைவில் இருந்தால் நீங்கள் என்னை பக்கத்தில் வரும்படி கெஞ்சலாம் கதறலாம் ஆனால், நான் உங்களுக்கு அருகில் உங்களோடு நிற்கும்போது என்னை நெருங்கி வரும்படி நீங்கள் கதறி அழுது அழைக்க முடியாது.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*நீங்கள் கேட்க வேண்டிய ஒன்றே ஒன்று என்னை நான் இன்னும் அதிகமாய் வெளிப்படுத்த வேண்டும் என்பதே.*

*அதேபோல இப்பிரபஞ்சத்தின் கர்த்தர் நமக்குள் வாசம்செய்கிறார் அல்லாமலும் அவர் நாம் எதிர்பார்ப்பதைவிட நமக்கு பக்கத்தில் இருக்கிறார் ஆகையால் நாம் அவருடைய பிரசன்னத்தை உணர வேண்டும்.*

*சில வேளைகளில் நாம் அவருடைய பிரசன்னத்தை உணருவதில்லை ஆனால் அதற்கும் கர்த்தருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.*

***மத்தேயு 28:20,***

> *நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்;* ***இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்*** *என்றார். ஆமென்.*

*ஆகவே நாம் அவர் என்னோடு இருக்கிறார் என்ற புரிதலோடு வாழ வேண்டும். அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறோம் என்ற உணர்வு அவருடைய பிரசன்னத்தின் அனுபவத்திற்குள் நம்மை வழிநடத்துகிறது.*

*பல அனுபவம் மிக்க பொருள்பட பேசும் கிறிஸ்தவர்கள், கர்த்தர் பரிசுத்த அவியானவராய் நம்மோடு இருக்கிறார் என்று விசுவாசித்தாலும், அவர் தங்களோடு இல்லாததுபோலவே வாழ்கின்றனர்.*

*இந்த உண்மையை உங்கள் இருதயத்தில் பதிய வைக்கும்போது உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை நடையில் இது ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திவிடும், உங்கள் வாழ்க்கையை உருமாற்றிவிடும்.*

*அவருடைய பிரசன்னத்தின் வெளிப்பாடு நம்முடைய வாழ்வில் கண்டிப்பாக அவசியம், பொதுவாக மாத்திரமல்ல குறிப்பிட்ட தருணங்களிலும்கூட. இது நம் உள்ளத்திற்கு தேவையான ஒரு வல்லமையான உண்மை. இந்த உண்மையை நாம் ஆழமாக உணரும்போது பல பாடுகளும் போராட்டங்களும் சுலபமாக தீருகின்றது.*

*குறிப்பு:*

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

***அவருடைய பிரசன்னம் நம்மோடு இருப்பதை உணர்த்தும் முக்கிய காரணிகள்!***

***Key elements in Understand that His presence is with you, Always!***

1. ***அவர் என்னோடு இருக்கிறார், எப்போதும் - He is with me, Always***

***சங்கீதம் 16:8,***

> *கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; **அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.***

***சங்கீதம் 73:23,***

> *ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்.*

*கர்த்தர் பரலோகத்தில் வாசம்செய்கிறார் என்பது வேதாகம உண்மை **(2 நாளாகமம் 20:6 மற்றும் மத்தேயு 6:9)** ஆனால் அது உண்மையின் ஒரு பக்கம் மாத்திரமே. கர்த்தர் நமக்குள்ளும் வாசம்செய்கிறார், நம்மோடும் வாசம்செய்கிறார்.*

*கர்த்தர் பரலோகத்தில் இருக்கிறார் உங்கள் சத்தத்தை உயர்த்தினால் மாத்திரமே அவரால் கேட்க முடியும் என்று எண்ணுவதை முதலில் நிறுத்துங்கள். அவர் உங்களுக்கு பக்கத்தில் இருக்கிறார் என்று புரிந்துகொள்ளும்போது அவரோடு நாம் உரையாடும் விதம் தலைகீழாக மாறிவிடுகிறது.*

*ஒரு நிமிடம் உங்கள் அனுதின அலுவல்களை குறித்துவையுங்கள், இயேசு எல்லா அலுவல்களிலும் உங்களோடு இருக்கிறார்.*

> ***நீங்கள் நடக்கும்போதும்***
>
> ***நீங்கள் பணிக்கு செல்லும்போதும்***
>
> ***நீங்கள் பனி செய்யும்போதும்***
>
> ***நீங்கள் சாப்பிடும்போதும்***
>
> ***நீங்கள் பிறரோடு உரையாடும்போதும்***

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*நீங்கள் தூங்கும்போதும்*

*நீங்கள் விழிக்கும்போதும்*

*நீங்கள் ஊழியம் செய்யும்போதும் மற்றும்*

*நீங்கள் எந்த வேலை செய்தாலும்.*

*இதை உணரும்போது நீங்கள் நன்றிசெலுத்தும் ஜெபத்தை எறேடுப்பதை காண்பீர்கள்.*

*நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து ஒளிந்துகொள்ள முடியாது ஆகவே கர்த்தர் எல்லா இடத்திலும் இருக்கிறார் சகல ஞானியாக (Omniscient) எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

***சங்கீதம் 139:7-8,***

*7உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?*

*8நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.*

*ஆகவே, நமது ஆண்டவரை நமக்கு முன்னிறுத்துவோம்! அவரை விட்டு மறைந்துகொள்ள தேவையில்லை மாறாக அவரோடு வாழ ஆர்வமுடன் இருக்க வேண்டும்.*

***சங்கீதம் 16: 8-9,***

*8**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்;** அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.*

*9ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் **நம்பிக்கையோடே தங்கியிருக்கும்**.*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

### 2. கர்த்தருடைய கண்நோக்கத்தில் இருப்பது நானே! அவர் களிகூர்ந்து என்னை கண்நோக்குகிறார்!! - *I am the focus on Gods sight! Watches me with pleasure!!*

***சங்கீதம் 33:18,***

*தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்,*

***2 நாளாகமம் 16:9,***

*தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்."*

***சங்கீதம் 149:4,***

*கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.*

***சங்கீதம் 45:11,***

*அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்.*

***சங்கீதம் 33:14,***

*தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து பூமியின் குடிகள் எல்லார்மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார்;*

***நீதிமொழிகள் 15:3,***

*கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது.*

குறிப்பு:

### 3. **அவருடைய பிரசன்னமும் அவர் நம்மேல் வைத்திருக்கும் வைராக்கியமும் ஒன்றோடொன்று ஒத்து போகும் -** *His presence and His jealousy for you go hand in hand!*

*கர்த்தர் அன்பாக நம்மேல் நோக்கமாயிருக்கிறார் என்பது மாத்திரமல்ல நம்முடைய இதயத்தை வெல்லும் நோக்கத்தில் நமது எல்லா செயல்பாடுகளிலும் அவர் சம்பந்தப்பட விரும்புகிறார்.*

*எப்படி காதல்வயப்பட்ட இருவர் ஒருவரோடு ஒருவர் நேரம் செலவழிக்கவும் ஒருவருடைய பிரசன்னத்தில் ஒருவர் இருக்கவும் விரும்புகிறார்களோ அதேபோல கர்த்தரும் உங்களோடு இருந்து உங்களை தமக்காக சம்பாதிக்க விரும்புகிறார்.*

***உபாகமம் 4:24,***

> *உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்.*

***சகரியா 8:2,***

> *நான் சீயோனுக்காக கடும் வைராக்கியங்கொண்டேன்; அதற்காக மகா உக்கிரமான வைராக்கியங்கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*கர்த்தர் சும்மாக அமர்ந்துகொண்டு ஏதோ உதவியற்றவர்போல உங்களை பார்த்துக்கொண்டிருக்கவில்லை; ஆனால் நீங்கள் போக வேண்டிய இடத்திற்கு உங்களை அழைத்து செல்ல திரைமறைவில் காரியங்களை செய்கிறார். அவருடைய பிரசன்னத்தின் இந்த உணருதலோடு நீங்கள் வாழும்போது உங்கள் கண்கள் திறக்கப்பட்டு நீங்கள் உணராதபோதும் அவர் எவ்வளவு தீவிரமாக உங்களுக்காக காரியங்களை செய்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடியும்.*

*கர்த்தர் நம்மேல் ஆர்வமும் வைராக்கிய அன்பும் வைத்திருக்கிறபடியால் நம்முடைய கண்களை ந,ம்மை விட்டு நீக்க கூடாமலும் நம்மோடு இருப்பதை தவற விட மனதில்லாதவருமாய் இருக்கிறார். நம்மை உண்டாக்கினதின் நோக்கம் இதுவே; அவருடைய நோக்கமும் விருப்பமும் நமக்கு நித்திய ஜீவனை அளிக்க வேண்டும்*

குறிப்பு*:*

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

என்பதே. அவர் நம்மை எவ்வளவாய் விரும்புகிறார் என்றால், நம்மோடு தனது அனைத்து நேரத்தையும் செலவிட விரும்புகிறார்.

### ***அவருடைய பிரசன்னத்தில் வாழ நடைமுறைகள் - Practical steps to be in His presence***

1. ***நன்றி மனப்பான்மை: அவருக்கு நன்றி செலுத்துதல் - Attitude of Gratitude: Thanking Him***

*கர்த்தருக்கு நாம் நன்றி செலுத்தும்போது நமது சுற்று சூழல்களையும் நம் வாழ்வையும் குறித்த புரிதலும், கர்த்தர் எல்லா காரியங்களிலும் எவ்வளவு நல்லவராய் இருக்கிறார் என்றும் நமக்கு தெரிய வருகிறது.*

*இவைகளை குறித்து நன்றி செலுத்த ஆரம்பியுங்கள்:*

***நீங்கள் ஜீவனோடு இருப்பதற்காக***

***உங்களால் பார்க்க முடிவதற்காக***

***உங்களால் கேட்க முடிவதற்காக***

***உங்களால் பேச முடிவதற்காக***

***உங்களால் சாப்பிட முடிவதற்காக***

***உங்களால் நடக்க முடிவதற்காக***

***உங்களால் நிற்க முடிவதற்காக***

***உங்களால் கேட்க முடிவதற்காக***

*நல்ல ஞானத்தோடு இருப்பதற்காக … இன்னும் பல …*

*கர்த்தர் மிகவும் நல்லவர் என்றும் அவர் உங்கள் வாழ்வில் எவ்வளவு பெரியவர் என்றும் உங்களுக்கு உடனே தெரியவரும்.*

*இரண்டாவதாக உங்கள் சந்தேகங்கள் யாவும் மறைய தொடங்கும்*

*குறிப்பு:*

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*மூன்றாவதாக அவருக்கு நன்றி செலுத்துகிறதினாலே அவருடைய சித்தத்தை நிறைவு செய்வீர்கள்.*

***1 தெசலோனிக்கேயர் 5:18,***

> *எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.*

### *2. அவருடைய வார்த்தையை தியானித்தல் - Mediate His word*

*ஆண்டவருடைய வார்த்தையை வாசித்தாலும் தியானித்தலும் மாத்திரமல்ல எப்பொழுதும் அவருடைய வார்த்தையை மனதிலே மென்றுகொண்டு இருக்க வேண்டும். வேதத்தை பசி தாகமுள்ளவனைப்போல் வாசிக்கும்போது அதை தியானிக்கவும் எதுவாயிருக்கும்.*

*ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் – வேதாகமம் ஒரு புத்தகம் மாத்திரம் அல்ல அது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் பரிசுத்த ஆவியின் அதிகாரத்தினாலும் ஆண்டவர் நமக்கு எழுதிய காதல் கடிதமும்கூட.*

*சாதாரண புத்தகங்கள் வாசிப்பதற்கும் வேதாகமம் வாசிப்பதற்கும் உள்ள ஒரு மிகப்பெரிய வித்தியாசம், வேதாகமத்தை வாசிக்கும்போது அதை எழுதியவர் உங்களோடு இருக்கிறார். ஜீவனுள்ள வார்த்தைகள்! செயல்படும் வார்த்தைகள்!!*

***எபிரேயர் 4:12,***

> *தேவனுடைய வார்த்தையானது **ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்,** இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.*

*ஆகவே ஆண்டவருடைய வார்த்தையை தியானிக்கும்போது கர்த்தரை பற்றியும் அவருடைய பிரசன்னத்தை பற்றியும் வெளிப்பாடுகளை நீங்கள் பெறுவீர்கள்.*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

### *3. ஜெபம் - Prayer*

***A. W. Tozer**, “**Pursuit of Man**” என்கிற அவரது புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார், “ஜெபம் அர்த்தமற்ற தன்மையை இழந்து அங்கு இருப்பவரிடம் ஒரு இனிமையான சம்பாஷணையாக மாறுகிறது”.*

*இந்த புரிதலோடு நீங்கள் கர்த்தரோடு தனிமையில் நேரம் செலவிட வேண்டும் என்பதை இதற்குமேல் அதிகமாக வற்புறுத்த முடியாது.*

*ஆண்டவரோடு தனிமையில் தரமான நேரத்தை செலவிட தீவிரமாய் இருக்க வேண்டும், காதலர்கள் ஒருவரோடு ஒருவர் நேரம் செலவிடுவதைப்போல.*

*அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறபடி:*

***2 கொரிந்தியர் 11:2***

> *நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.*

*நீங்கள் உங்கள் மனைவிக்கு / கணவனுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்து திருமண நாளுக்காக காத்திருந்ததை கற்பனை செய்து பாருங்கள், எவ்வளவு ஆவலாக எதிர்பார்ப்புகளுடனும் அவரை சில நிமிடங்கள் பார்ப்பதற்கும் வாஞ்சித்திருப்பீர்கள்; அதுபோலவே நீங்கள் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமானவருக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிரீர்கள். ஆகவே அவர்மேல் அந்த அன்பிலும் பாசத்திலும் ஜெபிப்போம்.*

*குறிப்பு:*

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

**குறிப்புகள்**

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

குறிப்பு:

# *3.* பரிசுத்த ஆவியானவரின் மூன்று பரிமாணங்கள்

*இந்த பாடத்தில் பரிசுத்த ஆவியானவரின் மூன்று பரிமாணங்களை குறித்து பார்க்கப்போகிறோம்.*

**ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார்**

**ஆவியானவர் உங்களோடு இருக்கிறார்**

**ஆவியானவர் உங்கள் மேல் இருக்கிறார்**

## ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார்

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தெளிவாக கூறிய காரியம் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வந்து வாசம்செய்வார்! என்றென்றும்!!*

***யோவான் 14:17,***

> *உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

*இயேசு குறிப்பிட்ட காரியம், இந்த நாட்கள் வருமென்று பழைய ஏற்பாட்டில் பல நூறு வருடங்களுக்கு முன்னமே தீர்க்கதரிசமாக உரைக்கப்பட்டிருந்தன.*

***எசேக்கியல் 36:26-27,***

> *26உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.*
>
> *27உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***எரேமியா 31:31-34,***

> *31இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.*
>
> *32நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> *33அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
>
> *34இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.*

*பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடைய இருதயத்துக்குள் வாசம் செய்கிறார் என்று இந்த கடிதம் நமக்கு தெளிவுபடுத்துகிறது.*

***1 கொரிந்தியர் 3:16,***

> *நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், **தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும்** அறியாதிருக்கிறீர்களா?*

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

***1 கொரிந்தியர் 6:19,***

*உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் **உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய** ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*

***2 தீமோத்தேயு 1:14,***

*உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை **நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே** காத்துக்கொள்.*

***ரோமர் 8:9,***

***தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்,** நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.*

***1 யோவான் 2:27,***

*நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் **உங்களில் நிலைத்திருக்கிறது**, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*

*ஏனென்றால், பரிசுத்த ஆவியானவரின் துணையின்றி ஒருவனும் இயேசுவே ஆண்டவரென்று கூற முடியாது.*

***1 கொரிந்தியர் 12:3,***

*ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், **பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும்**, உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.*

*குறிப்பு:*

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

*பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார் என்பது நம்முடைய இரட்சிப்பின் உறுதி (assurance). பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்செய்கிறார், அவரிடம் நாம் அனுதினமும் கற்றுக்கொள்ள முடியும், நம் வாழ்வின் ஒவ்வொரு நாளும் அவரோடு சேர்ந்து நடக்க முடியும்.*

*பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார் என்பது நம்முடைய இரட்சிப்பை பற்றிக்கொள்வதன் உத்திரவாதம்.*

***எபேசியர் 1:13-14***

> *13நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.*
>
> *14அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.*

*சரியான அஸ்திபாரத்தில் இந்த இறையியல் கருத்தை காட்டும்படியாக பின்வரும் குறிப்புகளை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.*

1. ***இயேசுவை கர்த்தரென்றும் இரட்சகர்என்றும் ஏற்றுக்கொண்ட எந்த கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டுவிட்டன் <u>ஆனால்</u>, அற்புதங்கள் செய்யவும் குணமாக்கவும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெறவில்லை***

2. ***இயேசுவை ஆண்டவர் என்று ஏற்றுக்கொண்டு அவரை பெற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வருகிறார். <u>ஆனால்</u>, ஆவியின் வரங்கள் கர்த்தர் நியமிக்கிறபடி பின்னர் நமக்கு அருளப்படுகின்றன.***

*குறிப்பு:*

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

| ஆவியானவரின் பனி | வசன குறிப்பு |
|---|---|
| நம்மில் வாசம்செயகிறார் | எபேசியர் 5:18 மற்றும் 1 கொரிந்தியர் 6:19 |
| நம்மை வழிநடத்துதல் | ரோமர் 8:14 மற்றும் கலாத்தியர் 5:18 |
| பரிசுத்தப்படுத்துதல் | 2 தெசலோனிக்கேயர் 2:13 |
| கனி கொடுத்தல் | கலாத்தியர் 5:22 |
| தேற்றுதல் | அப்போஸ்தலர் 9:31 |
| அத்தாட்சி அளித்தல் | எபிரெயர் 2:3-4 |
| வல்லமை அளித்தல் | ரோமர் 15:13 மற்றும் எபேசியர் 3:16 |

### பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம்செய்வதால் கிறிஸ்தவ வாழ்வில் பலன்கள்

*1. பரிசுத்த ஆவியானவர் பாவத்தில் மரித்த ஆத்துமாவுக்குள் வந்து அதற்கு புது ஜீவன் அளிக்கிறார்.*

***தீத்து 3:5,***

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்,*

*2. தேவனுடைய புத்திரர், கிறிஸ்துவின் உடன் வாரிசுகள் என்ற நமது உறவை உறுதிப்படுத்துகிறார்.*

***ரோமர் 8:15-17,***

*15அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.*

*16நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*17நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*

*3.* *வேத வசனங்களை புரிந்துகொள்ளவும் அவற்றை நம் அனுதின வாழ்வில் கடைபிடிக்கவும் நமக்கு பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார்.*

***1 கொரிந்தியர் 2:12,***

*நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.*

*4.* *நாம் ஜெபிக்கவும் ஆராயவும் பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார்.*

***ரோமர் 8:26-27,***

*26அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.*

*27ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

*5.* *நமக்குள் வாசம்செய்யும் ஆவியானவர் விசுவாசிகள் பாவம் செய்யும்போது துக்கப்படுகிறார்*

***எபேசியர் 4:30,***

*அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.*

குறிப்பு*:*

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## கர்த்தர் நம்மோடு இருக்கிறார்

*கர்த்தர் எங்கும் நிறைந்தவர் பரலோகத்தையும் பூலோகத்தையும் நிரப்புகிறார் அவரிடமிருந்து நாம் ஒளிந்துகொள்ள முடியாது என்று நாம் ஏற்கனவே தியானித்தோம். அதே நேரத்தில் கர்த்தர் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறார். இது அனைவருக்கும் அவர் கொடுத்த வாக்குத்தத்தம்.*

***யோசுவா 1:9,***

> *நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்"*

*கர்த்தர் பழைய ஏற்பாட்டில் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம், அவர் நம்மோடு கடவுளாக அல்ல மனிதனாக வாசம்செய்வார் என்பது!*

***ஏசாயா 7:14,***

> *ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.*

*அதே தீர்க்கதரிசனம் இயேசு பூமியில் பிறந்தபோது நிறைவேறியது*

***மத்தேயு 1:23,***

> *அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்.*

***ஏசாயா 41:10,***

> *நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

***உபாகமம் 31:6,***

> *"நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்."*

***செப்பனியா 3:17,***

> *உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார் (மகிழ்வுடன் பாடுவார்)*

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு தனது சபைக்கு கொடுத்த கடைசி கட்டளையான மிகப் பெரிய பொறுப்பு (great commission) உடன் எல்லா விசுவாசிகளுக்கும் வாக்குத்தத்தமும் கொடுத்திருக்கிறார்.*

***மத்தேயு 28:20,***

> *நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

***எபிரேயர் 13:5,***

> *நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.*

*கடைசியாக இயேசு சபைகளுக்கு எழுதும்போது, "அவரை வரவேற்கும்போது அவர் வந்து நம்மோடு வாசம்செய்வார்."*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

***வெளிப்படுத்தின விசேஷம் 3:20,***

> *இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.*

*ஆகவே, கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்பது, அவர் எப்போதும் நம்மோடிருக்கிறார் நம்மை விட்டு அவர் பிரியமாட்டார் என்று அவர் நமக்கு கொடுக்கும் உறுதிமொழி .*

*தனது தந்தையோடு நடக்கிற குழந்தை எப்படி நடக்கும்?*

*ஒரு நாயை பார்க்கும்போது அது எப்படி பயப்படும், தனது தந்தையின்கரங்களுக்குள் இருக்கும்போது எப்படி அதை எதிர்கொள்ளும்?*

*எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே! நாம் எந்த நிலையில் இருந்தாலும், அவரை விட்டு எவ்வளவு தூரமாய் போயிருந்தாலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்பது உறுதியானதே!*

## கர்த்தர் நம்மேல் இருக்கிறார்

***லூக்கா 24:49,***

> *என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.''*

*இயேசு தனது உயிர்த்தெழுதலுக்கு பிறகு சீஷர்களிடத்தில், ''வாக்குத்தத்தம் நிறைவேறும்வரை எருசலேமில் தங்கியிருங்கள்'' என்று கட்டளையிட்டார்.*

***அப்போஸ்தலர் 1:8,***

> ***பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது*** *நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.''*

*பெந்தேகொஸ்தே நாள் வந்தபோது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார், அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தார்கள்.*

*குறிப்பு:*

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

*பரிசுத்த ஆவியானவர் நம்மேல் வருவதே இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள் நம் வாழ்வில் நடைபெற வாசலாய் இருக்கிறது. நினைவில் கொள்ளுங்கள் பரிசுத்த ஆவியானவர் தன்மேல் வரும்வரை இயேசு எந்த அற்புதமும் செய்யவில்லை.* ***(யோவான் 1:33 and 2:11)***

*ஆதி திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரின் இந்த இரண்டு பரிமாணங்களையும் அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் இருந்து பார்ப்போம்.*

***சமாரிய சபை***

***அப்போஸ்தலர் 8:4-8,***

> *சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.*
>
> ***5****அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்கு பிரசங்கித்தான்.*
>
> ***6****பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.*
>
> *7அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.*
>
> ***8****அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.*

*பிலிப்பு சமாரியாவுக்கு சென்று சுவிசேஷம் உரைத்தபோது அதை ஜனங்கள் ஏற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியில் நிறைந்திருந்தார்கள்.*

*அப்போஸ்தலர்கள் இந்த செய்தியை கேள்விப்பட்டபோது பரிசுத்த ஆவியை அவர்கள் பெறும்படி பேதுருவையும் யாக்கோபையும் அவர்களிடத்தில் அனுப்பினார்கள்.*

குறிப்பு:

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

***அப்போஸ்தலர் 8:14-17***

*14சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.*

*15இவர்கள் வந்தபொழுது அவர்களிலொருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,*

*16அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி,*

*17அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.*

*அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்த போது அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தார்கள்.*

***எபேசு சபை***

***அப்போஸ்தலர் 19: 1-6***

*1அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:*

*2நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.*

*3அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.*

குறிப்பு:

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

*4அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.*

*5அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*6அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

இங்கும் சமாரிய சபையைபோல் அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷம் அறிவித்தபோது ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் பிறகு, பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது அந்நிய பாஷைகளை பேசும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் இறங்கினார் .

**கொர்நேலியு-வின் வீடு**

***அப்போஸ்தலர் 10:1-8***

*1இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்.*

*2அவன் தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்.*

*3பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணிநேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு,*

*4அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன, என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.*

குறிப்பு:

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

*5இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி.*

*6அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்.*

*7கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டு பேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து,*

*8எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, அவர்களை யோப்பா பட்டணத்துக்கு அனுப்பினான்.*

பேதுரு கர்த்தரிடத்திலிருந்து பெற்ற தரிசனத்தின்படி அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தான் ***(அப்போஸ்தலர் 10:9-16)***. அங்கு அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தான் ***(அப்போஸ்தலர் 10:34-43)***

***அப்போஸ்தலர் 10: 44-48,***

*44இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.*

*45அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும்,*

*46பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்.*

*47அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதாபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*48. கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.*

பேதுரு பேசிக்கொண்டிருக்கிற வேளையிலே வார்த்தையை ஏற்றுக்கொண்டவர்கள்மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார், அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

*பெந்தேகொஸ்தே நாளைப்பற்றி சற்று ஆழமாக பாப்போம்!*

***அப்போஸ்தலர் 2 (அதிகாரம் முழுவதும்)***

*பேதுருவின் முதல் பிரசங்கம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்து இருந்தது, அநேகர் குத்தப்பட்டார்கள்* ***(அப்போஸ்தலர் 2:14-39).***

*பேதுரு அவர்களை மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்படி கட்டளையிட்டார்.*

***அப்போஸ்தலர் 2:38-39,***

*38பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

*39வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;*

*இந்த வாக்குத்தத்தம் அங்கு இருந்தவர்களுக்கு மாத்திரம் அல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை கூப்பிடுகிற நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் என்று பேதுரு கூறுகிறார்.*

*ஆகவே இந்த வசனங்களை நாம் உற்று நோக்கும்போது பரிசுத்த ஆவியானவரோடு இரண்டு தனிப்பட்ட அனுபவங்களை பார்க்க முடிகிறது.*

*குறிப்பு:*

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

____________________________________________________________________

1. *வெளிப்புறமாக, பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நம்மை முழுவதும் கவர்ந்துகொண்டு அவருடைய பிரசன்னத்திற்குள் நம்மை ஆழ்த்துகிறது. உள்ளாக, விசுவாசிகள் அவருடைய பிரசன்னத்தையும் குடிநீரைப்போன்று அவருடைய வல்லமையையும் ஏற்றுக்கொள்கிறார்கள், அது அவர்களிடமிருந்து ஊற்றெடுத்து புறப்பட்டு நதிபோல பாய்ந்தோடுகிறது.*

2. *ஒவ்வொரு தருணத்திலும் தெளிவாக எடுத்துக்காட்டும்படி பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் அக்கினி நாவுகளாகவும், தீர்க்கதரிசனங்களாகவும், ஆராதனையாகவும் உலகிற்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த அனைத்தில் பொதுவாக இருப்பது ஒன்று, நாவு!*

*கீழ்க்கண்ட தவறான புரிதலை களைய விரும்புகிறேன்.*

*அந்நிய பாஷைகளில் பேசவில்லையென்றும் அல்லது ஆவியானவரின் வெளிப்பாடு உங்களில் இல்லை என்றும் கூறி உங்களிடம் பரிசுத்த ஆவியானவர் இல்லை என்று முடிவு செய்கிறார்கள். இது தவறான காரியம்.*

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பாவ மன்னிப்பு பெற்ற அனைவரும் கர்த்தருடைய ஆவியினால் பிறந்திருக்கிறார்கள்.*

***யோவான் 3:3 &5***

> *3இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*
>
> *5இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.*

***தீத்து 3:5***

> *5நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*

*குறிப்பு:*

_______________

_______________

_______________

_______________

_______________

***1 கொரிந்தியர் 12:3***

> *3ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.*

*பரிசுத்த ஆவியானவர் நித்திய வாழ்வை நமது ஆவிக்கு நமது பிறப்பிலே அளித்திருக்கிறார். கர்த்தருடைய வாழ்வு உங்களுக்குள் இருக்கும்போது கர்த்தருடைய ஆவியானவரும் உங்களுக்குள் இருக்கிறார் ஏனெனில் கர்த்தர் எங்கும் நிறைந்திருக்கிறார். ஆகவே, இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிற யாவரும் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டதுடன் நித்தியா வாழ்வுக்கென்று முத்தரிக்கப்பட்டார்கள்.*

## முடிவுரை

*பரிசுத்த ஆவியானவர் சபைக்கென்றும் அவருடைய பிள்ளைகளுக்கென்றும் பிதாவாகிய தேவனுடைய வாக்குத்தத்தமானவர்.*

***லூக்கா 24:49***

> *அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்.*

***அப்போஸ்தலர் 1:4; 2:39;***

> *அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.*

*குறிப்பு:*

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

***கலாத்தியர் 3:13,14***

> *13மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*
>
> *14ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.*

*மிகவும் அன்பான தேவன் தமதுபிள்ளைகளுக்கு சிறந்த பரிசை தேர்ந்தெடுத்திருக்கிறார். நினைவில் கொள்ளவும், பரிசுத்த ஆவியானவர் சீக்கிரமாய் வரும்படி, இயேசு தாம் சீக்கிரமாய் பரலோகத்திற்கு போக வாஞ்சித்தார்.*

***யோவான் 16:7***

> *நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.*

*பரிசுத்த ஆவியானவரை நமக்கு அளிப்பதினாலே நம்மை மகா பெரிய காரியங்களுக்கு அறிமுகப்படுத்துகிறார், அவரோடு இனிது செயல்பட கற்றுக்கொள்ளும்போது அவரும் நம்முடைய வாழ்வில் செயல்படுகிறார் என்கிற பெரும் பாக்கியம் நமக்கு உண்டு.*

*பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார், நமக்கு உதவி செய்ய தயாராக, நம்மை கிருபையிலும் வாழ்விலும் வழிநடத்தவும் தயாராக இருக்கிறார்.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**குறிப்புகள்**

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

குறிப்பு:

## *4. பரிசுத்த ஆவியானவரின் பணிகள்*

***நீங்கள் கர்த்தருக்குள் நீதிமான்கள்***

***யோவான் 16:7-11,***

*7நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.*

*8அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.*

*9அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,*

*10நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,*

*11இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.*

*கீழ்கண்ட முத்தரப்பட்ட மக்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் முத்தரப்பட்ட தனித்துவமான பணிகள்:*

***விசுவாசிகளுக்கு*** *– பரிசுத்த ஆவியானவர் கர்த்தரின் நீதியைக்குறித்து மீண்டும் மீண்டும் உணர்த்துவார்*

***அவிசுவாசிகளுக்கு*** *– ஆண்டவரை விசுவாசிக்காதபடியால் அவர்கள் பாவிகள் என்று உணர்த்துவார்*

***சாத்தனுக்கு*** *– அவன் நியாந்தீர்க்கப்படுவான்*

*குறிப்பு:*

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

*ஆக, பரிசுத்த ஆவியானவர் தங்களை குற்றப்படுத்தினார் என்று பலர் சொல்வது எப்படி?*

*ஜனங்கள் தங்கள் மனசாட்சிக்கும் பரிசுத்த ஆவியானவரின் பாஷைக்கும் வித்தியாசம் அறிந்துகொள்வது இல்லை.*

***யோவான் 8:1-12***

*1 இயேசு ஒலிவமலைக்குப் போனார்.*

*2மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்.*

*3அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி:*

*4போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்.*

*5இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.*

*6அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்.*

*7அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,*

*8 அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*9அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.*

*10இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்.*

*11 அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.*

*12மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.*

*இந்த சம்பவத்தில், பாவம் இல்லாத ஒருவனை முதலில் கல்லெறியும்படி இயேசு கூறுகிறார். பின்னர், அவர்கள் எல்லாரும் அங்கிருந்து சென்றுவிடுகிறார்கள்.*

***யோவான் 8:9,***

*அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்..*

***ரோமர் 2:15,***

*அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்க்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.*

*இந்த இடத்தில், அவர்களுடைய மனசாட்சியின் நிமித்தமாய் அவர்கள் சென்றுவிட்டார்கள். ஆக, நாம் பாவம் செய்யும்போதெல்லாம் நமது மனசாட்சி*

*குறிப்பு:*

*நம்மை குற்றப்படுத்துகிறது அதே நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாய் இருக்கிறோம் என்று உணர்த்துகிறார்.*

*புதிய நியாயப்பிரமாணத்தை சற்று உற்று நோக்குவோமாகில் இதை தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.*

***எபிரேயர் 8:8-13***

> 8 *அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி:*
> *இதோ, **கர்த்தர்** சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும்*
> *யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம்*
> *வருகிறது.* 9 *அவர்களுடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து*
> *கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்தநாளிலே*
> *அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை;*
> *அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும்*
> *அவர்களைப் புறக்கணித்தேன் என்று **கர்த்தர்** சொல்லுகிறார்.* 10 *அந்த*
> *நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும்*
> *உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய*
> *மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்;*
> *நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.*
> 11 *அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும்*
> *என்னை அறிவார்கள்; ஆகையால், **கர்த்தரை** அறிந்துகொள் என்று ஒருவன் தன்*
> *அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.*
> 12 *ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து,*
> *அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்*
> *என்று **கர்த்தர்** சொல்லுகிறார்.* 13 *புது உடன்படிக்கை என்று அவர்*
> *சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும்*
> *நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது.*

குறிப்பு:

### *பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்*

***யோவான் 14:26,***

> *என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.*

*பரிசுத்த ஆவியானவர் நமக்கு சகலத்தையும் கற்றுக்கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துவார். அதுமட்டுமல்லாமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுத்த அனைத்தையும் அவர் நமக்கு நினைப்பூட்டுகிறார்.*

***யோவான் 14:17,***

> *உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

### *பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் ஆவி என்றும் அழைக்கப்படுகிறார்!!*

***யோவான் 16:12-15,***

> *[12]இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். [13]சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். [14]அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். [15]பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.*

*இவை இயேசு சிலுவையில் அறையப்பட கொண்டுபோகப்படும் முன்னர் , தமது பொது ஊழியத்தை முடித்த பிறகு அவர் சொன்னது.*

*குறிப்பு:*

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

இயேசு சொன்னது – நான் உங்களுக்கு பல காரியங்களை சொல்ல வேண்டியுள்ளது ஆனாலும் என்னால் இப்போது சொல்ல இயலாது.

ஆக, இந்த வாக்கியத்திலிருந்து நாம் புரிந்துகொள்ளக்கூடிய காரியம், இயேசு சில காரியங்களை அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்காமலே இவ்வுலகத்தை விட்டு சென்றிருக்கிறார்.

தாம் அறிவிக்காததை பரிசுத்த ஆவியானவர் அறிவிப்பார் என்று இயேசு கூறுகிறார்.

மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியானவர் இவைகளை சொல்லி இயேசுவை மகிமைப்படுத்துவார்.

பிதாவுக்கு உண்டானவைகள் யாவும் இயேசு கிறிஸ்துவுக்கு உண்டானவைகள்; பரிசுத்த ஆவியானவர் அவற்றை எடுத்து நமக்கு வெளிப்படுத்துவார்.

ஆக, பிதாவிடமிருந்தும் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அவர்கள் சத்தத்தை கேட்க விரும்பினால், பரிசுத்த ஆவியானவர் கூறுவதை கேட்க வேண்டும்.

***1 கொரிந்தியர் 2:9-16,***

> ***9***எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; ***10*****நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்;** அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். ***11***மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். ***12***நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். ***13***அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம். ***14***ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள்

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். **15**ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். **16**கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.*

*அப்போஸ்தலனாகிய பவுல் பழைய ஏற்பட்டு தீர்க்கதரிசனமாகிய ஏசாயா தீர்க்கதரிசனத்திலிருந்து எடுத்துக்கூறி, கர்த்தர் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஏற்படுத்தினதை பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை என்கிறார்*

*ஆனால், கர்த்தர் புதிய நியாயப்பிரமானத்தில் வாழ்கிற நமக்கு அதை வெளிப்படுத்தியிருக்கிறார். பவுல் மேலும் அவர்களுக்கு தெளிவுபடுத்துகிற காரியம், மனுஷனுடைய ஆவி மனுஷனுக்கடுத்தவைகளை அறியும் ஆனால், தேவனுடைய ஆவி தேவனுக்கடுத்தவைகளை அறிந்து அவற்றை நமக்கு வெளிப்படுத்தும்.*

*நாம் கிறிஸ்துவினுடைய இருதயத்தை பெற்றிருக்கிறோம் என்று கூறி நிறைவு செய்கிற இந்த வேதவாக்கியத்தை மிகவும் நேசிக்கிறேன்.*

*நமக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்பட்டுள்ளது, அந்த அபிஷேகம் நமக்கு இவை அனைத்தையும் தெளிவாக கற்றுக்கொடுக்கிறது.*

***1 யோவான் 2:20 & 27,***

*__20__நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள். **27**நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*

*நாம் தேவனுடைய புத்திரராய் இருக்கிறோம் என்று பரிசுத்த ஆவியானவர் நமக்காக சாட்சிகொடுத்து அதை உறுதிப்படுத்துகிறார்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***ரோமர் 8:13-17,***

> *13மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். 14மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். 15அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். 16நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். 17நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*

***கலாத்தியர் 4:4-7,***

> *4நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, 5காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். 6மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். 7ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.*

***எபேசியர் 1:4-5,***

> *4தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, 5பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,*

*பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களை காக்கும்படியாக கர்த்தர் தத்தேடுத்தலை பயன்படுத்தினார்.*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

*கர்த்தர் மோசேயை பார்வோன் தனது மகனாக தத்தெடுக்கும்படி செய்தார்.*

*எஸ்தர், மோர்தேகாயின் குடும்பத்தால் தத்தெடுக்கப்பட்டு இஸ்ரவேல் ஜனங்களை காக்கப்படும்படி கர்த்தர் செய்தார்.*

*தாவீது மேவிபோசேத் என்ற யோனத்தானின் குமாரனை தத்தெடுத்து சுதந்திரமாகவும் மிகுதியுடனும் வாழ்ந்தான்.*

*அதே போல நாம் வழிதப்பினோரை காக்கும்படியாக, கர்த்தர் நம்மை அவருடைய குடும்பத்தில் தமது பிள்ளைகளாக தத்தெடுத்திருக்கிறார்.*

*இவற்றை தவிர பரிசுத்த ஆவியானவரின் பணிகளை நாம் பல வழிகளில் பார்க்க முடியும், ஜெபத்தில் நமக்கு உதவுவதன் மூலம், நம் பலவீனத்தில், நமது வழிபாட்டில் ஆராதனையில் நம்மை வழிநடத்தி கர்த்தரின் சமாதானத்தை நமக்கு அருளுகிறார்; இவை அனைத்தும் ஒரு விசுவாசியின் வாழ்வில் அடிப்படை நோக்கங்கள்.*

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**குறிப்புகள்**

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

குறிப்பு:

# 5. பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அறிந்துகொள்ளுதல்

## உங்களுக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அறிந்துகொள்ளுதல்

### பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் என்ன?

*நம்மில் பலர் **1 கொரிந்தியர் 12:4-10**-ல் சொல்லப்பட்ட வரங்களை அறிந்திருப்போம். ஆனால் அவற்றையும்விட இன்னும் பல வரங்கள் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*உங்களுக்காக இங்கு அந்த வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன; அவற்றையும் தாண்டி இன்னும் பல வரங்களையும் நீங்கள் காண முடியும். அவற்றில் முதல் ஒன்பது வரங்கள் பலரால் அறியப்படுகின்றன.*

### நிர்வகிக்கும் வரம் - Administration

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு பல செயல்களையும் பலதரப்பட்ட ஜனங்களையும் ஒழுங்குபடுத்தி காரியங்களை நடத்துவதே நிர்வகிக்கும் வரம் ஆகும்.*

The gift of administration is the divine strength or ability to organize multiple tasks and groups of people to accomplish these tasks.

***லூக்கா 14:28-30;***

> *[28]உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, [29]அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்: [30]இந்த மனுஷன் கட்டத்தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம்பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ?*

***அப்போஸ்தலர் 6:1-7;***

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*[1]அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். 2அப்பொழுது பன்னிருவரும் சீஷர்கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. 3ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். 4நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.*

*5இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு, 6அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். 7தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.*

***1 கொரிந்தியர் 12:28;***

*தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

## அப்போஸ்தல ஊழிய வரம் - Apostleship

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு புதிய சபைகளையும் ஊழியங்களையும் விதைத்து பராமரித்து பயிர்ச்சியளிப்பதுவே அப்போஸ்தல ஊழியம்.

குறிப்பு:

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

The gift of apostleship is the divine strength or ability to pioneer new churches and ministries through planting, overseeing, and training.

***அப்போஸ்தலர் 15:22-35;***

*22அப்பொழுது தங்களில் சிலரைத் தெரிந்துகொண்டு பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக்கண்டது. அவர்கள் யாரென்றால் சகோதரரில் விசேஷித்தவர்களாகிய பர்சபா என்று மறுபேர்கொண்ட யூதாவும் சீலாவுமே.*

*23இவர்கள் கையில் அவர்கள் எழுதிக்கொடுத்தனுப்பின நிருபமாவது: அப்போஸ்தலரும் மூப்பரும் சகோதரருமாகிய நாங்கள் அந்தியோகியாவிலும் சீரியாவிலும் சிலிசியாவிலும் இருக்கும் புறஜாதியாராகிய சகோதரருக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதிய நிருபம் என்னவென்றால்:*

*24எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,*

*25நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட,*

*26எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது.*

*27அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பியிருக்கிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள்.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*28எவையெனில், விக்கிரகங்களுக்குப்படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே.*

*29அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.*

*30அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தியோகியாவுக்கு வந்து, சபையைக் கூடிவரச்செய்து, நிருபத்தை ஒப்புவித்தார்கள்.*

*31அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள்.*

*32யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்திசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி;*

*33சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பிவிடப்பட்டார்கள்.*

*34ஆகிலும் சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நலமாய்க் கண்டது.*

*35பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள்.*

***1 கொரிந்தியர் 12:2***

*நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே.*

***2 கொரிந்தியர் 12:12***

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே.*

***கலாத்தியர் 2:7-10;***

*7அதுவுமல்லாமல், விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்,*

*8விருத்தசேதனமுள்ள அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு;*

*9எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து,*

*10தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்.*

***எபேசியர் 4:11-14;***

*11மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,*

*12பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,*

*குறிப்பு:*

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

*13அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.*

*14நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,*

### கைவினை கலையின் வரம் - *Craftsmanship*

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு கைவேலைகளை திட்டமிட்டு பல ஊழியங்களுக்காக கட்டுவதே கைவினை கலை வரம்.

The gift of craftsmanship is the divine strength or ability to plan, build, and work with your hands in construction environments to accomplish multiple ministry applications.

***யாத்திராகமம் 30:22 ; யாத்திராகமம் 31:3-11;***

*பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: … …. ..*

*3விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,*

*4இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும்,*

*5மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவஆவியினால் நிரப்பினேன்.*

*6மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபையும் அவனோடே துணையாகக் கூட்டினதுமன்றி, ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன்; நான் உனக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் செய்வார்கள்.*

குறிப்பு:

________________________________________________________________________________

*7ஆசரிப்புக் கூடாரத்தையும் சாட்சிப் பெட்டியையும் அதின்மேலுள்ள கிருபாசனத்தையும், கூடாரத்திலுள்ள சகல பணிமுட்டுகளையும்,*

*8மேஜையையும் அதின் பணிமுட்டுகளையும், சுத்தமான குத்துவிளக்கையும் அதின் சகல கருவிகளையும், தூபபீடத்தையும்,*

*9தகனபலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும்,*

*10ஆராதனை வஸ்திரங்களையும், ஆசாரிய ஊழியம் செய்வதற்கான ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,*

*11அபிஷேக தைலத்தையும், பரிசுத்த ஸ்தலத்துக்குச் சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, அவர்கள் செய்யவேண்டும் என்றார்.*

***2 நாளாகமம் 34:9-13;***

*9அவர்கள் பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவினிடத்தில் வந்து, வாசற்படியைக் காக்கிற லேவியர் மனாசேயிலும் எப்பிராயீமிலும் இஸ்ரவேலில் மீதியானவர்களெல்லாரின் கையிலும் யூதா பென்யமீன் எங்கும் சேர்த்து, எருசலேமுக்குத் திரும்பி தேவனுடைய ஆலயத்திற்குக் கொண்டுவந்த பணத்தை ஒப்புவித்து,*

*10வேலையைச் செய்விக்கும்படி, கர்த்தருடைய ஆலயத்தின் விசாரிப்புக்காரரானவர்களின் கையில் அதைக் கொடுத்தார்கள்; இவர்கள் அதைக் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்துச் சீர்ப்படுத்துகிறதற்கு ஆலயத்தில் வேலைசெய்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள்.*

*11அப்படியே யூதாவின் ராஜாக்கள் கெடுத்துப்போட்ட அறைகளைப் பழுதுபார்க்க வெட்டின கற்களையும், இணைப்புக்கு மரங்களையும், பாவுகிறதற்குப் பலகைகளையும் வாங்கத் தச்சருக்கும் சிற்பாசாரிகளுக்கும் அதைக் கொடுத்தார்கள்.*

குறிப்பு:

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

*12இந்த மனுஷர் வேலையை உண்மையாய்ச் செய்தார்கள்; வேலையை நடத்த மெராரியின் புத்திரரில் யாகாத் ஒபதியா என்னும் லேவியரும், கோகாதியரின் புத்திரரில் சகரியாவும், மெசுல்லாமும் அவர்கள்மேல் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்; இந்த லேவியர் எல்லாரும் கீதவாத்தியங்களை வாசிக்க அறிந்தவர்கள்.*

*13அவர்கள் சுமைகாரரை விசாரிக்கிறவர்களாயும், பற்பல வேலைகளைச் செய்கிறவர்கள் எல்லாரையும் கண்காணிக்கிறவர்களாயும் இருந்தார்கள்; லேவியரில் இன்னும் சிலர் கணக்கரும் மணியகாரரும் வாசற்காவலாளருமாயிருந்தார்கள்.*

***அப்போஸ்தலர் 18:2-3;***

*2யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாவையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான்.*

*3அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி வேலைசெய்துகொண்டுவந்தான்.*

## ***பகுத்தறியும் வரம் – Discernment***

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு ஆவியிலே பொய்யையும், சரியானதும் தவறானதுமான எண்ணங்களை பகுத்தறிதலும், சில தருணங்களில் கிரியை செய்யும் தீய ஆவிகளின் சக்திகளையும் அறிந்துகொள்வதே பகுத்தறிவின் வரம்.*

The gift of discernment is the divine strength or ability to spiritually identify falsehood, to distinguish between right and wrong motives and the spiritual forces at work in situations.

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***மத்தேயு 16:21-23;***

*21அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்.*

*22அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.*

*23அவரோ திரும்பிப் பேதுருவைப்பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.*

***அப்போஸ்தலர் 5:1-11;***

*1அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவன் மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள்.*

*2தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.*

*3பேதுரு அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?*

*4அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.*

*5அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.*

*குறிப்பு:*

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

*6வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்பண்ணினார்கள்*

*7ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள்.*

*8பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.*

*9பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்.*

*10உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம்பண்ணினார்கள்.*

*11சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.*

***அப்போஸ்தலர் 16:16-18;***

*16நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.*

*17அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்.*

*18இப்படி அநேகநாள் செய்துகொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப்புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின்*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.*

***1 கொரிந்தியர் 12:10***

*வேறொருவனுக்கு அற்புதங்களைச்செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

***1 யோவான் 4:1-6;***

*1பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனாலுண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.*

*2தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.*

*3மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.*

*4பிள்ளைகளே, நீங்கள் தேவனாலுண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.*

*5அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.*

*6நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச்*

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*செவிகொடுக்கிறதில்லை; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.*

### ***சுவிசேஷ வரம் - Evangelism***

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு கிறிஸ்துவை அறியாதவர்களை அடுத்த நிலைக்கு எடுத்து சென்று மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாக மாற்றுவதே சுவிசேஷ வரம்.*

The gift of evangelism is the divine strength or ability to help non-Christians take the necessary steps to becoming a born-again Christian.

***அப்போஸ்தலர் 8:5-6;***

*5அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்கு பிரசங்கித்தான்.*

*6பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.*

***அப்போஸ்தலர் 8:26-40;***

*26பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்.*

*27அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து;*

*28ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தான்.*

*29ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்;*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*30அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்.*

*31அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான்.*

*32அவன் வாசித்த வேதவாக்கியமென்னவென்றால்; அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.*

*33அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே.*

*34மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.*

*35அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப்பிரசங்கித்தான்.*

*36இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.*

*37அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி;*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*38இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்.*

*39அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.*

*40பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம் பண்ணி செசரியாவுக்கு வருகிறவரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டுவந்தான்.*

***அப்போஸ்தலர் 14:21***

*அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து,*

***அப்போஸ்தலர் 21:8***

*மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்.*

***எபேசியர் 4:11-14;***

*11மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,*

*12பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*13அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.*

*14நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,*

## உபதேச வரம் - *Exhortation*

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு வேதாகம சத்தியத்திலும், வேதத்தில் எழுதப்பட்ட மற்றும் சொல்லப்பட்ட ஆண்டவருடைய வார்த்தைகளுக்குள் ஜனங்களை தேற்றி வழிநடத்தி அவர்களை செயல்பட செய்வதே உபதேச வரம்.

The gift of exhortation is the divine strength or ability to strengthen, comfort or urge others to action through the written or spoken word and Biblical truth.

***அப்போஸ்தலர் 14:2***

*விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள்.*

***ரோமர் 12:8***

*புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.*

***1 தீமோத்தேயு 4:1***

*ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***எபிரேயர் 10:24-25***

*24மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;*

*25சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*

## ***விசுவாச வரம் - Faith***

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு காணப்படாத, இயற்க்கு அப்பாற்பட்ட செயல்களை வாழ்வின் எல்லா பகுதிகளிலும் கர்த்தரை விசுவாசிப்பதே விசுவாச வரம்*

The gift of faith is the divine strength or ability to believe in God for unseen supernatural results in every arena of life.

***அப்போஸ்தலர் 11:22-24;***

*22எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்.*

*23அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்.*

*24அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.*

***ரோமர் 4:18-21;***

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*18உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.*

*19அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்.*

*20தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல்,*

*21தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.*

***1 கொரிந்தியர் 12:9***

*வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,*

***எபிரேயர் 11(அதிகாரம் முழுவதும்)***

### கொடுக்கும் வரம் - Giving

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு சம்பத்துக்களை சம்பாதித்து தசம பாகமாகவும் காணிக்கைகளாகவும் கர்த்தருடைய ராஜ்ஜிய வருகைக்காக கொடுப்பதே கொடுக்கும் வரம்.*

The gift of giving is the divine strength or ability to produce wealth and to give by tithes and offerings for advancing the Kingdom of God on earth.

***மாற்கு 12:41-44;***

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*41இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்.*

*42ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.*

*43அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப்பெட்டியில் பணம்போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்;*

*44அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.*

***ரோமர் 12:8***

*புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.*

***2 கொரிந்தியர் 8:1-7;***

*1அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.*

*2அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.*

*3மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்.*

குறிப்பு:

____________________________________________________________________________________________________

*4தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்மஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்.*

*5மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.*

*6ஆதலால் தீத்து இந்தத் தர்மகாரியத்தை உங்களிடத்தில் தொடங்கினபடியே, அதை முடிக்கவும் வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டோம்.*

*7அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்.*

***2 கொரிந்தியர் 9:2-7;***

*2உங்கள் மனவிருப்பத்தை அறிந்திருக்கிறேன்; அகாயாவிலுள்ளவர்கள் ஒருவருஷமாக ஆயத்தமாயிருக்கிறார்களென்று நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தேனே; உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு.*

*3அப்படியிருந்தும், உங்களைக்குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தக் காரியத்தில் வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களாயிருப்பதற்கு, இந்தச் சகோதரரை அனுப்பினேன்.*

*4மக்கெதோனியர் என்னுடனேகூட வந்து, உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்டால், இவ்வளவு நிச்சயமாய் உங்களைப் புகழ்ந்ததற்காக, நீங்கள் வெட்கப்படுவீர்களென்று நாங்கள் சொல்லாமல், நாங்களே வெட்கப்படவேண்டியதாயிருக்கும்.*

*5ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தானதர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க்*

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது.*

*6பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.*

*7அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.*

## சுகமளிக்கும் வரங்கள் - *Healing*

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு இடைபட்டு விசுவாசத்திலும், ஜெபத்திலும் கைகளை வைத்தல் மூலமாக உடலிலும், உள்ளத்திலும், ஆவிக்குரிய வியாதிகளையும் குணப்படுத்துவதே சுகமளிக்கும் வரங்கள்.

The gift of healing is the divine strength or ability to act as an intermediary in faith, prayer, and by the laying-on of hands for the healing of physical, mental and spiritual sickness.

***அப்போஸ்தலர் 3:1-10;***

*1ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்.*

*2அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டுவந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, நாடோறும் அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள்.*

*3தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான்.*

குறிப்பு:

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

*4பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள்.*

*5அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான்.*

*6அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;*

*7வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது.*

*8அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.*

*9அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு:*

*10வாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.*

***அப்போஸ்தலர் 9:32-35;***

*32பேதுரு போய் எல்லாரையும் சந்தித்துவருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்.*

*33அங்கே எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான்.*

*34பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான்.*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

*35லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.*

*அப்போஸ்தலர் 28:7-10;*

*7தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர்கொண்டவனுடைய நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீபமாயிருந்தது, அவன் எங்களை ஏற்றுக்கொண்டு, மூன்றுநாள் பட்சமாய் விசாரித்தான்.*

*8புபிலியுவினுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன்மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான்.*

*9இது நடந்தபின்பு, தீவிலே இருந்தமற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள்.*

*10அவர்கள் எங்களுக்கு அநேக மரியாதை செய்து, நாங்கள் கப்பல் ஏறிப்போகிறபோது எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்.*

***1 கொரிந்தியர் 12:9, 28;***

*9வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,*

*28தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

## உதவும் வரம் - *Helps*

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு உடன் ஊழியராய் இருந்து கிறிஸ்தவ ஊழியத்தின் தேவைகளை பிறர் அறியும் முன் தாம் அறிந்து செயல்படுவதே உதவும் வரம்.

குறிப்பு:

_____

_____

_____

_____

_____

The gift of helps is the divine strength or ability to work in a supportive role for the accomplishment of tasks in Christian ministry with the ability to often see the need before others do.

***மாற்கு 15:40-41;***

*40சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின்சென்று, ஊழியஞ்செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்,*

*41அவருடனேகூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள்.*

***அப்போஸ்தலர் 9:3***

*அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது;*

***ரோமர் 16:1-2;***

*1கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொண்டு,*

*2எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவிசெய்யவேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்; அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்.*

***1 கொரிந்தியர் 12:28***

*தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## உபசரிக்கும் வரம் - *Hospitality*

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு வரவேற்கத்தக்க சூழ்நிலையை இல்லத்திலும், அலுவலகத்திலும், சபையிலும் உருவாக்குவதே உபசரிக்கும் ஊழியம்.

The gift of hospitality is the divine strength or ability to create warm, welcoming environments for others in places such as your home, office, or church.

***அப்போஸ்தலர் 16:14-15;***

*14அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.*

*15அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்களென்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்.*

***ரோமர் 12:13***

*பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்.*

***ரோமர் 16:23***

*என்னையும் சபையனைத்தையும் உபசரித்துவருகிற காயு உங்களை வாழ்த்துகிறான். பட்டணத்து உக்கிராணக்காரனாகிய ஏரஸ்தும், சகோதரனாகிய குவர்த்தும் உங்களை வாழ்த்துகிறார்கள்.*

***எபிரேயர் 13:1-2;***

*1சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது.*

*2அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

***1 பேதுரு 4:9***

*முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.*

### ***மன்றாட்டு-ஜெப வரம் - Intercession***

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு பிறரையும், பிற காரியங்களையும், பிற இடங்களையும் ஜெபத்திலே தாங்கி மேலான விளைவுகளை எதிர் நோக்கியிருத்தலே தாங்கும் வரம்.*

The gift of intercession is the divine strength or ability to stand in the gap in prayer for someone, something, or someplace, believing for profound results.

***எபிரேயர் 7:25***

*மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.*

***கொலோசெயர் 1:9-12;***

*9இதினிமித்தம், நாங்கள் அதைக்கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,*

*10சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,*

*11சந்தோஷத்தோடே கூடிய எல்லாப்பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*12ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,*

***கொலோசெயர் 4:12-13;***

*12எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.*

*13இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்.*

***யாக்கோபு 5:14-16;***

*14உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.*

*15அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.*

*16நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.*

## *அறிவை உணர்த்தும் வரம் - Word of Knowledge*

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகள் மூலம் எந்த சந்தர்ப்பங்களிலும் சத்தியத்தை காண்பிப்பது. இது பொதுவாக ஆண்டவருடைய வார்த்தையோடுகூட காணப்படும்.*

*குறிப்பு:*

The gift of knowledge is the divine strength or ability to bring truth to a situation by supernatural revelation. This is often accompanied by a word from God.

***அப்போஸ்தலர் 5:1-11;***

*1அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவன் மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள்.*

*2தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.*

*3பேதுரு அவனை நோக்கி: அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?*

*4அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்னும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.*

*5அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.*

*6வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய் அடக்கம்பண்ணினார்கள்.*

*7ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப்பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள்.*

*8பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.*

*9பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை*

*குறிப்பு:*

*அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்.*

*10உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம்பண்ணினார்கள்.*

*11சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.*

***1 கொரிந்தியர் 12:8***

*எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*

***கொலோசெயர் 2:2-3;***

*2அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாகவேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்.*

*3அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.*

### *தலைமைத்துவ வரம் - Leadership*

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு ஜனங்களை அவர்கள் நிலையிலிருந்து ஒரு பெரிய காரியத்தின் நிமித்தமாகவோ, தரிசனத்தின் நிமித்தமாகவோ அல்லது ஒரு சிந்தனையின் நிமித்தமாகவோ உற்சாகப்படுத்தி வழிநடத்துவதே தலைமைத்துவம்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

The gift of leadership is the divine strength or ability to influence people at their level while directing and focusing them on the big picture, vision, or idea.

***ரோமர் 12:8***

> *புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.*

***1 தீமோத்தேயு 3:1-13;***

> *1கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை.*
>
> *2ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.*
>
> *3அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து,*
>
> *4தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்.*
>
> *5ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?*
>
> *6அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.*

குறிப்பு:

*7அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்.*

*8அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்,*

*9. விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்.*

*10மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்.*

*11அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும் எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும்.*

*12மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும்.*

*13இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.*

***1 தீமோத்தேயு 5:17***

*நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.*

***எபிரேயர் 13:17***

*உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால்,*

குறிப்பு:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

*அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.*

## இரக்கத்தின் வரம் - Mercy

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு எந்த விதத்திலானாலும் கஷ்டப்படுவோர் மேல் கரிசனை கொண்டு அவர்களை தாங்குவதே இரக்கத்தின் வரம்

The gift of mercy is the divine strength or ability to feel empathy and to care for those who are hurting in any way.

***மத்தேயு 9:35-36;***

*35பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.*

*36அவர், திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,*

***மாற்கு 9:41***

*நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர்குடிக்கக்கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

***ரோமர் 12:8***

*புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.*

குறிப்பு:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

*1 தெசலோனிக்கேயர் 5:14*

*மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.*

## அற்புதத்தின் வரம் - Miracles

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு இயற்கையாய் ஏற்படக்கூடிய விளைவுகளை இயற்கைக்கு அப்பாற்பட்ட வழியில் ஜெபத்தோடும், விசுவாசத்தோடும், தெய்வீக தரிசனத்தோடும் மாற்றுவதே அற்புதத்தின் வரம்.

The gift of miracles is the divine strength or ability to alter the natural outcomes of life in a supernatural way through prayer, faith, and divine direction.

***அப்போஸ்தலர் 9:36-42;***

*36யோப்பா பட்டணத்தில் கிரேக்குப்பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்.*

*37அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள்.*

*38யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.*

*39பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்து நின்றார்கள்.*

குறிப்பு:

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

*40பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.*

*41அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்கள் முன் நிறுத்தினான்.*

*42இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.*

***அப்போஸ்தலர் 19:11-12;***

*11பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.*

*12அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.*

***அப்போஸ்தலர் 20:7-12;***

*7வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.*

*8அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது.*

*9அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*10உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான்.*

*11பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டு புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டு, பின்பு புறப்பட்டான்.*

*12அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்.*

***ரோமர் 15:18-19;***

*18புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை;*

*19இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்.*

***1 கொரிந்தியர் 12:10, 28;***

*10வேறொருவனுக்கு அற்புதங்களைச்செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

*28தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

குறிப்பு:

____________________________________________________________________________

### *போதக / மேய்ப்பர் வரம் - Pastor/Shepherd*

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு ஒருவரை பொறுப்பெடுத்து பேணி வளர்ப்பதன் மூலமும், வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை பொருந்தசெய்வதன் மூலமும் அவருடைய தனிப்பட்ட தேவைகளை சந்திப்பதே போதக / மேய்ப்பர் வரம்.*

The gift of pastor/shepherd is the divine strength or ability to care for the personal needs of others by nurturing and mending life issues.

***யோவான் 10:1-18;***

*1மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்.*

*2வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.*

*3வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான்.*

*4அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.*

*5அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.*

*6இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.*

*7ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

குறிப்பு:

_______________________________________________________________________

_______________________________________________________________________

_______________________________________________________________________

_______________________________________________________________________

_______________________________________________________________________

*8எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.*

*9நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.*

*10திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.*

*11நானே நல்ல மேய்ப்பன்: நல்லமேய்ப்பன் ஆடுகளுக்குக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.*

*12மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.*

*13கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்.*

*14நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,*

*15நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.*

*16இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.*

குறிப்பு:

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

*17நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்.*

*18ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.*

***எபேசியர் 4:11-14;***

*11மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,*

*12பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,*

*13அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.*

*14நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்.,*

***1 தீமோத்தேயு 3:1-7;***

*1கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை.*

*2ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*3அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து,*

*4 தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்.*

*5ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?*

*6அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது.*

*7அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்.*

***1 பேதுரு 5:1-3;***

*1உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்:*

*2உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,*

*3சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்.*

## ***தீர்க்கதரிசன வரம் - Prophecy***

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு கர்த்தருடைய சத்தியத்தையும் இதயத்தையும் ஜனங்களுக்கு எடுத்து சொல்லி அவர்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவை சரிப்படுத்தும்படி ஜனங்களை அழைப்பதே தீர்க்கதரிசன வரம்.*

*குறிப்பு:*

The gift of prophecy is the divine strength or ability to communicate God's truth and heart in a way that calls people to a right relationship with God.

***அப்போஸ்தலர் 2:37-40;***

*37இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.*

*38பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

*39வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;*

*40இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான்.*

***அப்போஸ்தலர் 7:51-53;***

*51வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள்.*

*52தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும், அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள்.*

*53தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***அப்போஸ்தலர் 26:24-29;***

*24இவ்விதமாய் அவன் தனக்காக உத்தரவு சொல்லுகையில், பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக்கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான்.*

*25அதற்கு அவன்: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்.*

*26இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார்; ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகப் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல.*

*27அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீரென்று அறிவேன் என்றான்.*

*28அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்.*

*29அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.*

***1 கொரிந்தியர் 14:1-4;***

*1அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.*

*2ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியிலே இரகசியங்களைப்பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*3தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்.*

*4அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.*

***1 தெசலோனிக்கேயர் 1:5***

*எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள்நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே.*

### விசாரிப்பு வரம் - *Service*

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையின் நலனுக்காக சிறிய அல்லது பெரிய பணிகளை செய்வதே விசாரிப்பு வரம்.*

The gift of serving is the divine strength or ability to do small or great tasks in working for the overall good of the body of Christ.

***அப்போஸ்தலர் 6:1-7;***

*1அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.*

*2அப்பொழுது பன்னிருவரும் சீஷர்கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல.*

*3ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*4நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.*

*5இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு,*

*6அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்.*

*7தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.*

***ரோமர் 12:7***

*ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்,*

***கலாத்தியர் 6:10***

*ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்.*

***1 தீமோத்தேயு 1:16-18;***

*16அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்.*

*17நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாமொருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*

குறிப்பு:

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*18குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.*

***தீத்து 3:14***

*நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப்பழகட்டும்.*

## *ஆசிரிய வரம் - Teaching*

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு பிற கிறிஸ்தவர்களுக்கு ஆழத்தையும் தெளிவையும் அளிக்கும்படி வேத வாக்கியங்களை படித்து அவற்றை புரிந்துகொண்டு அறிவுறுத்துவதே ஆசிரிய வரம்.*

The gift of teaching is the divine strength or ability to study and learn from the Scriptures primarily to bring understanding and depth to other Christians.

***அப்போஸ்தலர் 18:24-28;***

*24அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான்.*

*25அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான்.*

*26அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக்காண்பித்தார்கள்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*27பின்பு அவன் அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள்.*

*28அவன் அங்கே வந்தபின்பு வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்.*

***அப்போஸ்தலர் 20:20-21;***

*20பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்கு பிரசங்கித்து உபதேசம்பண்ணி,*

*21தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.*

***1 கொரிந்தியர் 12:28;***

*தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

***எபேசியர் 4:11-14***

*11மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,*

*12பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*13அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.*

*14நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,*

### அந்நிய / நவமான பாஷை வரம் (மற்றும் வியாக்கியான வரம்) - Tongues (and Interpretation)

தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு கர்த்தரோடு ஒன்றியிருக்கும்படி நம் ஆவியை உற்சாகப்படுத்தி தூதர் (பரலோக) பாஷையிலே பேசுவதே அந்நிய பாஷை வரம். இந்த வரம் பொதுவாக வியாக்கியானம் பண்ணும் வரத்தோடு இனைந்து செயல்படும், இதை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

The gift of tongues is the divine strength or ability to pray in a heavenly language to encourage your spirit and to commune with God. The gift of tongues is often accompanied by interpretation and should be used appropriately.

***அப்போஸ்தலர் 2:1-13;***

*1பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.*

*2அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.*

*3அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.*

*4அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

குறிப்பு:

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

*5வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.*

*6அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.*

*7எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?*

*8அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?*

*9பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா,*

*10பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லிபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும்,*

*11கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்.*

*12எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.*

*13மற்றவர்களோ: இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம்பண்ணினார்கள்.*

***1 கொரிந்தியர் 12:10***

*வேறொருவனுக்கு அற்புதங்களைச்செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***1 கொரிந்தியர் 14:1-14;***

*1அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.*

*2ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியிலே இரகசியங்களைப்பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.*

*3தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்.*

*4அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.*

*5நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவர்களாகவேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்.*

*6மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?*

*7அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்?*

*குறிப்பு:*

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

*8அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?*

*9அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித்தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே.*

*10உலகத்திலே எத்தனையோ விதமானபாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல.*

*11ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன், பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.*

*12நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்;*

*13அந்தப்படி, அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.*

*14என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.*

### ஞான வார்த்தை வரம் - *Word of Wisdom*

*தெய்வீக பெலத்தோடு அல்லது திறனோடு வேத வாக்கியங்களில் உள்ள சத்தியங்களை கொண்டு நடைமுறை வாயிலாக சூழ்நிலைகளையும் தருணங்களையும் புரிந்துகொண்டு தெளிவை கொண்டு வருவதே ஞான வார்த்தை வரம்.*

The gift of wisdom is the divine strength or ability to understand and to bring clarity to situations and circumstances often through applying the truths of Scripture in a practical way.

***அப்போஸ்தலர் 6:3,10.***

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*3ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.*

*10அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று.*

***1 கொரிந்தியர் 2:6-13;***

*6அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல,*

*7உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.*

*8அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே.*

*9எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;*

*10நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.*

*11மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.*

குறிப்பு:

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

_______________________________________________________________________________________

*12நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.*

*13அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம்.*

***1 கொரிந்தியர் 12:8***

*எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*

இந்த தொடர் கதையான வரிசையை பல வரங்கள் உண்டு என்பதை அறிந்துகொள்கிறோம் ஆனாலும் ஒன்றை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நமக்கு அளிக்கப்பட வரங்கள் கர்த்தரிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்டவை. இந்த உலகில் ஒருவனும் கர்த்தரிடத்திலிருந்து ஒரு வரத்தையாகிலும் பெறாமல் வரவில்லை!

***1 பேதுரு 4:10***

*அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.*

ஆக, கொரிந்து சபைக்கு சொல்லப்பட்ட வரங்கள் மாத்திரமல்ல, கிறிஸ்துவின் சபையாகிய அனைத்து சபைகளுக்கும் இந்த வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

*So, it's not only the gifts which are mentioned to the church in Corinth but also to the entire church of Christ.*

## நமக்கு கொடுக்கப்பட்ட வரங்களை அறிந்துகொள்வது எப்படி?

***1 தெசலோனிக்கேயர் 5:2***

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

## கர்த்தர் உங்களுக்கு அளித்த வரங்களை அறிந்துகொள்ளுதல்

| வரிசை | கேள்வி | மதிப்பு (1 – மிக குறைவு , 5 மிக அதிகம்) |
|---|---|---|
| 1 | I like organizing services and events<br>எனக்கு சபை ஆராதனை மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| 2 | I enjoy starting new churches<br>புதிய சபை உருவாக்குவதில் ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| 3 | Working with my hands is fun for me<br>என் கைகளை கொண்டு பனி செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி உண்டு | 1 2 3 4 5 |
| 4 | I can tell when someone is insincere<br>நேர்மையற்ற ஒருவரை என்னால் அறிந்துகொள்ள முடியும் | 1 2 3 4 5 |
| 5 | I pray for the lost daily<br>தொலைந்துபோனவர்களுக்காக நான் தினமும் ஜெபிப்பேன் | 1 2 3 4 5 |
| 6 | Encouraging others is a high priority in my life<br>பிறரை உற்சாகப்படுத்துவது எனது வாழ்வில் மிகவும் முன்னுரிமை பெற்ற காரியம் | 1 2 3 4 5 |
| 7 | Believing God for our daily needs is important to me<br>நம் அன்றாட தேவைகளுக்கு கர்த்தரை நம்பி சார்ந்து இருப்பது எனக்கு முக்கியமான ஒன்று. | 1 2 3 4 5 |
| 8 | Influencing others for the kingdom of God through finances is extremely important to me<br>கத்தருடைய ராஜ்ஜியத்திற்காக பொருள் (பணம்) கொண்டு பிராரை உற்சாகப்படுத்துவது எனக்கு மிகவும் முக்கியமான காரியம். | 1 2 3 4 5 |
| 9 | I look for opportunities to pray for the sick<br>வியாதிப்பட்டோருக்காய் ஜெபிக்கும் தருணங்களை எதிர் நோக்கியிருப்பேன் | 1 2 3 4 5 |
| 10 | I enjoy doing the little things that others do not<br>பிறர் செய்ய விரும்பாத காரியங்களை செய்வதில் எனக்கு மகிழ்ச்சி உண்டு | 1 2 3 4 5 |

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

| வரிசை | கேள்வி | மதிப்பு (1 – மிக குறைவு , 5 மிக அதிகம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | Having people over to my house is something I do often<br>அடிக்கடி யாரையாகிலும் எனது வீட்டிற்கு அழைப்பது உண்டு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 12 | Spending hours in prayer for other people is very enjoyable to me<br>பிறருக்காக பல மணி நேரங்கள் ஜெபிப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி | 1 | 2 | 3 | 4 | 5 |
| 13 | I get insights about others while praying for them even though I don’t know them<br>நான் அறியாதவர்களுக்காக ஜெபிக்கும்போது கூட எனக்கு வெளிப்பாடுகள் வருவது உண்டு. | 1 | 2 | 3 | 4 | 5 |
| 14 | I tend to motivate others to get involved<br>பிறரை பங்கெடுக்கும்படி உற்சாகப்படுத்துவேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 15 | My heart hurts when I see others hurting<br>பிறர் கஷ்டப்படுவதை பார்க்கும்போது என்னுடைய இதயமும் வேதனைப்படும் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 16 | I believe God will use me to enact His miracles<br>கர்த்தர் என்னைக்கொண்டு அற்புதங்கள் செய்யமுடியும் என்று விசுவாசிக்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 17 | Caring for the hurting is paramount in my eyes<br>வேதனைப்படுபவர்களை கவனிப்பது என் கண்களில் மேலோங்கி நிற்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 18 | The wilful sin of others really aggravates me<br>அறிந்தே பிறர் செய்யும் பாவம் என்னை மிகவும் கோபப்படுத்தும் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 19 | I enjoy serving behind the scenes<br>மறைவில் / பின்னால் இருந்து ஊழியம் செய்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி | 1 | 2 | 3 | 4 | 5 |
| 20 | I take pleasure in explaining God’s word to others<br>கர்த்தருடைய வார்த்தையை பிறருக்கு எடுத்துகூருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன், | 1 | 2 | 3 | 4 | 5 |
| 21 | God has used me to interpret a heavenly language<br>தூதர் பாஷையை பிரிந்துகொள்ள கர்த்தர் என்னை பயன்படுத்தி இருக்கிறார். | 1 | 2 | 3 | 4 | 5 |

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

| வரிசை | கேள்வி | மதிப்பு<br>(1 – மிக குறைவு , 5 மிக அதிகம்) |
|---|---|---|
| 22 | I enjoy the book of Proverbs more than any other book in the Bible<br>எனக்கு வேதாகமத்தில் மற்ற புத்தகங்களை விட நீதிமொழிகள் புத்தகம் மிகவும் பிரியம் | 1 2 3 4 5 |
| 23 | I am passionate about managing details<br>எனக்கு சிறு சிறு விபரங்களையும் நிர்வகிப்பத்தில் மிகவும் ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| 24 | I prefer to pioneer new ministry projects<br>புதிய ஊழியங்களை திட்டங்களை வரைவதில் ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| 25 | I consider myself a craftsman or craftswoman<br>நான் ஒரு கைவினை கலைஞர் | 1 2 3 4 5 |
| 26 | I sense when situations are spiritually unhealthy<br>ஆவிக்குரிய குறைபாடுகள் உள்ள சூழ்நிலைகளை என்னால் அறிந்து கொள்ள முடியும் | 1 2 3 4 5 |
| 27 | I am greatly concerned about seeing the lost saved<br>அழிந்துபோகின்ற ஆத்துமாக்களை குறித்த கரிசனை எனக்கு மிகவும் அதிகம் | 1 2 3 4 5 |
| 28 | I try to come across loving and caring<br>எல்லா சூழ்நிலைகளிலும் அன்பாகவும் பாசமாகவும் நடந்துகொள்ள முயலுவேன் | 1 2 3 4 5 |
| 29 | Asking God for a list of big things is exciting to me<br>கர்த்தரிடத்தில் பெரிய காரியங்களை கேட்பதில் எனக்கு அநாதி ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| 30 | I believe miraculous healing is for this day and age<br>அற்புத சுகமளித்தல் இக்காலத்திற்கும் உரியது என்று விசுவாசிக்கிறேன் | 1 2 3 4 5 |
| 31 | Helping others is one of my highest achievements<br>பிறருக்கு உதவிசெய்வதை என் மிகப்பெரிய சாதனையாகும் | 1 2 3 4 5 |
| 32 | Creating a warm and welcoming home is important to me<br>வரவேற்கத்தக்க இல்லத்தை உருவாக்குவது எனக்கு மிகவும் முக்கியமான ஒன்று | 1 2 3 4 5 |

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

| வரிசை | கேள்வி | மதிப்பு<br>*(1 – மிக குறைவு , 5 மிக அதிகம்)* |
|---|---|---|
| *33* | I am burdened to pray for situations in the world<br>எனக்கு உலகின் சூழ்நிலைகளுக்காக ஜெபிப்பதில் மிகவும் பாரம் உண்டு | 1 2 3 4 5 |
| *34* | I get specific pieces of information that God reveals that could not have been naturally known<br>எனக்கு இயற்கையாக நான் அறியாத குறிப்பிட்ட சில விவரங்கள் ஆண்டவரிடமிருந்து வெளிப்படும் | 1 2 3 4 5 |
| *35* | I prefer to take the lead whenever necessary<br>தேவைப்படுகிற சமயங்களில் முன்னின்று காரியங்களை செய்ய நான் விருப்பப்படுவேன் | 1 2 3 4 5 |
| *36* | I'm very sensitive to sad stories<br>துக்க செய்திகள் என்னை மிகவும் பாதிக்கும் / உணர்ச்சிவசப்படுத்தும் | 1 2 3 4 5 |
| *37* | Miracles often happen when I'm nearby<br>நான் இருக்கும் இடங்களில் அற்புதங்கள் அடிக்கடி நடைபெறும் | 1 2 3 4 5 |
| *38* | I enjoy connecting, caring, and coaching others<br>பிறரோடு பழகி பொறுப்பெடுத்து அவர்களுக்கு பயிர்ச்சியளிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும் | 1 2 3 4 5 |
| *39* | Confronting someone with sin in his or her life is not hard<br>பாவத்தில் இருக்கும் மனிதர்களை எதிர்கொள்வது எனக்கு கடினமான காரியம் அல்ல | 1 2 3 4 5 |
| *40* | It bothers me when people sit around and do nothing<br>என்ன சுற்றி அமர்ந்துகொண்டு சும்மாயிருப்பவர்களை பார்ப்பது என்னை மிகவும் பாதிக்கும் | 1 2 3 4 5 |
| *41* | I share Biblical truth with others in hopes of their personal growth<br>வேத சத்தியங்களை பிறருடைய தனிப்பட்ட வாழ்வில் முன்னேறுவார்கள் என்ற நம்பிக்கையோடு பகிர்ந்துகொள்வேன் | 1 2 3 4 5 |
| *42* | I pray in tongues daily<br>நான் தினமும் அந்நிய பாஷைகளில் ஜெபிப்பேன் | 1 2 3 4 5 |

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| வரிசை | கேள்வி | மதிப்பு (1 – மிக குறைவு , 5 மிக அதிகம்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| *43* | When I study scripture God gives me unique insights<br>நான் வசனங்களை வாசிக்கும்போது ஆண்டவர் எனக்கு பிரத்தியேகமான வெளிப்பாடுகள் அளிப்பார் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *44* | Creating a task list is easy and enjoyable for me<br>செயல் பட்டியல் தயாரிப்பது எனக்கு மிகவும் சுலபமான நான் விரும்பும் காரியம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *45* | I am attracted to ministries that start new churches<br>புதிய சபைகளை உருவாக்கும் ஊழியங்களால் நான் மிகவும் கவரப்படுகிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *46* | Building something with my hands is very rewarding to me<br>எனது கைகளால் செய்யும்காரியங்கள் எனக்கு மிகவும் வெகுமதியளிப்பவையாக இருக்கும் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *47* | I can pinpoint issues or problems before others<br>தவறுகளையும் பிரச்சனைகளையும் என்னால் பிறர் முன் சுட்டிக்காட்ட முடியும் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *48* | I enjoy sharing the gospel with a total stranger<br>முன்பின் பார்த்திராத ஒருவரிடம் சுவிசேஷத்தை அறிவிப்பது எனக்கு மிகவும் பிடித்தமான விஷயம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *49* | I look for ways to be an encouragement to other people<br>பிறருக்கு ஊக்கமளிக்கும் சந்தர்ப்பங்களையும் வழிகளையும் எப்பொழுதும் நோக்கியிருப்பேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *50* | I trust that God has my back in every situation<br>கர்த்தர் நான் செய்யும்எல்லா காரியங்களிலும் எனக்கு துணை நிற்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *51* | Making more money means that I can give more<br>அதிகம் சம்பாதித்தால் அதிகம் ஊழியங்களுக்கு கொடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| *52* | God has used me to bring healing to those who are sick<br>கர்த்தர் வியாதிகளை குணப்படுத்த என்னை பயன்படுத்தியிருக்கிறார் | 1 | 2 | 3 | 4 | 5 |

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| வரிசை | கேள்வி | மதிப்பு (1 – மிக குறைவு , 5 மிக அதிகம்) |
|---|---|---|
| 53 | Being a part of the process is fulfilling to me<br>எந்த ஒரு காரியத்தில் ஒரு பகுதியாக இருப்பது எனக்கு மிகவும் நிறைவான ஒன்று | 1 2 3 4 5 |
| 54 | I tend to make total strangers feel at home<br>முன்பின் அறிமுகமில்லாதவர்களோடுகூட என்னால் சுலபமாக பழகவிட முடியும் | 1 2 3 4 5 |
| 55 | People often describe me as a prayer warrior<br>என்னை ஜெப வீரரென்று அழைப்பார்கள் | 1 2 3 4 5 |
| 56 | Others often affirm a specific insight that I expressed about them personally<br>நான் பிறரை குறித்து கூறிய வெளிப்பாடுகளை அவர்களும் ஆமோதித்திருக்கிறார்கள் | 1 2 3 4 5 |
| 57 | I delegate responsibilities to accomplish tasks<br>ஒரு பணியை முடிப்பதற்கு பிறரிடம் பொறுப்புகளை கொடுக்க முடியும் | 1 2 3 4 5 |
| 58 | I am motivated to help those who are less fortunate<br>வசதியில்லாதவர்களுக்கு உதவுவதற்கு நான் ஊக்கப்படுத்தப்படுகிறேன் | 1 2 3 4 5 |
| 59 | I have a constant hunger to see God's miraculous power<br>கர்த்தருடைய அற்புதமான வல்லமையை காணும்படி மிகவும் வாஞ்சையாய் இருக்கிறேன் | 1 2 3 4 5 |
| 60 | I enjoy walking with someone in times of difficulty<br>பிறருடைய கடினமான தருணங்களில் அவர்களோடு சேர்ந்து நடப்பது எனக்கு மிகவும் பிடித்தமான விஷயம் | 1 2 3 4 5 |
| 61 | I enjoy hearing passionate and clear preaching of the truth<br>தெளிவான கலப்படமில்லாத சத்தியத்தை பிரசங்கிப்பதை கேட்க எனக்கு மிகவும் ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| 62 | I like to do small things that others pass over<br>பிறர் செய்யாமல் விட்டுவிடுகிற சின்ன சின்ன விஷயங்களை செய்ய எனக்கு ஆர்வமுண்டு | 1 2 3 4 5 |

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| வரிசை | கேள்வி | மதிப்பு<br>(1 – மிக குறைவு , 5 மிக அதிகம்) |
|---|---|---|
| *63* | I enjoy knowing Biblical details and helping others to understand them<br>வேதத்தின் ஆழங்களை நான் அறிந்துகொள்வதிலும் அதை பிறருக்கு எடுத்துரைப்பதிலும் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு | 1 2 3 4 5 |
| *64* | Praying in the Spirit is encouraging and important to me<br>ஆவியில் ஜெபிப்பது எனக்கு மிகவும் ஊக்கமளிப்பதாயும் பிடித்ததாயும் உள்ளது | 1 2 3 4 5 |
| *65* | When faced with difficulty I tend to make wise decisions and choices<br>பிரச்சனைகளை சந்திக்கும்போது ஞானமான தீர்மானங்களையும் முடிவுகளையும் தேர்ந்தெடுப்பேன் | 1 2 3 4 5 |

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

குறிப்பு:

# *6.* பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் உங்கள் ஊழியத்திற்கு

*நாம் முந்தைய பாடங்களில் பார்த்த வண்ணம் பரிசுத்த ஆவியானவர் மூன்று பரிமாணங்களில் வெளிப்படுவார். ஊழியத்திற்கென்று வெளிப்படுவது நம்மேல் இறங்குகிற பரிமாணம்.*

*முதலில் நாம் இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்வை பார்போம்.*

*இயேசுவினால் தமது ஞானஸ்நானத்திற்கு முன்னதாகவே போதிக்கவும் பிரசங்கிக்கவும் முடிந்திருந்தது. அவர் 12 வயதாயிருந்தபோதே அவர் பேசுகிறதைக்கேட்டு ஜனங்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள் (**லூக்கா 2:27**). ஆனாலும், அவர் ஞானஸ்நானம் எடுத்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெரும்வரையிலும் எந்த ஒரு அற்புதத்தையும் நிகழ்த்தவில்லை.*

*இயேசு யோர்தான் நதியிலே ஞானஸ்நானம் எடுத்தார் **(மத்தேயு 3:13-17).***

***மாற்கு 1:10,***

> *அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, **வானம் திறக்கப்பட்டதையும்,** ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்.*

*பரிசுத்த ஆவியானவர் அவர் 'மேல்' தங்கியிருந்தார் என்ற மற்றொரு சுவாரஸ்யமான காரியம் யோவான் சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***யோவான் 1:32-34***

> ***32**பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, **இவர்மேல் தங்கினதைக்** கண்டேன்.*
>
> ***33**நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்று எனக்குச் சொல்லியிருந்தார்.*

*குறிப்பு:*

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

*34அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்.*

*ஞானஸ்நானத்திற்கு பிறகு ஏசாயா தீர்க்கதரிசி உரைத்ததுபோல இயேசு தமது பொது ஊழியத்தை துவங்கினார்.*

***லூக்கா 4:18-19***

*18கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,*

*19கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,*

*நியாயத்தீர்ப்பு வேறொரு தருணத்தில் உண்டு என்பதை அறிந்து, இயேசு வேண்டுமென்றே அந்த முழு வசனத்தையும் குறிப்பிடாமல் விட்டுவிடுகிறார், ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை கவனமாக வாசியுங்கள்:*

***ஏசாயா 61:1-2***

*1கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,*

*2கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,*

*ஆக, எல்லா அற்புதங்களையும் தீவிரமான பயனுள்ள ஊழியத்தையும் பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கின அபிஷேகத்திற்கு பிறகே செய்ய முடிந்தது.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*இயேசு இந்த உலகத்தை விட்டு பிரியும் முன்னர், தாம் கடந்து செல்வது நல்லது என்றும், தாம் சென்றால்தான் பரிசுத்த ஆவியானவரை அனுப்பிவைக்க முடியும் என்றும் கூறியிருந்தார்.*

***யோவான் 16:7***

> *நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.*

*இயேசு மனித உடலோடு இந்த உலகில் இருப்பதை பார்க்கிலும் பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக்கொள்வது மிகவும் பயனுள்ளதாய் இருக்கும் என்று இயேசு தாமே கூறியிருக்கிறார். ஆண்டவர் தாமே கூறிய இந்த வார்த்தையை குறித்தி அதிர்ச்சியடைய வேண்டாம்.*

*இயேசு மரித்தபோது விசுவாசிகளின் வாழ்வில் மிகவும் முக்கியமாக ஒரு புதிய அத்தியாயம் புதிய நியாயப்பிரமாணத்திற்குள் நிகழ்ந்தேறியது.*

***மத்தேயு 27:50-51***

> ***50****இயேசு மறுபடியும் மகாசத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.*
>
> ***51****அப்பொழுது, **தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது**, பூமியும் அதிர்ந்தது கன்மலைகளும் பிளந்தது.*

*ஜனங்களையும் தேவனின் பிரசன்னத்தையும் தேவாலயத்தின் திரைச்சீலை பிரித்திருந்தது. பிரதான ஆசாரியன் மாத்திரமே அதுவும் வருடத்திற்கு ஒருமுறை மாத்திரமே தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைய முடிந்தது. ஆனால் கர்த்தரோ, புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி என் ஜனங்களோடு வாசம்பண்ணுவேன் என்று வாக்குத்தத்தம் செய்தார் (எரேமியா 31:31-34).*

*இயேசு கிறிஸ்து மரித்த பின்னர், தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிக்கப்பட்டது; இது எதை குறிக்கிறது என்றால், தேவன் இனி நான் இங்கு வாசம்செய்வதில்லை மாறாக ஜனங்களின் இருதயத்தில் வாசம் செய்வேன் என்று கூறி அந்த திரைச்சீலையை கிழித்தார் என்பதை உணர்த்துகிறது.*

*குறிப்பு:*

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

*தமது உயிர்த்தெழுதலுக்குபிறகு இயேசு தமது சீஷர்களை சந்தித்து பரிசுத்த ஆவியை அவர்கள்மேல் ஊதினார்.*

***யோவான் 20:21-22***

> ***21****இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,*
>
> ***22*** *அவர்கள்மேல் ஊதி:* ***பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்;***

*அவர்கள் மேல் அவர் ஊதியிருந்தபோதும், கர்த்தருடைய வாக்குத்தத்தம் பரத்திலிருந்து கொடுக்கப்படும்வரை அவர்களை எருசலேமிலே தங்கியிருக்கும்படி கூறினார்.*

***லூக்கா 24:49,***

> *என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ* ***உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்*** *என்றார்.*

*இயேசு அவர்களை எருசலேமிலே தங்கியிருக்கும்படி கட்டளையிட்டார்! ஏன்? தமக்கு சாட்சிகளாயிருக்க வேண்டுமாயின் அவர்களுக்கு பெலன் தேவையாயிருந்தது.*

***அப்போஸ்தலர் 1: 4-8***

> ***4****அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.*
>
> ***5****ஆகையால்* ***நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்*** *என்று கட்டளையிட்டார்.*

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*6அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.*

*7அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.*

*8பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

*இயேசு தமது உயிர்த்தெழுதலுக்கு பிறகு அவர்களோடு 40 நாட்கள் தேவனுடைய ராஜ்யத்தை குறித்து பேசினார். ஆனாலும், அவர்களை எருசலேமிலே தங்கியிருக்கும்படி கூறினார். அவர்களை தங்கும்படி கட்டளையிட்டார்.*

*பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் வரும்போது நீங்கள் பெலனடைந்து அவருக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்.*

*பெந்தேகோஸ்தே நாளில்,*

***அப்போஸ்தலர் 2:1-4***

*1பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.*

*2அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.*

*3அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள்* **ஒவ்வொருவர்மேலும்** *வந்து அமர்ந்தது.*

*4அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

*குறிப்பு:*

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

*பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் இறங்கினார்,*

*அவர்கள் அந்நிய பாஷைகளில் மாத்திரம் பேசவில்லை அதோடு கிறிஸ்துவுக்கு தீவிர சாட்சிகளாய் இருந்தனர்.*

*அப்போஸ்தலனாகிய பேதுரு எழுந்து நின்று புதிய ஏற்பாட்டு திருச்சபைக்கு முதன்முதலில் பிரசங்கித்தார், அந்த ஒரே பிரசங்கத்தில் மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டனர்.*

*இறுதியாக, அந்த வாக்குத்தத்தம் நம் ஒவ்வொருவருக்கும் நீட்டிக்கப்பட்டது.*

***அப்போஸ்தலர் 2:38-39***

> ***38****பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*
>
> ***39****வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி;*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

# 7. கிறிஸ்துவின் வரங்களும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களும்

## கிறிஸ்துவின் வரங்களும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் – எவ்வாறு வேறுபடுகின்றன

*பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் அனைவரும் ஒருவரே! திரித்துவம்!!*

*இவர்கள் எல்லாரும் ஒருமித்து காரியங்களை செய்தாலும், தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டும்படி அவர்களுடைய வரங்கள் பிரத்தியேகமாக வரையறுக்கப்பட்டுள்ளன.*

***எபேசியர் 4: 7-16***

> *7கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.*
>
> *8ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.*
>
> *9ஏறினார் என்பதினாலே அவர் அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?*
>
> *10இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.*
>
> *11மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,*
>
> *12பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,*

*குறிப்பு:*

________________________________________________________________________

*13அவர், **சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும்** ஏற்படுத்தினார்.*

*14நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,*

*15அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.*

*16அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.*

*சபை முழுமையாக கட்டப்படும்படி கொடுக்கப்பட்ட ஐந்தடுக்கு ஊழியமும் அன்பினால் ஒன்றோடொன்று தைக்கப்பட்டுள்ளன.*

*ஐந்தடுக்கு ஊழியம் இயேசு கிறிஸ்துவினால் அவர் வரும்வரை சபையை நிர்வகிப்பதற்காக கொடுக்கப்பட்டவை.*

*இந்த ஐந்தடுக்கு ஊழியத்தை புரிந்துகொள்ளும்படி ஒரு உதாரணத்தை பார்ப்போம். நமக்கு உணவு என்பது மிகவும் விருப்பமான காரியம்.*

குறிப்பு:

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

| | |
|---|---|
| **சுவிசேஷகர்** | *கரங்களைப்போல உணவை எடுப்பவர்.* |
| **போதகர்** | *வாயைப்போல உணவை மென்று உட்கொள்பவர்.* |
| **ஆசிரியர்** | *உணவு செரிக்க உதவியாக ஊற்றப்படும் அமிலம் போன்றவர்கள்; நம்மை வசனத்தின் நிமித்தம் சீர்திருத்தி நடத்துபவர்.* |
| **தீர்க்கதரிசி** | *கண்களுக்கு புத்துணர்வு அளிக்கும் உணவைப்போல வரப்போகும் காரியங்களை அறிந்து ஆண்டவர் செய்ய விரும்புவதை புரிந்துகொண்டு நடத்துபவர்.* |
| **அப்போஸ்தலர்** | *மனிதனின் ஆத்துமாவைப்போல சகலத்தையும் நிர்வகிப்பவர்.* |

*இந்த ஐந்தடுக்கு ஊழியத்தை செய்யும்படியாக அழைத்தவர் இயேசு கிறிஸ்து.*

***மத்தேயு 16:18***

> *மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*

*தமது சபையை கட்டும்படி இயேசு இந்த வரங்களை சபைக்கு அருளியிருக்கிறார். இந்த வரங்களை உடையவர்கள் அலுவலக நிர்வாகிகள் போன்றவர்கள். தீர்க்கதரிசன வரம் உடையவர் தீர்க்கதரிசன அலுவலை கவனித்து எப்போதும் தீர்க்கதரிசனம் உரைப்பார்.*

*சபையாகிய சரீரத்தை கட்டி எழுப்புவதற்கு, சரீரத்திற்கென கொடுக்கப்பட்ட இந்த வரங்கள் அவசியம். மருத்துவ விஞ்ஞானம் மிகவும் வளர்ந்து விட்டது, நாம் அறிந்தவாறு நம் உடலில் **206** எழும்புகள் உள்ளன. ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவில் வெவ்வேறு நோக்கத்திற்காக உள்ளன. ஆனாலும் ஒரு உடல் முழுமையடைய வேண்டுமென்றால், இவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*உடலாக செயல்படுவது மிகவும் அவசியம். அனைத்தையும் சரியான இடத்தில் ஒன்றிணைக்கும்படியாக இயேசு இந்த ஐந்தடுக்கு ஊழியத்தை தமது சபைக்கு அருளியிருக்கிறார்.*

*இந்த வரத்தை பெற்றவர் எவரும் மென்மேலும் இந்த வாரத்தில் வளர முடியும்.*

***எபேசியர் 4:7***

> *கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக **நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது**.*

*வரங்கள் கிருபையினால் அளிக்கப்படுகிறது என்று இந்த வசனம் தெளிவாக கூறுகிறது.*

***எபேசியர் 4:29,***

> *கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே **கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்**.*

*ஒரு தீர்க்கதரிசியின் வார்த்தையை நாம் கேட்கும்போது நாம் அவருடைய கிருபையை அதிகம் பெற்றுக்கொள்கிறோம். இயேசுவின் வார்த்தையை நாம் அதிகம் கேட்கும்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையில் இன்னும் அதிகரிக்கிறோம்.*

## *பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்*

***1 கொரிந்தியர் 12: 4-11***

> *4வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே.*
>
> *5ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.*
>
> *6கிரியைகளிலேயும் வித்தியாசங்களுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.*

குறிப்பு:

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

*7ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*

***8**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*

***9**வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,*

***10**வேறொருவனுக்கு அற்புதங்களைச்செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

***11**இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.*

"Gift" *வார்த்தையின் கிரேக்க பொருள்* "charisma" *என்பதாகும்;* "charisma" *மற்றும்* "charismatic" *போன்ற ஆங்கில பதங்கள் இந்த வார்த்தையிலிருந்தே வந்தவை. இதில்* 'charis' *என்ற பகுதியின் பொருள்* "grace"*;* "ma" *என்ற பதத்தோடு சேரும்போது* "grace given" *என்று பொருள் படுகிறது. ஆக இந்த கிருபையின் வரங்கள் (*grace gifts*) ஒரு மனிதனையும், கர்த்தரை மகிமைப்படுத்தவும் வரை சேவிக்கவும் ஏவுகின்றன.*

- *ஞானத்தின் வரம் – கர்த்தருடைய சித்தத்தின்படி தீர்மானங்களை எடுக்கவும் வழிகாட்டவும் உதவும் திறனாக இருக்கிறது.*
- *அறிவின் வரம் – எந்த சூழ்நிலையையும் ஆவிக்குரிய பிரச்சனைகளையும் ஆழமாக ஆராய்கிற திறன்*
- *விசுவாச வரம் – சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் கர்த்தரைமேல் விசுவாசமாய் இருப்பதும், பிறரை விசுவாசத்தில் உற்சாகப்படுத்தும் திறன்.*

*குறிப்பு:*

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

- *சுகமளிக்கும் வரங்கள் – வியாதியுற்ற, அடிபட்ட, வேதனைப்படுகிற ஜனங்களை கர்த்தரின் குணமாக்கும் வல்லமை கொண்டு அற்புதமாக குணப்படுத்தும் திறன்.*
- *அற்புதத்தின் வரம் – கர்த்தரின் வார்த்தையையும் சுவிசேஷத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளங்களையும் அதிசயங்களையும் செய்யும் திறன்.*
- *தீர்க்கதரிசன வரம் – கர்த்தரிடமிருந்து வரும் வார்த்தையை பிரகடனப்படுத்தும் திறன்.*
- *ஆவிகளை பகுத்தறியும் வரம் – ஒரு நபரோ, செய்தியோ, நிகழ்வோ கர்த்தரிடமிருந்து வந்ததா இல்லையா என்று பகுத்தறியும் திறன்.*
- *நவமான / அந்நிய பாஷையின் வரம் – நமக்கு பரீட்சயமில்லாத மொழியில் பேசி, அதே மொழி பேசுபவரிடம் உரையாடும் திறன்.*
- *வியாக்கியான வரம் – அந்நிய பாஷைகளை புரிந்துகொண்டு அதை பிறர் அறிந்துகொள்ளும்படி மொழிபெயர்க்கும் திறன்.*

*இதில் 7-ஆம் வசனம் மிகவும் முக்கியமானது,*

> ***ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.***

*இந்த வரங்கள் எல்லாருடைய நன்மைக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளன!!*

*இந்த வரங்களை கொரிந்து சபையில் செயல்படுத்தியவர்கள் யார்?*

*அந்த சபை பெரும் பிரச்சனைகளுக்கு உட்பட்ட சபை.*

*தலைவர்களுக்குள்ளே தர்க்கங்கள்.*

*காம விகாரங்கள்*

*சிலைகளுக்கு உணவு படைத்தல்*

*எண்ணத்திலும் செயலிலும் கேடு - Corruption both morally and physically*

*ஆனாலும் அவர்கள் அனைவராலும் இந்த வரங்களை பிரயோஜனப்படுத்த முடிந்தது*

*குறிப்பு:*

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

***1 கொரிந்தியர் 14:26***

> *நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.*

*இந்த வரங்கள் எல்லாருக்காகவும் கொடுக்கப்பட்டவை!!*

*முதலிலிருந்து பார்ப்போம்*

*இயேசு நாம் சாட்சிகளாய் இருப்பதற்கு பலனளிக்க வாக்களித்திருக்கிறார்*

***அப்போஸ்தலர் 1:8***

> *பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

*பெந்தேகொஸ்தே நாள் வந்தபோது கர்த்தருடைய வல்லமையை தாங்கிக்கொண்டு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்றுக்கொண்டனர்.*

*12 அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல, அங்கே கூடியிருந்த 120 பேரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்; ஏனெனில் சிலர் அப்போஸ்தலர்களோடு இந்த வரங்கள் கொடுக்கப்படுவது நின்றுவிட்டது என்று இந்நாளில் கூறுகிறார்கள். அப்படியல்ல, அது தொடர்கிறது. பின்வரும் சபைகளின் குறிப்புகளை பார்க்கவும்.*

***அப்போஸ்தலர் 2: 4***

> ***அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு****, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

*அப்போஸ்தலர் 8 – சமாரியா*

*அப்போஸ்தலர் 9 – அப்போஸ்தலனாகிய பவுல்*

*அப்போஸ்தலர் 10 – கொர்நேலியுவின் இல்லம்*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஆகவே, பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் இன்றைக்கும் தொடர்கிறது. சில காலங்களாக ஜனங்கள் அவற்றை பின் தொடரவில்லை ஆனால் இப்போது கர்த்தர் தமது ஆவியை தமது ஜனங்கள் அனைவர் மேலும் ஊற்றுகிறார்.

இந்த வரங்கள் தேவையின் அடிப்படியிலே செயல்படும் நேரம்/காலத்தின் அடிப்படையில் அல்ல. தேவன் தமது ஜனங்களை தமது நோக்கத்திற்கென்றும் தமது திட்டத்திற்கென்றும் பயன்படுத்துகிறார்.

**அப்போஸ்தலர் 13:2**

> அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்.

சபை ஜெபித்துக்கொண்டிருந்த வேளையில், கர்த்தர் ஒருவர் மூலமாக பேசி, பர்னபாவையும் சவுலையும் தனக்கென பிரித்துவைக்க சொன்னார்.

**அப்போஸ்தலர் 21: 9-11**

> **9**தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்.
>
> **10**நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்.
>
> **11**அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.

அங்கு தீர்க்கதரிசனம் உரைக்க நான்கு மகள்கள் இருந்தபோதிலும், கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அங்கு அனுப்பி அப்போஸ்தலனாகிய பவுல் சந்திக்கப்போகும் பாடுகள் குறித்து உரைக்கிறார்.

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*ஆகவே பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் ஒருவருடைய தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அருளப்படுகின்றன.*

*கர்த்தர் உபயோகிக்கும் பாத்திரமாக இருக்க விரும்பும் எவரையும் கர்த்தர் உபயோகிக்கிறார்.*

### முடிவுரை

*இயேசு கிறிஸ்துவின் சபையை நிர்வகிக்கவும் ஆயுதந்தரிக்கவும் அவராலே அருளப்படுவதே ஐந்தடுக்கு ஊழியம்.*

*பரிசுத்த ஆவியின் வரங்கள், கர்த்தருடைய பாத்திரமாய் செயல்பட விரும்பும் யாவருக்கும் அருளப்பட்டு, பரிசுத்தர்களை ஆயத்தப்படுத்தும்படி செயல்படுவது.*

*குறிப்பு:*

____________________________________________________________________________________

## குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

*குறிப்பு:*

# 8. அனுதினமும் வரங்களை பயன்படுத்துதல்

## அனுதினமும் வரங்களை பயன்படுத்துதவது எப்படி?

*முன்னதாக உங்கள் வரங்களை தெரிந்துகொண்டோம். இப்போது, அவற்றை எப்படி அனுதின வாழ்வில் பயன்படுத்துவது என்று பாப்போம்.*

*முதலும் முக்கியமுமாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய காரியம், வரங்கள் பொதுவான நன்மைக்கே கொடுக்கப்பட்டுள்ளன.*

***1 கொரிந்தியர் 12:7***

> *ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*

*கர்த்தர் யாரை உங்கள் பாதையில் காண்பிக்கிறாரோ அவர்களுக்கே அந்த வரங்கள். உங்களுக்கு நெருங்கியவர்கள் நண்பர்களுக்கு மாத்திரமல்ல உங்கள் பாதையில் வரும் யாவருக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது.*

***2 பேதுரு 1:3***

> *தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும். அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,*

***அப்போஸ்தலர் 1:4-5, 8***

> *பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

*பரிசுத்த ஆவியானவர் சீஷர்கள்மேல் வந்திறங்கி பூமியை அதிரச்செய்தது ஒரு ஆச்சரியமான நிகழ்வு. இன்னும் தெளிவாக சொன்னால், ஆவியினால் நிரப்பப்பட்ட இவர்கள் பாதாளத்தின் வாசல்களை அசைத்தனர். இதில் வியக்கத்தக்க காரியம், இந்த நிகழ்வை தரிசித்த யாவரும் பிரம்மிப்பில் மூழ்கினர்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

- *பிரம்மித்து ஆச்சரியப்பட்டனர் - they were all completely amazed* ***(அப் 2:7)***
- *பிரம்மித்து சந்தேகப்பட்டனர் - they were amazed and perplexed* ***(அப் 2: 12)***
- *ஆச்சரியப்பட்டு பிரம்மித்தார்கள் - they were absolutely astounded* ***(அப் 3:10)***
- *ஆச்சரியப்பட்டனர் - they were amazed…* ***(அப் 4:13)***
- *இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள் - and recognized that these were men that had been with Jesus* ***(அப் 4:13)***

*கர்த்தர் தாம் யார் என்பதை உங்கள் மூலமாக காட்ட விரும்புகிறார்.*

*முதலில், உங்களுக்கு இயற்கையாய் அமைந்த தாலந்துகளையும் ஆவியின் வரங்களையும் நீங்கள் தவறாக புரிந்துகொள்ள நான் விரும்பவில்லை.*

*அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறதாவது:*

***1 கொரிந்தியர் 12:1***

> *அன்றியும், சகோதரரே, ஆவிக்குரியவரங்களைக் குறித்து* ***நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை****.*

*ஆவிக்குரிய வரங்கள் பொதுவாக கீழ்க்கண்டவையோடு தவறாக புரிந்துகொள்ளப்படும்:*

- *இயற்கையாய் நமக்கு உள்ள தாலந்துகள் / திறமைகள்*
- *ஆவியின் கனி*
- *கிறிஸ்தவ பணிகள்*
- *கிறிஸ்தவ ஒழுங்குமுறைகள்*

*ஆவியின் வரங்கள் உங்கள் ஆவிக்குரிய பிறப்பில் உங்களுக்கு அளிக்கப்படுபவை, பல நேரங்களில் அது நம் பெலவீனமாககூட இருக்கலாம் ஆகவே கர்த்தர் நம் மூலம் செயல்படுகிறார் என்று நாம் அறிந்துகொள்ள முடியும்.*

*நமக்கு இயற்கையாய் அமைந்த தாலந்துகளும் தேவனிடத்திலிருந்து வந்தவை என்று நாம் உணரும்போது கர்த்தர் அவற்றையும் பயன்படுத்த முடியும்.*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*ஆகவே, ஒவ்வொரு நாளும் கர்த்தர் இந்த உலகத்தில் ஏதாகிலும் செய்ய வேண்டும் என்று வாஞ்சிக்கிறார். நாம் கர்த்தரால் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை விட, அவர் தமது சத்தத்தை கேட்டு அவர் சித்தப்படி செய்கிற மக்களை அவர் தேடிக்கொண்டிருக்கிறார்.*

*நீங்கள் காலையில் எழும்பியது முதல் மாலை படுக்கைக்கு செல்லும்வரை அவருடைய பிரசன்னத்தில் இருங்கள்.*

## ஆவி ஆத்துமா சரீரம்

***1 தெசலோனிக்கேயர் 5:23***

> *சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.*

*இவ்வசனம் நாம் மூன்று பரிமானங்களாய் இருக்கிறோம் என்று தெளிவாக கூறுகிறது.*

***ஆதியாகமம் 1:26 & 28***

> *26பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*
>
> *28பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.*

*இந்த வசனம் நாம் தேவனைப்போல உண்டாக்கப்பட்டோம் என்று தெளிவாக கூறுகிறது.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## *கர்த்தர் யார்?*

***யோவான் 4:23***

> *உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.*

*கர்த்தர் ஆவியாயிருக்கிறார்,*

***1 கொரிந்தியர் 3:16***

> *நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*

*ஆக, எல்லா வாக்கியங்களும் உங்கள் ஆவிக்கென எழுதப்பட்டவை ஆத்துமாவுக்கு அல்ல.*

***ரோமர் 12:1***

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*

*இந்த வசனம் சரீரத்தை படைக்க வேண்டும் என கூறுகிறது, ஆக நம் சரீரத்துக்கு இது எழுதப்படவில்லை.*

*ஆத்துமாவை புதிதாக்கும்படி கூருகிறது ஆக, இது ஆத்துமாவுக்கும் எழுதப்படவில்லை.*

*ஆகவே, நாம் இவ்வுலக அனுபவத்திற்குள் செல்லும் ஆவிக்குரிய மனிதர்கள்.*

*குறிப்பு:*

***சங்கீதம் 121:4***

> *இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.*

*இந்த வசனம் கர்த்தர் உறங்குவதில்லை என்று தெளிவாக குறிப்பிடுகிறது, ஆகவே நமது ஆவியும் உறங்குவதில்லை.*

***உன்னதப்பாட்டு 5:2***

> *நான் நித்திரைபண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன்: என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற; என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார்.*

*நாம் உறங்கலாம், ஆனால் நமது ஆவி உறங்குவதில்லை.*

*நாம் இந்த மூன்று பரிமாணங்களின் குரல்களையும் கேட்கிறோம் ஆனாலும் எதனுடைய குரல் ஓங்கி ஒலிக்கிறதோ அதன்படியே செய்கிறோம். அல்லாமலும், ஆத்துமாவே அதை தீர்மானிக்கிறதாய் இருக்கிறது!*

*ஆவி ஆத்துமா சரீரத்தை குறித்து ஒரு சிறிய விளக்கம்.*

*நம்மில் பலருக்கு நாம் உறங்கும் நேரமே ஆண்டவருடைய பிரசன்னத்தில் இருப்பதற்கு சிறந்த நேரம்.*

*ஆகவே ஆண்டவர் நாம் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை புரிந்துகொள்ளும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**குறிப்புகள்**

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

குறிப்பு:

# *9.* பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

*இந்த பாடத்தை ஆரம்பிக்கும் முன்னர் சிறப்பு எச்சரிக்கை அளிக்க விரும்புகிறேன். மிகவும் அச்சுறுத்தும் ஒரு குறிப்பை இயேசு இந்த உலகத்தில் இருந்தபோது கூறியிருந்தார்.*

***மத்தேயு 7:15-23***

> *15கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.*
>
> *16அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?*
>
> *17அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.*
>
> *18 நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.*
>
> *19நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.*
>
> *20ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.*
>
> *21பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*
>
> *22அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

*பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.*

*23அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.*

*நீங்கள் உங்கள் கனியினால் அறியப்படுவீர்கள், உங்கள் வரங்களினால் அல்ல.*

*எந்த ஒரு முரட்டாட்டமான மனிதனும் பரிசுத்த அவ்வயின் வரங்களினால் செயல்பட முடியும். ஆனால் எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே, நீங்கள் உங்கள் வரங்களை உங்க வாழ்வில் நல்ல கனிகள் கொடுக்க பயன்படுத்தும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

*இரண்டாவதாக, இந்த ஆவியின் வரங்கள் கொரிந்துவில் உள்ள சபைக்கு எழுதப்பட்டவை; நாம் அறிந்த வண்ணம் ஆதி திருச்சபைகளுள், கொரிந்து சபை மிகவும் முரட்டாட்டமான நீதியற்ற ஜனங்கள் நிறைந்த சபை.*

*பவுல் ஆவியின் வரங்களைப்பற்றி 12-வது அதிகாரத்திலும், அவற்றை பயன்படுத்துவதை குறித்து 14-வது அதிகாரத்திலும் எழுதியிருக்கிறார்.*

*இவ்விரண்டுக்கும் இடையில் உள்ள 13-வது அதிகாரம், நாம் பொதுவாக திருமண விழாக்களில் வாசிக்க கேட்பதுண்டு. பவுலோ அல்லது பரிசுத்த ஆவியானவரோ இந்த அதிகாரத்தை திருமண நிகழ்வுகளில் வாசிக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதவில்லை. ஆவியின் வரங்களை நாம் அன்பினால் சபையின் வளர்ச்சிக்கென பிரயோஜனப்படுத்த வேண்டும் என்பதே இந்த 13-வது அதிகாரம் எழுதப்பட்ட நோக்கம்.*

***1 கொரிந்தியர் 14:26***

*நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம்*

*குறிப்பு:*

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

*பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.*

*நாம் பல வாரங்களில் சிறந்து விளங்கலாம், ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அவருடைய அன்பை பிரசித்திப்படுத்தி ஒருவரை ஒருவர் தாங்க வேண்டும் என்பதே என்று இந்த வசனம் நமக்கு உணர்த்துகிறது.*

***1 கொரிந்தியர் 13:13***

*இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.*

### ஆவியின் வரங்கள்

***1 கொரிந்தியர் 12: 8-11***

*8எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*

*9வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,*

*10வேறொருவனுக்கு அற்புதங்களைச்செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

*11இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.*

*1) ஞான வார்த்தை / ஞானத்தை போதிக்கும் வரம் – The Word of Wisdom*

*2) அறிவின் வார்த்தை / அறிவை உணர்த்தும் வரம் – The Word of Knowledge*

*3) விசுவாச வரம் - Faith*

*4) சுகமளிக்கும் வரங்கள் - Gifts of healings*

குறிப்பு:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

*5) அற்புதத்தின் வரம் - Working of miracles*

*6) தீர்க்கதரிசன வரம் - Prophecy*

*7) ஆவிகளை பகுத்தறியும் வரம் - Discerning of spirits*

*8) நவமான / அந்நிய பாஷையின் வரம் - Different kinds of tongues*

*9) வியாக்கியான வரம் - Interpretation of tongues.*

### மூன்று வெளிப்பாட்டு வரங்கள்.

1. *ஞான வார்த்தை / ஞானத்தை போதிக்கும் வரம் – The Word of Wisdom*
2. *அறிவின் வார்த்தை / அறிவை உணர்த்தும் வரம் – The Word of Knowledge*
3. *ஆவிகளை பகுத்தறியும் வரம் - Discerning of spirits*

### மூன்று வல்லமை வரங்கள்.

1. *விசுவாச வரம் - Faith*
2. *சுகமளிக்கும் வரங்கள் - Gifts of healings*
3. *அற்புதத்தின் வரம் - Working of miracles*

### மூன்று வாய்மொழி வரங்கள்.

1. *தீர்க்கதரிசன வரம் - Prophecy*
2. *நவமான / அந்நிய பாஷையின் வரம் - Diverse kinds of tongues*
3. *வியாக்கியான வரம் - Interpretation of tongues*

### *1)* ஞானத்தை போதிக்கும் வரம் - *The Word of Wisdom*

*ஞானத்திற்கும் அறிவிற்கும் மிக முக்கியமான வித்தியாசம் உண்டு. ஞானத்தின் மூலம் நமக்கும் பிறருக்கும் வழிகாட்ட முடியும்.*

***பிரசங்கி 10:10***

> *இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிகபலத்தைப் பிரயோகம்பண்ணவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்.*

*அறிவு என்பது தகவல்கள். ஞானம் என்பது அந்த தகவல்களை சிறப்பாக பயன்படுத்துவது.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஞானம் அறிவை சுட்டிக்காட்டி, அந்த அறிவை துல்லியமாகவும் பயனுள்ள வகையிலும் பிரயோஜனப்படுத்த உதவி செய்யும்.

***நீதிமொழிகள் 15:2***

> *ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்; மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்.*

*ஒரு தருணத்திலோ சூழ்நிலையிலோ தேவன் அருளுகிற அளவற்ற ஞானத்தின் ஒரு சிறிய துகள் ஞான வார்த்தை எனப்படும். இந்த வரத்தை பயன்படுத்தி, பரிசுத்த ஆவியானவர் ஜனங்களையும், சூழ்நிலைகளையும் மற்ற காரியங்களையும் தம்முடைய நோக்கத்திற்கென்றும் திட்டத்திற்கும் பயன்படுத்துகிறார்.*

*இந்த வரத்தின் சில பயன்பாடுகளை இப்போது பாப்போம்,*

*பழைய ஏற்பாட்டில் சாலொமோன் ராஜா இந்த வரத்தை பயன்படுத்தியிருக்கிறார்,*

***1 இராஜாக்கள் 3:16-28.***

> *16அப்பொழுது வேசிகளான இரண்டு ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் வந்து, அவனுக்கு முன்பாக நின்றார்கள்.*
>
> *17அவர்களில் ஒருத்தி: என் ஆண்டவனே, நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளை பெற்றேன்.*
>
> *18நான் பிள்ளைபெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண்பிள்ளை பெற்றாள்; நாங்கள் ஒருமித்திருந்தோம், எங்கள் இருவரையும் தவிர, வீட்டுக்குள்ளே வேறொருவரும் இல்லை.*
>
> *19இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டுபடுத்ததினால் அது செத்துப்போயிற்று.*
>
> *20அப்பொழுது, உமது அடியாள் நித்திரைபண்ணுகையில், இவள் நடுஜாமத்தில் எழுந்து, என் பக்கத்திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்து,*

*குறிப்பு:*

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

*தன் மார்பிலே கிடத்திக்கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து, என் மார்பிலே கிடத்திவிட்டாள்;*

*21என் பிள்ளைக்குப் பால்கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்த போது, அது செத்துக்கிடந்தது; பொழுது விடிந்தபின் நான் அதை உற்று பார்க்கும் போது, அது நான் பெற்றபிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள்.*

*22அதற்கு மற்ற ஸ்திரீ: அப்படியல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ: இல்லை, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்.*

*23அப்பொழுது ராஜா: உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள்; அப்படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி,*

*24ஒரு பட்டயத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்; அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள்.*

*25ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான்.*

*2அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள் என்றாள்.*

*27அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின் தாய் என்றான்.*

குறிப்பு:

________________________________________________

*28ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.*

*புதிய ஏற்பாட்டில், தன்னை எதிர்த்து கொல்ல முயற்சிப்பவர்கள் மத்தியில் பவுல் இந்த ஞான வார்த்தை வரத்தை பயன்படுத்தி குழப்பத்தை உண்டுபண்ணினார்.*

***அப்போஸ்தலர் 23:6***

*பின்பு அவர்களில், சதுசேயர் ஒருபங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே, நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோருடைய உயிர்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்று ஆலோசனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொன்னான்.*

*மற்றுமொரு எடுத்துக்காட்டு...*

***1 இராஜாக்கள் 17:8-16***

*8அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்:*

*9நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்.*

*10.அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்; அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்கு அவன் வந்த போது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள்; அவன் அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றான்.*

*11கொண்டுவர அவள் போகிறபோது அவன் அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா என்றான்.*

*குறிப்பு:*

___

___

___

___

___

*12அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.*

*13அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்.*

*14கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.*

*15அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள்.*

*16கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை.*

*கர்த்தர் எலியாவை பராமரிப்பதற்கு தேவையான அனைத்தையும் விதவைக்கு கட்டளையிட்டிருந்தார் (**வ 9**).*

*விதவையோ இதை அறியாதிருந்தாள் (**வ 12**).*

*ஞான வார்த்தையின் வரத்தை கொண்டு சரியாக என்ன செய்ய வேண்டும் என்று எலியா விதவைக்கு கூறினார் (**வ 13-14**), அதனால் அவர்கள் எல்லாரும் போஷிக்கப்பட்டார்கள். ஞான வார்த்தையும் அதை தொடர்ந்து அற்புதமும் நிகழாதிருந்தால் அவர்கள் அனைவரும் பசியால் வாடியிருப்பார்கள்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*ஞான வார்த்தையின் மற்றுமொரு எடுத்துக்காட்டு...*

***2 இராஜாக்கள் 6: 1-7***

> *1தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது.*
>
> *2நாங்கள் யோர்தான்மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்றார்கள். அதற்கு அவன்: போங்கள் என்றான்.*
>
> *3அவர்களில் ஒருவன்: நீர் தயவுசெய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும் என்றான். அதற்கு அவன்: நான் வருகிறேன் என்று சொல்லி,*
>
> *4அவர்களோடேகூடப் போனான்; அவர்கள் யோர்தான் நதியருகே வந்த போது மரங்களை வெட்டினார்கள்.*
>
> *5ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான்.*
>
> *6தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தபோது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணி,*
>
> *7அதை எடுத்துக்கொள் என்றான்; அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்.*

*தொலைந்துபோன கோடரியை எப்படி மீட்க வேண்டும் என்று எலிசா தேவக அறிந்திருந்தார். எப்பொழுதுமே ஞான வார்த்தையானது கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை காண்பிக்கிறது. அறிவை உணர்த்தும் வரமோ, அற்புதத்தின் வரமோ அல்லது வேறொரு வரமோ பொதுவாக ஞான வார்த்தையை தொடர்ந்து வெளிப்படும்.*

*குறிப்பு:*

____________________________________________________________________________________________________________________

____________________________________________________________________________________________________________________

____________________________________________________________________________________________________________________

____________________________________________________________________________________________________________________

____________________________________________________________________________________________________________________

*இயேசு, பரிசுத்த ஆவியை அளவில்லாமல் பெற்றிருந்தார் (யோவான் 3:34) ஆகவே தான் அவரால் தொடர்ந்து தெய்வீக ஞானத்தினால் தொடர்து செயல்பட முடிந்தது. விபச்சாரத்தில் சிக்கிய பெண் தண்டிக்கப்படும்போதும் **(யோவான் 8:1-12)**, வரி செலுத்துதலை குறித்த கேள்வி எழுந்தபோதும் **(மத்தேயு 22:15-22)** இயேசுவில் ஞான வார்த்தை வெளிப்படுவத்தை நம்மால் பார்க்க முடிகிறது.*

*இன்னும் பல உதாரணங்கள் உள்ளன, மேலும் படிக்க **(1 இராஜாக்கள்; 3:16-28; மத்தேயு 2:20; லூக்கா 22:10-12; யோவான் 2:22-24; யோவான் 4:16-19; அப்போஸ்தலர் 26:16; அப்போஸ்தலர் 27:21-25; 1 கொரிந்தியர். 5).***

## *2) **அறிவின் வார்த்தை வரம் -** A Word of Knowledge.*

*பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானி. அவர் அனைத்தையும் அறிந்தவர்.*

*பரிசுத்த ஆவியானவரால் இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் அருளப்படும் கர்த்தருடைய அறிவின் ஒரு சிறிய துகள் அறிவின் வார்த்தை எனப்படும். இவை கர்த்தரால் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட மக்களுக்கு அருளப்படுகிற தெய்வீக தகவல்கள். இந்த அறிவு வார்த்தையாக ஜனகளுக்கு உதவும் வகையில் அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.*

*ஒரே சமயத்தில் இரண்டு, மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வரங்கள் ஒரு மனிதனிடத்தில் கிரியை செய்ய முடியும்; சில சமயங்களில் இவற்றில் எத்தனை வாங்கல் கிரியை செய்கின்றன என்று கண்டறிவது மிகவும் கடினம்.*

*இது அறிவின் செய்தி (message of knowledge (NIV)) என்றும் குறிப்பிடப்படுகிறது. இது நாம் சாதாரணமாக அறிந்திராத இயற்கைக்கு அப்பாற்பட்ட தகவல்கள் நமக்கு அருளப்படுவதாகும்.*

***2 இராஜாக்கள் 6:8-12***

> *8அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி, இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளயமிறங்குவேன் என்று தன் ஊழியக்காரரோடே ஆலோசனைபண்ணினான்.*

*குறிப்பு:*

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

*9ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி: இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று சொல்லச் சொன்னான்.*

*10அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து, தனக்குக் குறித்துச்சொன்ன ஸ்தலத்திற்கு மனுஷரை அனுப்பிப்பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக்கொண்டான்.*

*11இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து: நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா என்று கேட்டான்.*

*12அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்: அப்படியில்லை; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான்.*

*ஒவ்வொரு முறையும் சீரிய ராஜா இஸ்ரவேலுக்கு எதிராக திட்டமிடும்போதும் அந்த தகவல்களை பரிசுத்த ஆவியானவர் எலிசாவிற்கு அறிவித்தார்; எலிசா அதை தொடர்ந்து இஸ்ரவேலின் ராஜாவை எச்சரித்தார். சீரிய ராஜா குழம்பினார். தனது படையில் ஒரு உளவாளி இருப்பதாக கருதினார்.*

***1 சாமுவேல் 9:1-27***

*சவுலின் கழுதை எண்டு உள்ளது என்ற தகவலை பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் சாமுவேலுக்கு வெளிப்படுத்தினார்.*

***யோவான் 4:1-26***

*சமாரிய ஸ்த்ரீயோடு உரையாடும்போது அறிவின் வார்த்தை இயேசு பயன்படுத்தினார். அவளுடைய திருமண வாழ்வை குறித்து பரிசுத்த ஆவியானவர் அவருக்கு வெளிப்படுத்தியிருந்தார் (வ 18). இதன் மூலம் எப்படி சில வேளைகளில் இந்த*

*குறிப்பு:*

*அறிவின் வார்த்தை ஆலோசனைகளுக்கு உதவுகிறது என்று நாம் உணர்ந்துகொள்ள முடியும்.*

***மத்தேயு 21: 1-9***

*அறிவின் வார்த்தை மூலம் இயேசு தாம் எருசேமுக்குள் பிரவேசிக்க ஒரு கழுதையை தேர்வு செய்தார். வேறு எப்படி அந்த கழுதை இருக்குமிடத்தை அவரால் அறிந்துகொள்ள முடிந்தது?*

*மேலும் படிக்க -* ***ஆதியாகமம் 1:1-2:25; 1 சாமுவேல் 3:7-15; 2 இராஜாக்கள் 6:8-12; அப்போஸ்தலர் 9:11-12; மத்தேயு 16:16; யோவான் 1:1-3; அப்போஸ்தலர் 5:3-4; அப்போஸ்தலர் 21:11; எபேசியர் 3***

### 3) **ஆவிகளை பகுத்தறியும் வரம் -** *Discerning of Spirits*

*இந்த வாரத்திற்கும் அறிவை உணர்த்தும் வாரத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு, ஆவிகளை பகுத்தறியும் வரம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிகள் உலகத்தின் தகல்வல்களை மட்டும் அருளுவதாகும். இந்த வரத்தின் மூலம் ஒரு இடத்தில் செயல்படுவது நல்ல ஆவிய அல்லது தீய ஆவியா என்று பகுத்தறிய முடியும்.*

***2 இராஜாக்கள் 6 : 13-18***

> *13அப்பொழுது அவன்: நான் மனுஷரை அனுப்பி அவனைப் பிடிக்கும்படி, நீங்கள் போய் அவன் எங்கே இருக்கிறான் என்று பாருங்கள் என்றான்; அவன் தோத்தானில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.*
>
> *14அப்பொழுது அவன் அங்கே குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்துகொண்டார்கள்.*
>
> *15தேவனுடைய மனுஷனின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில், இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக் கொண்டிருக்கக் கண்டான்; அப்பொழுது வேலைக்காரன் அவனை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, என்னசெய்வோம் என்றான்.*

*குறிப்பு:*

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

*16அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான்.*

*17அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.*

*18அவர்கள் அவனிடத்தில் வருகையில், எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: இந்த ஜனங்களுக்குக் கண் மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்றான்; எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார்.*

*எலிசாவின் ஊழியக்கரனின் கண்கள் திறக்கப்பட்டு தூதர்கள் சுற்றிலும் நிற்பதை அறிந்தான். **அப்போஸ்தலர் 16:1-24ல்** தன்னை பின்தொடர்ந்த பெண்ணை குறித்து பவுல், "நல்ல காரியங்களை" பொல்லாத ஆவிகள் பயன்படுத்துகின்றன என்று பகுத்தறிந்தார். ஏசுவும் தாம் குணப்படுத்தின சிலரிடம் என்ன ஆவிகள் செயல்பட்டன என்பதை அறிந்திருந்தார் **(மாற்கு 9: 14-29)**. இயேசு எவ்வாறு பொல்லாத ஆவிகளை விரட்டும்போது அவற்றை பெயர்சொல்லி அழைத்தார் என்று நம்மால் பார்க்க முடிகிறது.*

*எல்லா வியாதிகளும் அவைகளினால் வருவதில்லை என்பதால் வியாதியஸ்தர்களுக்கு ஜெபிக்கும் வேளையிலே இந்த ஆவிகளை பகுத்தறியும் வரம் மிகவும் உதவியாக இருக்கும்.*

*மேலும் படிக்க - **மத்தேயு 9:4; லூக்கா 13:16; யோவான் 2:25; அப்போஸ்தலர் 13:9-10; அப்போஸ்தலர் 16:16; 1 தீமோ. 4:1-4; 1 யோவான் 4:1-6.***

### வல்லமை வரங்கள் - *Power gifts*

*இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் காரியங்களை நடப்பிக்க இந்த வரங்கள் உதவியாக இருக்கும்.*

*குறிப்பு:*

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## 1. **சுகமளிக்கும் வரங்கள் -** *Gifts of healings*

இந்த வரத்தை விவரிப்பது மிகவும் எளிது. எந்த ஒரு மருத்துவ ஈடுபாடும் இன்றி ஒரு வியதியையோ குறைபாடுகளையோ குனமாக்குவதே சுகமளிக்கும் வரங்கள்.

பேதுருவும் யோவானும் தேவாலைய வாசலில் இந்த சுகமளிக்கும் வரத்தை பயன்படுத்துவதை நாம் பார்க்கிறோம்.

***அப்போஸ்தலர் 3:1-9***

*1ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்.*

*2அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டுவந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, நாடோறும் அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள்.*

*3தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான்.*

*4பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள்.*

*அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான்.*

*6அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;*

*7வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான், உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது.*

*8அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*9அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு:*

*இயேசு எண்ணிலடங்கா ஜனங்களை சுகமளிப்பதை பார்க்கிறோம்.*

***மத்தேயு. 8:14-17***

*14இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார்.*

*15அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.*

*16அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்:*

*17அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.*

***மத்தேயு 15:29-31***

*29இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயா கடலருகே வந்து, ஒரு மலையின் மேல் ஏறி, அங்கே உட்கார்ந்தார்.*

*30அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்.*

*31ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும், ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

சுவிசேஷ கூட்டங்களில் இந்த சுகமளிக்கும் வரங்கள் அதிக கிரியை செய்யும். தேவனின் அன்பினால் குனமாக்கப்படுவதை காண்கிற ஜனங்கள் தேவனோடு இன்னும் நெருங்கி சேர அது எதுவாய் இருக்கிறது.

மேலும் படிக்க - ***மாற்கு 16:18; யோவான் 14:12; 1 கொரிந்தியர் 12:9***

*2.* ***அற்புதத்தின் வரம் -*** *Working of miracles*

இயற்கையான நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் மாற்றி அமைப்பதே அற்புதத்தின் வரம்.

மோசே ***யாத்திராகமம்*** *7* முதல் ***யாத்திராகமம் 12*** வரை பத்து அற்புதங்களை நிகழ்த்துகிறார், ***யாத்திராகமம் 12***ல் இஸ்ரவேலர்கள் செங்கடலை கடந்தது மற்றுமொரு அற்புதம். யோசுவா சூரியனை நிற்கும்படி கட்டளையிட்டார் ***(யோசுவா 10)***.

இயேசு ஒரு முறை *5,000* போரையும் ***(மத்தேயு 14:13-21)*** மற்றொரு முறை *4,000* போரையும் ***(மத்தேயு 15:32-39)*** போஷித்தார். மரித்தோரை எழுப்பினார், கடலின்மேல் நடந்தார். இவையாவும் அற்புதங்கள்.

மேலும் படிக்க - ***1 கொரிந்தியர் 15:10,27-31; எபிரேயர் 2:3-4; சங்கீதம் 107; யாத்திராகமம் 7:10-14:21; 2 இராஜாக்கள் 4:1-44; 2 இராஜாக்கள் 6:1-7; மத்தேயு 17:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12.***

*3.* ***விசுவாச வரம் -*** *Faith*

பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் இந்த விசுவாசத்தை நம் வாழ்வில் அருளுகிறார். நமது பொதுவான விசுவாசம் அதன் உச்ச நிலையை எட்டும்போது இந்த விசுவாச வரம் கிரியை செய்ய ஆரம்பிக்கிறது. ஆனாலும், பரிசுத்த ஆவியானவர் இந்த வரத்தை நமக்கு அளிக்கிறபடியால், அவர் எந்த நேரத்திலும் இந்த வரத்தை அருள முடியும்.

நாம் விரும்புவதை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள இந்த விசுவாச வரம் நமக்கு உதவுகிறது. தானியேலின் வாழ்வில் சில வேளைகளில் இந்த விசுவாச வரம் கிரியை செய்ததை நம்மால் பார்க்க முடிகிறது.

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***தானியேல் 6:16-23***

*16அப்பொழுது ராஜா கட்டளையிட, அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து, அவனைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான்.*

*17ஒரு கல் கெபியினுடைய வாசலின்மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது; தானியேலைப்பற்றிய தீர்மானம் மாற்றப்படாதபடிக்கு ராஜா தன் மோதிரத்தினாலும் தன் பிரபுக்களின் மோதிரத்தினாலும் அதின்மேல் முத்திரைபோட்டான்.*

*18பின்பு ராஜா தன் அரமனைக்குப்போய், இராமுழுதும் போஜனம்பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்தான்; அவனுக்கு நித்திரையும் வராமற்போயிற்று.*

*19காலமே கிழக்கு வெளுக்கும்போது ராஜா எழுந்திருந்து, சிங்கங்களின் கெபிக்குத் தீவிரமாய்ப் போனான்.*

*20ராஜா கெபியின் கிட்டவந்தபோது, துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான்.*

*21அப்பொழுது தானியேல்: ராஜாவே, நீர் என்றும் வாழ்க.*

*22சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான்.*

*23அப்பொழுது ராஜா தன்னில் மிகவும் சந்தோஷப்பட்டு, தானியேலைக் கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான்; அப்படியே தானியேல்*

*குறிப்பு:*

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

*கெபியிலிருந்து தூக்கிவிடப்பட்டான்; அவன் தன் தேவன்பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை.*

*தானியேல் சிங்க கெபியிலே போடப்பட்டார். தானியேலோ கெபியிலே தள்ளப்படுவதற்கு எதிர்ப்போ வருத்தமோ தெரிவிக்கவில்லை. இது இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசம் அவருடைய வாழ்வில் கிரியை செய்ததன் விளைவே. அந்த சிங்கங்களின் வாய் கட்டப்பட்டது.*

*இயேசு எப்பொழுதும் விசுவாசத்திலே நடந்தார் ஆகவே அவருடைய வாழ்வில் தனிப்பட்ட விசுவாசத்தையும் விசுவாச வரத்தையும் தனித்தனியே அடையாளம் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.*

***லூக்கா 4:27-30***

*27அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*28ஜெபஆலயத்திலிருந்த எல்லாரும் இவைகளைக் கேட்டபொழுது, கோபமூண்டு,*

*29எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள்.*

*30அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்.*

*இந்த இடத்தில் ஜனங்கள் இயேசுவை மலையின் மேலிருந்து கீழே தள்ள வகை தேடினார்கள்; அவர் எப்படி அங்கிருந்து தப்பித்தார் என்று கவனித்தீர்களா? அவரை தடுத்து நிறுத்தும் வலிமை அவர்களிடம் இல்லை. விசுவாச வரம் சீல்படுகிற இடத்தில் பொதுவாகவே அற்புதங்கள் நடக்கும்.*

*மேலும் படிக்க - **ரோமர் 4:17; யாக்கோபு 1:5-8; மத்தேயு 17:20; மத்தேயு 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபிரேயர் 11:6; எபிரேயர் 12:1-3.***

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**வாய்மொழி வரங்கள் -** *Vocal gifts.*

இந்த வரங்கள் நமக்கு தெய்வீக வார்த்தைகளை அளிக்கும். இந்த வரங்கள் நாவை கொண்டு செயல்படும்.

*1.* **தீர்க்கதரிசன வரம் -** *Gift of prophecy.*

இந்த வரம், கர்த்தரின் சார்பில் ஜனங்களிடம் பேசுவதாகும். கர்த்தர் கூறுவதை கேட்டு அதை பிரகடனப்படுத்துதல். நாம் நல்லொழுத்தில் சீரடையவும், நம்மை வளர்க்கவும், புத்திமதி அளிக்கவும், தேற்றவும் இந்த தீர்க்கதரிசன வரம் செயல்படும்.

நமது பிரசங்கம், பாடல் பாடுதல்; ஏன், பேசுவது கூட தேவன் கூறுவதை கேட்டு நாம் உரைக்கும்போது அவை தீர்க்கதரிசனமாகலாம்.தேவ அபிஷேகம் நம்மேல் வரும்போது சில வேளைகளில் தீர்க்கதரிசனம் உரைக்க வைக்கும்.

***எண்ணாகமம் 11:16-30***

*16அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய்.*

*17அப்பொழுது நான் இறங்கிவந்து அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்.*

*18நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம்பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்குச் சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே; ஆகையால், நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார்.*

*19நீங்கள் ஒருநாள், இரண்டுநாள், ஐந்துநாள், பத்துநாள், இருபதுநாள் மாத்திரமல்ல,*

குறிப்பு:

______________________________________________________________________________

*20ஒரு மாதம்வரைக்கும் புசிப்பீர்கள், அது உங்கள் மூக்காலே புறப்பட்டு, உங்களுக்குத் தெவிட்டிப்போகுமட்டும் புசிப்பீர்கள், உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார்.*

*21அதற்கு மோசே: என்னோடிருக்கிற காலாட்கள் ஆறுலட்சம்பேர்; ஒருமாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே.*

*22ஆடுமாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்குப் போதுமா? சமுத்திரத்து மச்சங்களையெல்லாம் அவர்களுக்காகச் சேர்த்தாலும் அவர்களுக்குப் போதுமா என்றான்.*

*23அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ? நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார்.*

*24அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான்.*

*25கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர்மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள்.*

*26அப்பொழுது இரண்டுபேர் பாளயத்தில் இருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத், மற்றவன்பேர் மேதாத்; அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும், கூடாரத்துக்குப் போகப் புறப்படாதிருந்தார்கள்; அவர்கள்மேலும் ஆவி வந்து தங்கினதினால், பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

*27ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவித்தான்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*28உடனே மோசேயினிடத்தில் உள்ள வாலிபரில் ஒருவனும் அவனுடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனுமாகிய யோசுவா பிரதியுத்தரமாக: என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும் என்றான்.*

*29அதற்கு மோசே: நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்.*

*30பின்பு, மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பாளயத்திலே வந்து சேர்ந்தார்கள்.*

***1 இராஜாக்கள் 22:1-28 – அதிகாரத்தை படிக்கவும்***

***அப்போஸ்தலர் 21:9-14***

*9தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்.*

*10நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்.*

*11அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.*

*12இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போகவேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம்.*

*13அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.*

குறிப்பு:

*14அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.*

இந்த வரம், கர்த்தரின் சார்பில் ஜனங்களிடம் பேசுவதாகும். கர்த்தர் கூறுவதை கேட்டு வேத வசனங்களை பார்க்கும்போது, பரிசுத்த ஆவி அவர்களுக்கு அருளப்பட்டு ஜனங்கள் பேசுகிறார்கள். நாம் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அவர் நம்மை தீர்க்கதரிசனம் உரைக்க வழிநடத்துகிறார். நமது ஜெப வேளைகளில் இது சாதாரணமாக செயல்படும் வரமாக இருக்க வேண்டும்.

மேலும் படிக்க - ***அப்போஸ்தலர் 3:21; அப்போஸ்தலர் 11:28; அப்போஸ்தலர் 21:11; 2 பேதுரு 1:21; 1 கொரிந்தியர் 14:23-32.***

## 2. ***நவமான / அந்நிய பாஷையின் வரம் -*** *Different kinds of tongues*

நாம் படித்திராத பிற தேசத்தின் மொழிகளிலோ தூதர் பாஷைகளிலோ பேசம் திறனை பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளுவதே நவமான / அந்நிய பாஷையின் வரம்.

***1 கொரிந்தியர் 13:1***

*நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன்.*

***மாற்கு 16:17***

*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*

***அப்போஸ்தலர் 2:3-11***

*3அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.*

*4அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

குறிப்பு:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

*5வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.*

*6அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.*

*7எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?*

*8அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?*

*9பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா,*

*10பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லிபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும்,*

*11கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்.*

***அப்போஸ்தலர் 10:44-48***

*44இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிகொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.*

*45அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும்,*

*46பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*47அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதாபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,*

*48கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.*

***அப்போஸ்தலர் 19:1-10***

*1அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:*

*நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.*

*3அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.*

*4அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.*

*5அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*6அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

*7அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டுபேராயிருந்தார்கள்.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*8பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக்குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக்கொண்டுவந்தான்.*

*சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டுவந்தான்*

*10இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.*

*பாஷைகளை பேசுவது நம் ஜெப வாழ்வை வியத்தகுவகையில் நடத்துகிறது. புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியை எழுதிய பவுல் அதிகமாக பாஷைகளை பேசினார்!*

***1 கொரிந்தியர் 14:18***

*உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.*

*தம்மை விசுவாசிக்கிறவர்களின் அடையாளமாக நவமான பாஷைகளை பேசுவார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார்.*

***மாற்கு 16:17***

*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*

*அந்நிய பாஷைகளில் பேசுவது புதிய ஏற்பாட்டு சபைக்கு கொடுக்கப்பட்ட வரம்.*

***1 கொரிந்தியர் 14:13-15.***

*13அந்தப்படி, அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.*

*குறிப்பு:*

*14என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.*

*15இப்படியிருக்க செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.*

நாம் அறிகிறபடி ஜெபிப்பது நம்முடைய தாய் மொழியில் ஜெபிப்பதாகும்; பரிசுத்த ஆவி அருளிய நாம் அறியாத மொழியால் ஜெபிப்பது ஆவியினால் ஜெபிப்பதாகும். வேத வாக்கியங்கள் இரண்டையும் செய்வதற்கு நம்மை ஊக்கப்படுத்துகின்றன.

பரிசுத்த ஆவியினால் ஜெபிப்பது, நாம் அறியாத / நமக்கு புரியாத காரியங்களுக்காக ஜெபிப்பதற்கு உதவும். ஆயினும், பரிசுத்த ஆவியானவர் அனைத்தையும் அறிந்திருக்கிற பிரகாரம், நம்முடைய நாவின் மூலமாய் அவர் ஜெபிப்பது மிகவும் துல்லியமாக இருக்கும்.

***ரோமர் 8:26-28***

*26அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.*

*27ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

*28அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.*

பரிசுத்த ஆவியினால் ஜெபிப்பது நம்மை ஆவிக்குரிய வாழ்விலும் வளரச்செய்கிறது. கர்த்தருடைய அன்பில் நிலைக்க செய்கிறது. நாம் ஆவிக்குரிய வழியில் வளர விரும்பினால் அதிக நேரம் பரிசுத்த ஆவியினால் நாம் ஜெபிக்க வேண்டும்.

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***யூதா 20-21***

> *20நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி,*
>
> *21தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப்பெறக் காத்திருங்கள்*

*மேலும் படிக்க - **ஏசாயா 28:11; மாற்கு 16:17; அப்போஸ்தலர் 2:4; அப்போஸ்தலர் 10:44-48; அப்போஸ்தலர் 19:1-7; 1 கொரிந்தியர். 12:10,28-31; 1 கொரிந்தியர் 13:1-3; 1 கொரிந்தியர் 14:2,22,26,27-32**.*

3. **வியாக்கியானம் பண்ணும் வரம் -** *Interpretation of tongues.*

*நாம் பாஷைகளில் ஜெபிக்கும்போது தேவனை அதற்க்கு வியாக்கியானம் அருளும்படி ஜெபிக்கலாம்.*

***1 கொரிந்தியர். 14:13,***

> *அந்தப்படி, அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.*

*ஏனெனில், பாஷைகளில் ஜெபிக்கும்போது நாம் பரிசுத்த ஆவியினாலே ஜெபிக்கிறோம்; அதை வியாக்கியானம் பண்ணும்போது உண்மையில் நாம் தீர்க்கதரிசனம் உரைப்பதைபோல தேவனுடைய இருதயத்தை அறிவிக்கிறோம்*

*மேலும் படிக்க - **1 கொரிந்தியர் 12:10; 1 கொரிந்தியர் 14:5,13-15,27-28**.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

*குறிப்பு:*

# *10.* சுகமளிக்கும் வரங்கள்

*பாவம் எல்லா வியாதிகளுக்கும் காரணமல்ல!!*

***யோவான் 9:3,***

> *இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான்.*

*நோய்கள், வியாதிகள் மற்றும் பலவீனங்கள் எல்லா மனிதனுக்கும் சாதாராணமாக ஏற்படக்கூடியவை.*

*விசுவாசிகளுக்கும் இவை ஏற்படும். இவை மனிதன் பாவத்தில் விழுவதினால் வரும் பலன். ஆனால், ஒருவன் பாவம் செய்ததால்தான் வியாதியில் இருக்கிறான் என்று நினைப்பது தவறு,*

*சில வேளைகளில் பாவத்தினிமித்தம் வியாதிப்படுபவர்களும் உண்டு; இயேசு ஒருமுறை கூறும்போது* ***"அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்" (யோவான் 5:14)***

***மாற்கு 16: 18***

> *சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக்குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்."*

*நாம் கைகளை வைக்கும்போது வியாதிகள் சொஸ்தமாகும் என்று இயேசு நமக்கு கொடுத்த மாபெரும் பொறுப்பாகிய great commission-ல் மாற்கு சுவிசேஷத்தில் சொல்லப்படிருக்கிறது.*

*தேவனை, அவருடைய வல்லமையினால் ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட வரமே சுகமளிக்கும் வரங்கள்.*

*குறிப்பு:*

கவனியுங்கள், இது சுகமளிக்கும் வரம் *(gift of healing )* அல்ல சுகமளிக்கும் வரங்கள் *(Gifts of the healing).*

இயேசு இந்த பூமியில் இருந்தபோது பற்பல சுகமளிக்கும் அற்புதங்களை ஜனங்கள் மத்தியில் செய்திருக்கிறார்.

***மத்தேயு 9:35***

> பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

***மாற்கு 6:56***

> அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமங்கள் பட்டணங்கள் நாடுகள் எவைகளோ, அவைகளின் சந்தைவெளிகளிலே வியாதிக்காரரை வைத்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

இயேசுவின் பிரசன்னத்தில் இருந்த ஒருவராலும் மரிக்க முடியவில்லை. அவர் சென்ற எல்லா இறுதி சடங்குகளையும் *(funeral)* குலைத்துப்போட்டார், தனது இறுதி சடங்கிலும்கூட *(funeral)*

None could die in the presence of Jesus and He messed up every funeral He went including His own!

***அப்போஸ்தலர் 10:38***

> நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***1 யோவான் 3:8***

*பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.*

## ***இயேசு ராஜ்யத்தை குறித்து பிரசங்கிக்கும்படி தமது சீஷர்களுக்கு கட்டளையிட்டார்.***

### ***Jesus commissioned His disciples to preach the Kingdom***

***மத்தேயு 10:7-8***

*7போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.*

***8****வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள்.*

***லூக்கா 9:1-2***

***1****அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,*

***2****தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.*

***லூக்கா 9****-வது அதிகாரத்தில் சீஷர்கள் தவறின போதும், வேறு 70 பேரை மீண்டும் அனுப்பிவைக்கிறார்.*

***லூக்கா 10: 1***

*இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.*

குறிப்பு:

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

*தமது உயித்தெழுதலுக்கு பிறகு நம் அனைவருக்கும் இந்த கட்டளையை கொடுக்கிறார்.*

***மத்தேயு 28:19-20***

> ***19****ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*
>
> ***20****நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

***மாற்கு 16:15-20***

> ***15****பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.*
>
> ***16****விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*
>
> ***17****விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*
>
> ***18****சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக்குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.*
>
> ***19****இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்.*

குறிப்பு:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

*20அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.*

*தேவனுடைய சுகமாக்கும் வல்லமை ஆதித்திருச்சபை விசுவாசிகள் மூலமாய் அந்த சபைகளில் தேவனால் தொடரப்பட்டது..*

***அப்போஸ்தலர் 3:1-10*** *பிறந்ததுமுதல் முடமான ஒருவரை பேதுரு சுகமாக்குகிறார்.*

***அப்போஸ்தலர் 5:16*** *எருசலேமை சுற்றி உள்ள பட்டணங்களில் வியாதியஸ்தர்களையும் அசுத்த ஆவிகளினால் வாதிக்கப்பட்டவர்களையும் அப்போஸ்தலர்கள் சுகமாக்கினார்கள்.*

***அப்போஸ்தலர் 8:7*** *அனேக அசுத்த ஆவிகளையும் திமிர்வாதக்காரரையும் சப்பாணிகளையும் சமாரியா பட்டணத்திலே பிலிப்பு சுகமாக்கினார்.*

***அப்போஸ்தலர் 14:8-10*** *பிறந்ததுமுதல் முடமான ஒருவரை பவுல் சுகமாக்குகிறார்.*

***அப்போஸ்தலர் 19:12***

*அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.*

***அப்போஸ்தலர் 28:8-9*** *மால்தா தீவிலே பவுல் வியாதிப்பட்ட ஒருவனை குணமாக்கினார்; பின்னர் அவரிடம் கொண்டுவரப்பட்ட யாவரையும் அவர் குணமாக்கினார்.*

*அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் பரிசுத்த ஆவியானவர் சுகமளிப்பதர்காக பயன்படுத்திய நபர்களை கீழே காண்போம்.*

1. *பேதுருவும் யோவானும் (அப்போஸ்தலர்கள்)* ***அப்போஸ்தலர் 3:1-11****.*
2. *பேதுரு (அப்போஸ்தலர்)* ***அப்போஸ்தலர் 5:15.***
3. *பிலிப்பு (சுவிசேஷகர்)* ***அப்போஸ்தலர் 8:5-7.***
4. *அனனியா (விசுவாசி - unknown believer)* ***அப்போஸ்தலர் 9:17-18****.*
5. *பேதுரு (அப்போஸ்தலர்)* ***அப்போஸ்தலர் 9:32-34.***

*குறிப்பு:*

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

*6. பவுல் (அப்போஸ்தலர்)* ***அப்போஸ்தலர் 14:8-10****.*

*7. பவுல் (அப்போஸ்தலர்)* ***அப்போஸ்தலர் 28:7-9.***

*அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் குணமாக்கப்பட்ட வியாதிகள் நோய்கள் மற்றும் பெலவீனங்கள்:*

*1. முடம் (பெலவீனம்)* ***அப்போஸ்தலர் 3:2.***

*2. பிணிகள் (நோய்)* ***அப்போஸ்தலர் 5:16.***

*3. திமிர்வாதம் (paralysis), முடம் (பெலவீனம்)* ***அப்போஸ்தலர் 8:7.***

*4. பார்வையற்ற நிலை (வியாதி அல்லது பெலவீனம்)* ***அப்போஸ்தலர் 9:17-18.***

*5. திமிர்வாதம் (paralysis)* ***அப்போஸ்தலர் 9:33.***

*6. முடம் (பெலவீனம்)* ***அப்போஸ்தலர் 14:8-10.***

*7. காய்ச்சல் (நோய்), பேதி (வியாதி)* ***அப்போஸ்தலர் 28:8.***

*சுகமளிக்கும் வரங்களினால் குணப்படுத்த முடியாத நோய்களோ, வியாதிகளோ, பெலவீனன்களோ இல்லை என்று இவற்றை கொண்டு நாம் தைரியமாக கூற முடியும்,*

## ***யாவரும் சுகமாகும்படி இந்த சுகமளிக்கும் வரங்களை கர்த்தர் அருளினாரா?***

*எல்லா விசுவாசிகளும் வியாதிகளும் பெலவீனங்களும் நீங்கும்படி இந்த வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது வேதத்தின் அடிப்படையில் தவறான கூற்று.*

*சுகமளிக்கும் வரங்கள் கர்த்தருடைய பிரத்தியேக திட்டத்திற்கென்று கொடுக்கப்பட்டவை. அந்த திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றால் இந்த வரங்களை செயல்படுத்த முடியாது.*

*இந்த உண்மைக்கு ஆதரவாக இருக்கும் சில வேத பகுதிகளை பாப்போம்.*

***1 கொரிந்தியர் 12:9***

> *வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,*

*கொரிந்து சபையில் சிலர் சுகமளிக்கும் வரங்களை பெற்றிருக்கிறார்கள் என்று கூறுகிறார். ஆனாலும், சிலர் வியாதியஸ்தரும் பெலவீனருமாய் இருக்கிறார்கள்*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*என்றும் அநேகர் மறித்தும் போனார்கள் என்றும் தொடர்ந்து அதே கடிதத்தில் குறிப்பிடுகிறார்*

***1 கொரிந்தியர் 11:30***

> *இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*

*மனந்திரும்பாமல் பாவம் செய்வதே இந்த வேதனைகளின் காரணமாகும்.*

*அதே போல **1 கொரிந்தியர் 5:4-5***

> *4நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில்,*
>
> *5அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்.*

*பாவம் செய்த சகோதரனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பகீரங்கமாக பவுல் கொரிந்து சபைக்கு கட்டளையிடுகிறார்; ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாளில் அவனுடைய சரீரம் மறித்து ஆவி பிழைக்கும்படி சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.*

*சில வேளைகளில் விசுவாசியின் வாழ்வில் பொதுமக்கள் அறியும் வண்ணம் பாவம் செய்யும்போதும் மனந்திரும்பாமல் பாவத்தில் இருக்கும்போதும் கர்த்தர் அவர்களை வியாதிக்கும் பெலவீனத்துக்கும் , ஏன் வேதனையிநிமித்தம் மரணத்துக்கும் ஒப்புக்கொடுக்க முடிவெடுக்கிறார் என்று நாம் இதிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும்.*

*மேலும் இந்த கருத்து **1 யோவான் 5:16-17**ல் சொல்லப்பட்டுள்ளது.*

> *16மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு*

குறிப்பு:

*ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே;* ***மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்***.

*17அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு.*

*இதில், மரணத்துக்கேதுவான பாவம் செய்கிற விசுவாசிக்காக ஜெபிக்க வேண்டாம் என்று யோவான் கூறுகிறார்.*

*பிணியாளிகளை எண்ணெய்பூசி ஜெபிக்க வேண்டும் என்று கூறும் போது யாக்கோபும் இதே கருத்தை அறிவிக்கிறார்* ***யாக்கோபு 5:14-15*** *"****அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்****.". இன்னும் இதை அழுத்தமாக ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று காப்பவன் அநேக பாவங்களை மூடுவான் என்று (வ 19-20) குறிப்பிடுகிறார்.*

***2 கொரிந்தியர் 12:7-10***

*7அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது*

*8அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.*

*9அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்*

*10அந்தப்படி நான் பலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.*

*குறிப்பு:*

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

*எல்லாரைப்பார்கிலும் அதிகமான சுகமளிக்கும் வரங்களை பெற்றிருந்தார் பவுல் **(அப்போஸ்தலர் 19:11-12)**. அவரால் கூட தன்னை குணப்படுத்திக்கொள்ள முடியவில்லை. மூன்று முறை தனது சரீரத்தில் உள்ள முல்லை எடுத்துப்போடும்படி கர்த்தரிடத்தில் உருக்கமாக வேண்டின போதும், தேவன் அவருக்கு அருளவில்லை. சிலர் அது ஒரு வியாதி அல்ல அசுத்த ஆவியின் பிடி என்று கூட சொல்வதுண்டு, அதுவும் ஒருவகையில் உண்மையே.*

*இருந்தாலும், இந்த ஒரு துன்புறுத்தல் சரீரத்தில் ஒரு பெலவீனமாக வெளிப்பட்டது (**வ 9**).*

*கிறிஸ்துவின் பெலன் பவுலிடத்தில் தங்கியிருக்கும்படி கர்த்தர் அவரை குணப்படுத்தாமல் வலியை அனுமதித்தார். **கர்த்தர் சுகத்திற்கு பதில் கிருபையையும் அளிக்கிறவர்.***

***பிலிப்பியர் 2:26-27***

> *26அவன் உங்கள் எல்லார் மேலும் வாஞ்சையுள்ளவனும், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே, மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான்.*
>
> *27அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்.*

*பவுலின் உடன் ஊழியனாகிய எப்பாப்பிராத்து மரணத்தை நெருங்கினபோது கர்த்தருடைய இறக்கம் அவனை குணப்படுத்தியது. தனது நெருங்கிய சகோதரனை இழந்துவிடுவோமோ என்று பவுல் கூட பயந்தார்; பவுலுக்கு சுகமளிக்கும் வரம் இருந்தால் ஏன் அதை அவர் எப்பாப்பிராத்து குனமடையும்படி பயன்படுத்தவில்லை?*

*தனக்கு சுகமளிக்கும் வல்லமை உண்டு என்று பவுல் அறிந்திருந்தால் எதற்கு அவர் பயப்படுகிறார்?*

*இதற்கு ஒரே ஒரு பதில் மட்டும் தான் உண்டு. சுகமளிக்கும் வரம் சில குறிப்பிட்ட தருணங்களிலும் நோக்கத்திற்காகவும் மாத்திரம் பயன்படும்படி கர்த்தர் தேர்வு செய்ததினாலே எப்பாப்பிராத்துவை குணப்படுத்த அந்த வரத்தை பயன்படுத்த*

*குறிப்பு:*

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

முடியவில்லை. ஆகவே தான் பவுல் தனது சகோதரனை குணப்படுத்த அவருக்கு அருளப்பட்ட வரத்தை பயன்படுத்த முடியவில்லை. இந்த மனிதனின் விதி தேவனிடத்தில் மாத்திரமே இருக்கிறது என்று அந்த சூழ்நிலையில் பவுல் அறிந்திருந்தார்; ஆகவே தான் கர்த்தர் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க சித்தமாயிருக்கிறாரோ என்று பயந்திருந்தார்.

***1 தீமோத்தேயு 5:23***

> *நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம்குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்.*

பவுல் தீமோத்தேயுவிடம் தனது வயிற்றிற்காக கொஞ்சம் திராட்ச ரசமும் அருந்தும்படி அறிவுறுத்துகிறார். அப்போஸ்தலர் 19ல் நாம் பார்க்கும்போது பவுல் தொட்ட துணியை பிறர் குனமடையும்படி அனுப்பிவைக்கிறார். அதே போல ஒரு துணியை இந்த கடிதத்தோடு ஏன் பவுல் தீமோத்தேயுவுக்கு அனுப்பிவைக்கவில்லை? எப்பாப்பிராத்து-வின் பகுதியில் பார்த்த அதே காரணத்தினால் தான். தீமோத்தேயுவின் குணப்படுத்தல் கர்த்தரின் திட்டத்தை தள்ளிவைத்துவிடும். இது தேவ மகிமைக்கென தீமோத்தேயு சகித்துக்கொள்ளும்படி அவனுக்கு கர்த்தர் அனுமதித்தார்.

***2 தீமோத்தேயு 4:20***

> *எரஸ்து கொரிந்துபட்டணத்தில் இருந்துவிட்டான்; துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்.*

மிலேத்துவில் மற்றுமொரு உடன் ஊழியரை வியாதியினிமித்தம் தன்னோடு அழைத்து செல்ல முடியாமல் பவுல் விட்டுச்சென்றார். பவுலுக்கு சுகமளிக்கும் வல்லமை உண்டெனில் ஏன் அந்த ஊழியரை விட்டுச்செல்ல வேண்டும்? இந்த முறையும் பவுல் தனது வரங்களை பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை ஏனெனில், சுமளிக்கும் வரங்கள் உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு இந்த சூழல் ஏற்றதாக இல்லை. பவுல் அந்த ஊழியரை வியாதியோடு விட்டுச்செல்ல வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருந்தது.

சுகமளிக்கும் வரங்கள் சுகத்தை பெற்றுக்கொள்பவரின் விசுவாசத்தை பொறுத்தது அல்ல.

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*பல வேளைகளில் சுகமளிக்கும் வரங்கள் பயனளிக்காததற்கு அந்த வியாதியஸ்தரின் விசுவாசம் போதுமானதாக இல்லை என்று காரணம் சொல்லி விவாதிப்பது உண்டு. இதுவும் ஒரு தவறான கூற்று, இதற்கு ஆதாரமாக எந்த ஒரு வேத வசனமும் இல்லை.*

*நன்றாக புரிந்துகொள்ளுங்கள், விசுவாசத்துக்கும் சுகமளிப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்று நான் சொல்லவில்லை; விசுவாசம் பல வேளைகளில் குணமாக்குவதற்கு ஒரு முக்கிய பங்கு வகித்தாலும் அது ஒரு அடிப்படை தேவை இல்லை.*

***மாற்கு 2:1-12,** திமிர்வாதக்காரனின் நண்பர்களுடைய விசுவாசத்தை கண்டு இயேசு அவனை குணமாக்கினார்.*

***அப்போஸ்தலர் 3:1-4**ல், பேதுரு முடமான மனிதனை குணப்படுத்தியபோது, பேதுரு என்ன செய்யப்போகிறார் என்று அவன் சற்றும் அறியாதிருந்தான், அவனுடைய விசுவாசத்தை குறித்தோ எந்த ஒரு குறிப்பும் இல்லை. பேதுரு அவனை எழும்பி நிற்க மாத்திரமே சொன்னார், ஆவியானவர் அவன் எழும்பும்படி கட்டுப்படுத்தமுடியாத வாஞ்சையை அவனுக்குள் அருளி அவனும் அவனை அறிந்தவர்களும் ஆச்சரியப்படும்படி எழும்பி நிற்கவும் நடக்கவும் செய்தார். எந்த விசுவாசமும் இல்லை கர்த்தருடைய கிரியை மாத்திரமே. இதுவே பலர் குணமடைய கிரியை செய்யும் சுகமளிக்கும் வரங்களின் பரவலான செயல்பாடு.*

*சுகமளிக்கும் வரங்கள் எல்லாவித பிணிகளையும் குறைகளையும் குணமாக்க வல்லமை பெற்றவை. கர்த்தரால் அவற்றை கொண்டு குணப்படுத்த முடியாத எந்த ஒரு குறைபாடோ, வியாதியோ, பெலவீனமோ இல்லை. நமது ஆண்டவரின் ஊழியத்தில் இதைக்குறித்து நாம் பார்க்கிறோம், அவர் தம்மிடத்தில் வந்த யாவரையும் குணப்படுத்தினார்.*

***மத்தேயு 4:24***

> *அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார்.*

*குறிப்பு:*

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

***மத்தேயு 9:35-36***

> ***35**பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.*
>
> ***36**அவர், திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,*

எந்த சூழ்நிலையில் இருந்தவர்களானாலும், தங்களிடத்தில் கொண்டுவரப்பட்ட யாவரையும் அப்போஸ்தலர்களால் குணப்படுத்த முடிந்தது.

***அப்போஸ்தலர் 5:16***

> *சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.*

***அப்போஸ்தலர் 28:8-9***

> ***8.** புபிலியுவினுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன்மேல் கைகளை வைது, அவனைக் குணமாக்கினான்.*
>
> ***9.** இது நடந்தபின்பு, தீவிலே இருந்தமற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள்.*

இயற்கையாய் சுகமாக்கும் சக்திக்கு பதிலாக சுகமளிக்கும் வரங்கள் கொடுக்கப்படவில்லை.

உலகத்தின் மருத்துவர்களின் பணிக்கு மாற்று வழியை உண்டாக்கும் வேண்டும் என்ற நோக்கத்தில் கர்த்தர் நமது உடலை வடிவமைக்கவில்லை. மனிதன் தனது உடலை குறித்த அறிவில் முன்னேறவும் அதை தானே குணப்படுத்தவும் தேவன்

குறிப்பு:

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

*அனுமதித்திருக்கிறார். இந்த அறிவையும் ஞானத்தையும் நாம் பயன்படுத்தி ஆரோக்கியமான வாழ்வை வாழ தேவன் விரும்புகிறார்.*

***கொலோசெயர் 4:14***

> *பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.*

*"பிரியமான வைத்தியன்" என்று லூக்கா-வைகுறித்து பவுல் குறிப்பிடுகிறார். பவுலின் ஒரு முக்கியமான உடன் ஊழியரான லூக்கா, ஒரு வைத்தியராக பணி செய்து தனது சிகிச்சையால் பலன் பெற்ற அனைவரின் அன்பையும் சம்பாதித்தவர். பலர் அறியாத காரியம் என்னவெனில், பவுலின் காலத்தில் இருந்த மருத்துவ சிகிச்சைகளை 1940 வரை நவீன மருத்துவத்தால் விஞ்சமுடியவில்லை.*

*கிறிஸ்தவர்கள் விசுவாசித்தால்போதும் சொஸ்தமாகிவிடுவார்கள் என்று தேவன் எப்போதும் சொல்லவில்லை. மருத்துவர்களை பார்க்க வேண்டாம் என்றும் தேவன் கிறிஸ்தவர்களை சொல்லவில்லை.*

*சுகமளிக்கும் வரங்கள் எப்பொழுதும் உடனுக்குடன் குணப்படுத்தும்.*

*இந்த வரத்தினால் குணப்படுத்தப்பட்ட ஒருவர் உடனடியாகவும் பரிபூரணமாகவும் குணமடைந்து விடுவார். பிறப்பிலிருந்து நடக்கமுடியாத ஒருவரை எடுத்துக்கொள்ளுங்கள். அவனுக்கு நடப்பதற்கான திறன் மாத்திரம் அளிக்கப்படவில்லை, அந்த திறனை பயன்படுத்துவதற்கான அறிவையும் அளிக்கிறது. நாம் பிறந்தபோதே நடப்பதில்லை, வளர்கிற பருவத்தில் முயற்சித்தும் சில வேளைகளில் தவறியும் நடக்க கற்றுக்கொள்கிறோம். இந்த வரங்களினால் சுகத்தை பெற்றுக்கொண்டவர்கள் தங்கள் பிரச்சனை சரிசெய்யப்படுவது மாத்திரம் அல்ல, தங்கள் வாழ்வில் அதை பயன்படுத்துவதற்கான அனுபவத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள்*

*சில வேளைகளில் மருத்துவத்தில் திருப்புமுனை ஏற்பட்டு பிறப்பில் பார்வையற்ற ஒருவர் பார்வையடைய முடியும். அவர்களால் ஒளியை காண முடிந்தாலும், ஒரு மனிதனையும் மரத்தையும் வேறுபடுத்துவதற்கு கொஞ்சம் காலமாகும். ஒரு பிறந்த குழந்தையை போல, அவர்களுக்கு எந்த ஒரு முன் குறிப்போ அல்லது அனுபவமோ அவர்களுக்கு அதை வேறுபடுத்திக்காட்டும்படி இருக்காது. ஆனால், தேவன் ஒருவரை*

*குறிப்பு:*

*குணப்படுத்தும்போது இந்த அனைத்து காரியங்களும் ஞானமும் அறிவும் குனமாக்கப்படும் அந்த நிமிடத்தில்தானே அருளப்பட்டுவிடும்.*

*சுகமளிக்கும் வரங்கள் என்றுமே பணத்தை எதிர்பார்ப்பதில்லை.*

*பல கோடி மதிப்புள்ள ஊழியங்களை கட்டுவதற்கோ, தனிப்பட்ட வங்கி கணக்குகளை நிரப்புவதற்கோ, ஒருவரை பிரபலமாக்குவதற்கோ இந்த சுகமளிக்கும் வரங்கள் பயன்படுத்தப்படவில்லை. சுகமளிக்கும் ஊழியர்களின் இந்த மாதிரியான நடவடிக்கைகள் வளர்ந்து வருகிற பெரும் பிரச்சனையாக இருக்கிறது.*

*தேவன் இன்று மக்களை குணப்படுத்துகிறாரா?*

*பதில், "ஆம்".*

*எல்லாரும் எப்போதும் குணமடைவது கர்த்தருடைய சித்தமா?*

*இல்லை. தேவன் சில வேளைகளில் விசுவாசிகள் வாழ்வில் வியாதிகள் காயங்கள் மூலமாக தமது நோக்கத்தை நிறைவேற்ற விரும்புகிறார்.*

*தேவாலயத்தின் முன் முடமாயிருந்து பேதுருவால் குணப்படுத்தப்பட்ட மனிதனை நினைவில் கொள்ளுங்கள் **(அப்போஸ்தலர் 3:1-10).** அவன் 38 வருடங்கள் இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோதும் அவன் நடக்க முடியாமல்தான் இருந்தான்; இயேசு அவனை பலமுறை கடந்து சென்றிருக்கக்கூடும்; நிச்சயமாக வருடத்தில் மூன்று முறை கடந்து சென்றிருப்பார். ஆனாலும், அவனை குணப்படுத்த அவர் முற்படவில்லை. ஏன்?*

*அதில் தேவனுடைய நோக்கத்தை இயேசுவினால் காண முடிந்தது. பேதுரு பின்னர் அவனை குணப்படுத்துவதையும் பலர் அதினால் இரட்சிக்கப்படுவதையும் அவரால் காண முடிந்தது.*

*பெதஸ்தா குளத்தில் **(யோவான் 5)** அநேகர் இருந்தபோதும் இயேசு ஒருவரை மாத்திரமே குணமாக்கினார்.*

*ஆக நான் எப்படி குணப்படுத்துவது? அல்லது வியாதியில் ஒருவர் இருக்கும்போது நான் என்ன செய்ய வேண்டும்?*

*வியாதியஸ்தர்களை குணப்படுத்துங்கள்!*

*குறிப்பு:*

*ஜெபித்து ஆண்டவர் என்ன கூறுகிறார் என்பதை அறிந்து அதை செய்யுங்கள்.*

*இயேசுவும் அதையே செய்தார்.*

*நாம் இயேசு கிறிஸ்துவைப்போல் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம். அவர் எப்பொழுதும் சுகமளித்தலை தனது முதன்மை ஊழியமாக முன்னிறுத்தவில்லை. அவர் எப்போது ஒருவரை குணப்படுத்தினாலும், யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றே கூறினார்.*

***லூக்கா 8:38-39***

> *38பிசாசுகள் நீங்கின மனுஷன் அவருடனே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான்.*
>
> *39இயேசு அவனை நோக்கி: நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தப்படுத்தினான்.*

***மத்தேயு 9:30***

> *உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.*

***மாற்கு 1:43-44***

> *43அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு;*
>
> *44ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய்ச் சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்.*

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

***மாற்கு 5:43***

> *அதை ஒருவருக்கும் அறிவியாதபடி அவர்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டு, அவளுக்கு ஆகாரங்கொடுக்கும்படி சொன்னார்.*

*சுகம் ஜனங்களை கர்த்தரை குறித்த ஆச்சரியத்திலே ஆழ்த்த வேண்டும்.*

## *சுகமளிக்கும் வரங்கள் எப்படி கிரியை செய்யும்?*

### ***How Do Gifts of Healing Work?***

*இவை ஒரே வழிமுறையை பின்தொடருவதில்லை என்று நாம் உணர வேண்டும். புதிய ஏற்பாட்டில் சுகமளிக்கப்பட்ட தருணங்களை நாம் பார்ப்பதினால் இதை அறிந்துகொள்ள முடியும்.*

1. *தொடுதல், ஒரு வார்த்தை **(மத்தேயு 8:3)**.*
2. *வார்த்தை **(மத்தேயு 8:5-13)**. (குறிப்பு: சொல்லப்பட்ட வார்த்தையை குணமடைந்த மனிதன் கேட்கவில்லை)*
3. *தொடுதல் **(மத்தேயு 8:15)**.*
4. *தொடுதல், வார்த்தை **(மத்தேயு 9:29)**.*
5. *ஒரு கட்டளை **(மத்தேயு 12:13)**.*
6. *சேற்றை குழப்பி கண்களில் வைத்தல் மற்றும் வார்த்தை **(யோவான் 9:6)**.*
7. *கட்டளை மற்றும் தூக்கிவிடுதல் **(அப்போஸ்தலர் 3:6-9)**.*
8. *வார்த்தை, கட்டளை **(அப்போஸ்தலர் 9:34)**.*

*பரவலாக வார்த்தை சொல்லப்படுவதினால் சுகம் உண்டாகிறது என்று நாம் பார்க்கிறோம். நாம் நினைவில் கொள்ள வேண்டிய காரியம், தொடுதலோ, தூக்கிவிடுதலோ, வேறு ஒரு காரியமோ மற்றொருவருடைய விசுவாசத்திற்கு உதவியாக செயல்படும். ஆனாலும், தேவன் பல வேளைகளில் வார்த்தையின் மூலமே செயல்படுகிறார் என்று தெரிகிறது. ஆதி திருச்சபை மூப்பர்கள் தங்கள் கிரியைகளை வார்த்தையின் மூலம் நடப்பித்தனர். அதே வழிமுறையில் தேவன் சுகமளிக்கும் வரங்களை உபயோகப்படுத்த தமது ஊழியர்களை முற்படுத்துவார் என்பதும்*

*குறிப்பு:*

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகும். சுகமளிக்கும் வரங்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் விசுவாசிகள் மூலமாக வெளிப்படும்.*

*சுகமளிப்பதோ, அற்புதம் செய்வதோ எதுவானாலும் ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரை கொண்டு ஏவுகிற படி செய்யுங்கள்!!*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

குறிப்பு:

# *11. நவமான / அந்நிய பாஷையின் வரம்*

*கிறிஸ்தவத்தின் மிகப்பெரும் சர்ச்சைக்குரிய தலைப்பு. எந்த வகை சபையை சேர்ந்த கிறிஸ்தவரானாலும் [Charismatic or Pentecostal or Anglican or Baptist], இதை குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை கொண்டுள்ளனர்.*

*இந்த அந்நிய பாஷை வரத்தை தவிர, கிட்டத்தட்ட பரிசுத்த ஆவியானவரின் எல்லா வரங்களும் பழைய ஏற்பாட்டிலும் கிரியை செய்துள்ளன. அந்நிய பாஷையின் வரம் மாத்திரமே புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு பிரத்தியேகமாக கொடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த வரத்தை முழுமையாக புரிந்துகொள்வதற்கு இதன்பின்னல் உள்ள வரலாற்றை நாம் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் படைத்தபோது அவர்களால் தேவனோடு தடையில்லாமல் பேச முடிந்தது.*

*துரதிஷ்டவசமாக இந்த உறவு, ஆதாம் விழுந்ததினால் முறிக்கப்பட்டது. தேவன் பூமியை சபித்து, ஆதாமையும் ஏவாளையும் எதேன் தோட்டத்தை விட்டு விரட்டினார். அவர்களுடைய சந்ததியார் யாவரும்* ***ஆதியாகமம் 11****-ஆம் அதிகாரம் வரை ஒரே பாஷையை பேசி வாழ்ந்தார்கள்.*

***ஆதியாகமம் 11:1***

*பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது..*

*அவர்கள் பெருமைபாராட்டினபடியால் தேவன் அவர்கள் பாஷையை குலைத்து அவர்களை பிரிக்க வேண்டியிருந்தது. வேறு எந்த காரணத்தாலும் இல்லை, தங்களுக்கு பேர் உண்டாகும்படி மாத்திரமே அவர்கள் பெருமை பாராட்டினபோது "பாபேல்" என்னும் கோபுரத்தை கட்ட தீர்மானித்தார்கள். சுயம், பெருமையின் பிறப்பிடம்; பெருமை பாவத்தின் பிறப்பிடம்; இதில் வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், மனிதன் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மொழியையும் கூட பயன்படுத்தி, தேவனுடைய அதிகாரத்தை பிடுங்கி அதை தனக்காக்கி ஒரு சிங்காசனத்தை ஏற்படுத்த முடிவு செய்துவிட்டான்; நியாயப்படி அந்த சிங்காசனம் மனிதனுடையது அல்ல. தேவனுடையது.*

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

***ஆதியாகமம் 11:5-8***

> *5மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார்.*
>
> *6அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்.*
>
> *7நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்.*
>
> *8அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்.*

*இதற்குப்பிறகு, பின்னர் 'ஆபிரகாம்' என்று அழைக்கப்பட்ட ஆபிராமை தெரிந்தெடுத்து அவன் மூலமாய் மனுபுத்திரரை ஒரே பாஷையினால் ஆசீர்வத்தித்து, தமக்கு மகிமை உண்டாகும்படியாக அவர்களை தம் பக்கம் இழுக்க சித்தம் கொண்டார். பின்னர், எபிரேயு என்னும் பாஷையை தெரிந்துகொண்டு தமது ஜனமாகிய இஸ்ரவேலோடும் மனுக்குலத்தொடும் பேசினார்.*

*அந்த காலகட்டத்திலேயும், ஏசாயா தீர்க்கதரிசி மூலமாய் தேவன் வாக்குகொடுத்தது:*

***ஏசாயா 28:10-12,***

> ***10**கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்.*
>
> ***11**பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

> *12இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.*

*இதை, வினோத பாஷைகளை பேசுகிற அசீரியர்களிடம் இஸ்ரவேலர் அடிமைகளாய் போன நிகழ்வை தீர்க்கதரிசனமாக எடுத்துக்கொள்ளலாம்.*

*ஆனாலும், புதிய ஏற்பாட்டில் இயேசு பரமேருவதற்கு முன்னதாக, உயிர்த்தெழுந்த பின்னர் அருளிய பெரும் பொறுப்பாகிய Great Commission-ஐ கட்டளையிடும்போது நமக்கு ஒரு வாக்குத்தத்தமும் கொடுக்கிறார்.*

***மாற்கு 16:15-17***

> *15பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.*
>
> *16விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*
>
> *17விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*

*இயேசு வாக்குத்தத்தம் பண்ணினது பெந்தேகொஸ்தே நாளில் நிறைவேறியது.*

*அப்போஸ்தலர் 2:1-4*

> *1பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.*
>
> *2அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.*
>
> *3அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*4அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.*

பெந்தேகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டபோது காணப்பட்ட குறிப்பிடத்தக்க அடையாளம், அங்கிருந்த அனைவரும் அந்நிய பாஷைகளை பேசினார்கள்.

***அப்போஸ்தலர் 2:6***

*அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.*

அவர்கள் பேசிய பாஷை பிறர் புரிந்துகொள்ளும்படியான பிறருடைய ஜென்ம பாஷையாய் இருந்தது.

***அப்போஸ்தலர் 2:7-11,***

*7எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?*

*8அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?*

*9பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா,*

*10பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும், சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லிபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும், இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும், யூதரும், யூதமார்க்கத்தமைந்தவர்களும்,*

*11கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்.*

குறிப்பு:

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

*அங்கிருந்தவர்களில் சிலர் அவர்கள் மதுபானத்தினால் இப்படி பேசுகிறார்கள் என்று கூறினார்கள். ஆகவே பேதுரு, யோவேல் தீர்க்கதரிசி உரைத்ததை அவர்களுக்கு நினைவூட்டி, அவர்கள் மதுபானத்தினால் பேசவில்லை, பரிசுத்த ஆவியினால் நிறைந்தனர் என்று தெளிவுபடுத்துகிறார்.*

***அப்போஸ்தலர் 10,***

*பேதுரு கொர்நேலியு வீட்டிற்கு சென்றபோது, அவன் பிரசங்கம் பண்ணும்போதே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார்.*

***அப்போஸ்தலர் 10:46***

*அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும்,*

***எபேசு சபை -** Church in Ephesus*

***அப்போஸ்தலர் 19:1-6,***

***1**அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:*

***2**நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.*

***3**அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.*

*அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.*

***5**அதைக் கேட்டபோது அவர்கள்: கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*குறிப்பு:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

***6*அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தாவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிகளுக்காக ஜெபித்து அவர்கள் மேல் கைகளை வைத்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாய் அந்நிய பாஷைகளை பேசினார்கள்.

***1 கொரிந்தியர் 14:2****-ற்கு வருவோம்,*

*ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியிலே இரகசியங்களைப்பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான் .*

*கர்த்தர் தாமே இந்த பாஷையை புரிந்துகொள்ள முடியும்.*

***அப்போஸ்தலர் 2****-ல் பிறரும் புரிந்துகொள்ள முடியும்!*

*ஆக, இதிலிருந்து இரண்டுவகை பாஷைகள் உண்டென்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஒன்று நம்மால் புரிந்துகொள்ள கூடியது, மற்றொன்று நம்மால் புரிந்துகொள்ள கூடாதது.*

***1 கொரிந்தியர் 14:14-15***

***14*என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.*

***15*இப்படியிருக்க செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.*

*ஒரு பாஷை, பிறர் அறிந்ததும் நான் அறியாததுமாயிருக்கிறது; இது தேவனை மகிமைப்படுத்த பயன்படுகிறது.*

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*மற்றொன்று தேவன் ஒருவரை தவிர நானோ அல்லது வேறு யாரோ புரிந்துகொள்கிற பாஷை அல்ல! இது நான் ஜெபிப்பதற்கு உதவுகிறது, இதை ஜெபத்தின் பாஷை என்றும் சொல்லலாம்.*

*இந்த விஷயத்தில்தான் பெந்தேகொஸ்தே என்று சொல்லப்படுகிற சபைகளில் பெரும் குழப்பங்கள் உருவாகுகின்றன. இந்த ஜெப பாஷையை சபைகளில் பயன்படுத்தி ஜனங்களை குழப்பிவிடுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கற்றுக்கொடுத்த காரியத்தை அங்கீகரிக்க மறுக்கிறார்கள்:*

***1 கொரிந்தியர் 14:19***

> *அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்.*

***1 கொரிந்தியர் 14:27-28***

> *27யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்.*
>
> *28அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.*

*ஆகவே தான், உங்கள் சபை ஆராதனைகளிலே வியாக்கியானம் செய்ய ஒருவர் இல்லாதபட்சத்தில் உங்கள் ஜெப பாஷையில் பேச கூடாது.*

***1 கொரிந்தியர் 14:13***

> *அந்தப்படி, அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.*

*இந்த தெய்வீக உதவியளிக்கும் பாஷையை பயன்படுத்துவது எப்படி என்று அறிவுறுத்தும் முன்னர், பவுல் கூறுகிறதை பாருங்கள்:*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***1 கொரிந்தியர் 14:18***

> *உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.*

*அதே நேரத்தில் பாஷைகளை பேசுகிறவர்களை தடை செய்யாதிருங்கள். ஆண்டவர் நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.*

***1 கொரிந்தியர் 14: 39***

> *இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்.*

*ஏனெனில், கர்த்தருடைய ஆவியானவர் நம்முடைய பெலவீனத்திலே நாம் எப்படி இன்னும் சிறப்பாக ஜெபிக்க வேண்டும் என்று அவருடைய சித்தப்படி கற்றுக்கொடுக்கிறார்.*

***ரோமர் 8:26-27***

> *26அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.*
>
> *27ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

*ஆகவே, பாஷைகளை புத்தியாய் சபைகளில் பயன்படுத்தும்படி உங்களை கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பாஷைகளில் பேசினால், அதற்கான வியாக்கியானத்தை பெற தவறிவிடாதீர்கள், அல்லது வேறு ஒருவர் வியாக்கியானம் பண்ணும்வரை பொறுத்திருங்கள்.*

*தீர்க்கதரிசனம் பிறரை கட்டியெழுப்பும்; பாஷைகளோ உங்களை கட்டியெழுப்பும்! இந்த வரம் உங்களிக்குரியது!!*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

***1 கொரிந்தியர் 14:3-4***

> ***3***தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்.
>
> ***4***அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.

நீங்கள் உங்களுக்கு இயற்கையாய் கொடுக்கப்பட்ட பாஷையிலும் பேசவேண்டும் அதோடு ஆண்டவர் உங்களுக்கு கொடுக்கிற பாஷையிலும் பேச வேண்டு.

***1 கொரிந்தியர் 14:6-12***

> ***6***மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?
>
> ***7***அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்?
>
> ***8***அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?
>
> ***9***அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித்தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே.
>
> ***10***உலகத்திலே எத்தனையோ விதமானபாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல.

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*11ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன், பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.*

*12நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்;*

## நவமான பாஷைகள் ஒழிந்துவிட்டதா?

***Would like to counter another issue of Tongue have ceased!!***

***1 கொரிந்தியர் 13:8-10***

*8அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்.*

*9நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.*

*10நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.*

*பரலோகத்தில் எண்ணற்ற கூட்டமான ஜனங்கள், ஜாதிகள், ஒவ்வொரு தேசத்திலுமிருந்து, எண்ணற்ற பாஷைகளுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து தேவனை ஒரே பாஷையில் துதிப்பார்கள்.*

**வெளிப்படுத்தின விசேஷம் *7:9-12***

*9இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.*

*10அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

> *11தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு:*
>
> *12ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள்.*

*இப்பொழுது நவமான பாஷைகள் வழங்கப்படுவதன் நோக்கம், தேவனை மகிமைப்படுத்துவது; அதுமட்டுமல்ல சபையாக சதாக்காலங்களிலும் பரலோகத்தில் தேவனை மகிமைப்படுத்தவும் இது நமக்கு அருளப்படுகிறது. ஆனாலும், இந்த வரம் முழுமையானதல்ல; ஏனெனில் இது சபையில் அனைவருக்கும் அருளப்படுவது கிடையாது மற்றும் சபை வளர்சிக்கு பிரயோஜனபட வேண்டுமானால் இதை வியாக்கியானம் செய்ய ஒருவர் வேண்டும்.*

*ஆக, பூமியில் உள்ள நிறைவற்ற நிலைமைகள் மேலோங்கும்போது இந்த வரம் தற்காலிகமாக அருளப்படுகிறது. இதுவே இயேசுவிற்கு ஏன் இந்த பாஷைகளின் வரம் தேவைப்படவில்லை என்று நமக்கு விளக்குகிறது. ஏனெனில், அவர் மனம் முற்றிலும் பரிசுத்தமாய் இருந்ததினாலும், பிதாவாகிய தேவனோடு எப்பொழுதும் முற்றிலும் ஒன்றிப்போன ஜீவியத்தில் அவர் இருந்ததாலும், இந்த வரம் அவருக்கு தேவைப்படவில்லை.*

## *யாவருக்கும் இந்த வரம் தேவைப்படுகிறதா?*

*எல்லா விசுவாசிகளுக்கும் இந்த வரம் அருளப்படுவது இல்லை. **நவமான பாஷைகள் இரட்சிப்பிற்கு அடிப்படை தேவையோ அல்லது அடையாளமோ அல்ல**.*

***1 கொரிந்தியர் 12:30***

> *எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

### ***எனது நாவை (பாஷையை) கட்டுப்படுத்தலாமா? Can I control my Tongue?***

*நவமான பாஷைகள் வசீகர்க்கும் பேச்சு அல்ல; எப்பொழுதும் முறையாகவும் அதை பேசுகிறவரால் கட்டுப்படுத்துகிறதாகவும் இருக்கிறது.*

Tongues are not “ecstatic speech” but are always orderly and are able to be controlled by the one speaking.

***1 கொரிந்தியர் 14:27-28, 33, 39-40;***

> *27யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்.*
>
> *28அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.*
>
> *33தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.*
>
> *39இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்.*
>
> *40சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.*

## ஏன் நவமான பாஷையை பேச வேண்டும்?

1. ***சபையை குறித்து தேவனின் திட்டம்***

### ***God’s Plan for His church***

*பரிசுத்த ஆவியானவர் அருளப்படும்போது வெளிப்பட்ட வரம் அந்நிய பாஷையின் வரம். காற்றோ, நெருப்போ, சத்தமோ, கர்த்தரின் பிரன்னத்தை உணர்ந்த உணர்வோ பரிசுத்த ஆவி அருளப்பட்டதற்கு சான்றாக இல்லை மாறாக தங்களுக்கும் புரியாத*

குறிப்பு*:*

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

*ஆவியின் பாஷைகளில் விசுவாசிகள் பேசத்தொடங்கினதே சான்றாக இருந்தது. தமது பிள்ளைகள் ஆவியின் பாஷைகளிலே இயங்க வேண்டும் என்பது தினுடைய திட்டமாய் இருக்கிறது **(அப்போஸ்தலர் 2:4, 11; 1 கொரிந்தியர் 14:2).***

***2. நாம் மேலான சாட்சிகளாய் விளங்கும்படி பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள இயேசு கட்டளையிட்டிருக்கிறார்.***

***Jesus commanded us to receive the Holy Spirit to be an effective witness.***

*இயேசு சீஷர்களை அனுப்பியபோது, பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறும்வரை" எருசலேமில் தங்கியிருங்கள் என்று கட்டளையிட்டார்; "உங்களுக்கு தோன்றும் வரை தங்கியிருங்கள் என்றோ அல்லது உங்கள் வேத கோட்பாடுகளுக்கும் சபை ஸ்தாபன கோட்பாடுகளுக்கும் ஏற்புடையதாக உங்களுக்கு தோன்றும் வரை என்றோ அல்லது உங்களுக்கு நேரம் இருந்தால் என்றோ நீங்கள் ஏற்றுக்கோலும் வரை என்றோ நீங்கள் வசதிப்படும்வரை என்றோ" இயேசு சொல்லவில்லை.*

When Jesus commissioned the disciples to wait in Jerusalem until they received the promise of the Father, He didn't say, "Do this if you feel led to do so, or if it fits in your doctrinal or denominational beliefs, or if you have the time, or if you are so inclined, or if you feel comfortable about it."

*அவர் கட்டளையிட்ட ஒரே காரியம், பரிசுத்த ஆவியின் வரத்தை பெறும்வரை காத்திருங்கள் என்பது மாத்திரமே.*

No! Jesus commanded them to wait until they received the gift of the Holy Spirit.

*பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு இவ்வளவு அழுத்தமாக அவர்களுக்கு கூறியிருக்கும்போது, ஒவ்வொரி கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியானவரின் வரத்தை பெற்றுக்கொள்ள தேவனை நோக்கி பார்ப்பதற்கு இந்த ஒரு காரணம் மாத்திரமே போதும் **(அப்போஸ்தலர் 1:4; 5:32; யோவான் 14:16-17; எபேசியர் 5:18)**.*

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

### *3. கர்த்தருடைய வார்த்தை நமக்கு கட்டளையிடுகிறது*

*வேத வசனங்கள் நம்மை ஆவியினால் நிரம்பவும் புதிய நாவுகளாகிய ஆவியின் பாஷையிலும் ஜெபிக்க அறிவுறுத்துகின்றன.*

*ஆவியின் பாஷை நமக்கு கீழ்க்கண்ட வகையில் பிரயோஜனமாயிருக்கிறது,*

*ஆவியில் வாழ*

*ஆவியில் நடக்க*

*ஆவியில் வழிநடத்தப்பட*

*ஆவியின் கனியை கொடுக்க*

*ஆவியின் வரங்களை வெளிப்படுத்த*

*மகிமையிலிருந்து மகிமையடைந்து அவர் சாயலாக மாறுவதற்கு.*

***கலாத்தியர் 5:22-25; ரோமர் 8:14; 1 கொரிந்தியர் 12:7-11; 14:15; எபேசியர் 5:18; யோவான் 19:2; 2 கொரிந்தியர் 3:18***

### *4. தேவனோடு நேரடி தொடர்புகொள்ள*

*நமது ஆவி, பரிசுத்த ஆவியோடு கூட கர்த்தரோடு தொடர்புகொள்ள நம் ஆவியின் பாஷை உதவுகிறது. மனிதர்கள் எழும்பும் சதையும் போர்த்தப்பட்ட ஆவியின் மனிதர்கள். மனிதனுடைய பாவம் அவனுடைய ஆவியை மரிக்க செய்கிறபோது , இயேசு தம் நித்திய ஜீவனை நம்மேல் ஊற்றி நம் ஆவியை உயிர்பிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஆவியின் பாஷையை அருளி தேவனோடு நேரடி தொடர்பை ஏற்படுத்துகிறார்.*

***யோவான் 4:24; 1 கொரிந்தியர் 15:45; ஆதியாகமம் 2:7; ரோமர் 5:12; யோவான் 3:3-5, 16***

*ஆவியின் பாஷையே பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசிக்கு அருளுகிற மிகப்பெரும் வரம். கர்த்தர் நமக்கு கொடுக்கக்கூடிய மிகப்பெரும் வரம் இயேசுவே, அவரே இவ்வுலகத்திலிருந்து நம்மை இரட்சிக்க முடியும்; பரிசுத்த ஆவியானவரே இயேசு சபைக்கு கொடுக்கக்கூடிய மிகப்பெரும் வரம். தேவனுடைய பிள்ளைக்கு பரிசுத்த ஆவி அருளுகிற அந்த நபருக்கான பிரத்தியேக ஆவியின் பாஷையை தவிர பரலோகத்திலும், பூலோகத்திலும் அண்டசராசரங்களிலும் கிடைத்தற்கரிய மேலான,*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*முக்கியமான, நன்மை தரக்கூடிய வரம் வேறு ஒன்றுமில்லை **(1 கொரிந்தியர் 12:31; 14:4).***

A spirit language is the greatest gift the Holy Spirit can give a believer. Jesus is the greatest gift God could give for the redemption of the world, and the Holy Spirit is the greatest gift Jesus could give to His church. Of all the resources in heaven and the eternal universe, nothing is more valuable, beneficial or important for the Holy Spirit to give the individual child of God than her own spirit language**.**

### *5. ஜெபத்தின் மூலம் நம் விசுவாசத்தை கட்டவும் பெருக்கவும் செய்கிறது*

*பாஷைகளில் ஜெபிப்பது நம்மை கட்டி எழுப்புகிறதையும் நம் விசுவாசத்தை பெருக்குகிறதாயும் உள்ளது. எப்படி பணம் இந்த பூமியில் எதையும் பெற்றுக்கொள்ள பயன்படுகிறதோ அதுபோல விசுவாசமே எல்லா தெய்வீக காரியங்களையும் பெற்றுக்கொள்ள பயன்படுகிறது. ஆவியின் பாஷையில் ஜெபிப்பது உங்கள் விசுவாசத்தை பெருமளவு பெருக்குகிறது **(ரோமர் 12:6; யூதா 1:20; மாற்கு 9:23; மத்தேயு 9:29).***

*"இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்" என்ற வேதத்தின் அறிவுரையை பூர்த்தி செய்ய முக்கியமான வழிமுறை ஆவியின் பாஷையில் ஜெபித்தல். கிறிஸ்தவர்கள் எங்கும் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கலாம். ஆனால் நாம் இருக்கும் இடம் சற்று இடையூறாக இருக்குமானால் நமது உள்ளான மனிதனை கொண்டு ஆவியின் பாஷையில் சத்தம் வெளியில் கேட்காதபடி ஜெபிக்கலாம் **(எபேசியர் 6:18; 1 தெசலோனிக்கேயர் 5:17; மத்தேயு 26:41; லூக்கா 18:1; 21:36; 1 கொரிந்தியர் 14:15).***

### *6. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபித்தல்*

*பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியின் பாஷையை கொண்டு கர்த்தருடைய சித்தத்தின்படி ஜெபிக்க வழிநடத்துகிறார். நமது ஆவியின் பாஷையில் ஜெபிக்கும்போது தான் கிட்டத்தட்ட 100 விழுக்காடு ஆண்டவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கிறோம் என்று கூறலாம். கர்த்தருடைய சித்தத்தின்படி நாம் ஜெபிக்கும்போது அவர் நாம் ஜெபித்த காரியங்களை நமக்கு அருளுகிறார் **(ரோமர் 8:27; 1 யோவான் 5:14-15).***

*குறிப்பு:*

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

### *7. ஆவியில் ஜெபிப்பது சமாதானம் அளிக்கிறது*

*ஆவியில் ஜெபிப்பது நம் மனதை அமைதிப்படுத்துகிறது. நரம்பியல் மருத்துவரான Dr. ஆண்ட்ரூ நியூபெர்க் (Dr.Andrew Newberg), நவமான பாஷையில் ஜெபிக்கும் கிறிஸ்தவன், எப்போதும் மந்திரத்தை உச்சரிக்கும் புத்த துறவி மற்றும் ஜெபிக்கும் கத்தோலிக்க துறவிகள் ஆகிய மூன்று பேரின் மூளையை ஸ்கேன் செய்து ஒப்பிட்டு பார்த்தார். அதில் நவமான பாஷையில் கிறிஸ்தவன் ஜெபிக்கும்போது மூளையின் கட்டுப்பட்டு மையமான முன்புற மடல்களின் (frontal lobes the brain's control centre) அசைவு நின்றுவிட்டது. இதன் மூலம் நவமான பாஷயின் ஜெபம் ஆவியினால் ஏறெடுக்கப்படுகிறது என்பது ஊர்ஜிதமாகிறது **(1 கொரிந்தியர் 14:2, 14).***

## எப்படி நவமான பாஷையை பேசுவது?

### *How you should speak in Tongue?*

### *1. 1 கொரிந்தியர் 13:1*

> *"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன்.."*

*அன்பில்லாமல் பாஷைகளை பேசுவது பிரயோஜனமற்றது. அன்பு இல்லாத காரணத்தாலேயே அந்நிய பாஷையை பேசுபவர்கள் பெருமைபாராட்டிக்கொண்டு பிறரை ஏளனமாக பார்க்கின்றனர். இப்படிப்பட்ட அன்பில்லாமல் பாஷைகளை பேசுகிறவர்களை சத்தமிடுகிற வெண்கலம்போல கர்த்தர் வெறுக்கிறார்.*

### *2. உங்கள் தாய் மொழியில் அன்போடும் இரக்கத்தோடும் பேச கற்றுக்கொள்ளுங்கள்*

### *Learn to speak in your mother tongue with love and grace*

*உங்கள் தாய் மொழியில் நன்றாக அன்போடும் இரக்கத்தோடும் பேச கற்றுக்கொள்ளுங்கள் என்பதே எனது பணிவான வேண்டுகோள். ஏனெனில் பலர் அந்நிய பாஷைகளை பேசுகிறார்கள், ஆனால் அவர்கள் வாழ்க்கையோ வேதத்திற்கு முற்றிலும் புறம்பாக இருக்கிறது.*

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

### *3. தனிமையில் பேசுதல்*

### *Privately speaking*

*நீங்கள் தனியாக இருக்கும்போது இந்த வரத்தை தாராளமாக பயன்படுத்துங்கள். இது உங்களை வளர்த்துக்கொள்ள தேவன் கொடுத்த மிக அற்புதமான வரம். தேவ ரகசியங்களை அறிந்துகொள்ளும்படி தேவன் எனக்கு அளித்த வாரங்களில் இதுவே மிக சிறப்பான வரம் என்று நான் கூறுவேன்.*

### *4. பொது இடங்களில் பேசுதல்*

### *Public speaking*

*பொது இடத்திலோ ஆராதனையிலோ நீங்கள் பேசும்போது அதற்கு வியாக்கியானம் வரும்வரை பொறுத்திருங்கள். ஏனெனில், வியாக்கியானம் இல்லாமல் பொது இடங்களில் பாஷைகளை பேச கூடாது.*

***1 கொரிந்தியர் 14:22-23***

> ***22**அப்படியிருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.*
>
> ***23**ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நியபாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?*

*எனது தனிப்பட்ட வாழ்வில், வெளிப்பாடுகளோ வியாக்கியானமோ இல்லாமல் மேடையில் எங்கும் நான் அந்நிய பாஷையில் பேசுவதை நீங்கள் பார்த்திருக்க முடியாது.*

*குறிப்பு:*

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

***5. பாஷையில் கள்ளத்தனம் வேண்டாம்***

### *Don't falsify tongue*

*நவமான பாஷைகள் விலைமதிப்பற்ற வரம். ஆகவே தான் அதில் கள்ள நாவுகளையும் அதிகம் நம்மால் காண முடிகிறது. பெந்தேகொஸ்தே சபைகளில் இந்த கள்ள நாவுகளை அதிகம் காணலாம். எனது தனிப்பட்ட வாழ்வில் பலரை பார்த்திருக்கிறேன்; தங்கள் போதகர் எப்படி பேசுகிறாரோ அதையே சபை மக்களும் பேசிக்கொண்டு அந்நிய பாஷை என்று எண்ணிக்கொள்வார்கள்.*

The tongue is the precious gift hence there are lot of counterfeit too. There are lot of people in the Pentecostal circle falsify this. In my own personal life I have seen this how the pastor speaks the tongue the same way everyone in the congregation also speaks. They just copy the language of their pastor and used think that as tongue.

### தமது ஆவியை அளவில்லாமல் கொடுக்கும் தேவனை கேளுங்கள்

*Ask God who will give you His Spirit graciously.*

இந்த வரத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளாதிருந்தால், எந்த தடையும் இல்லாமல் நமக்கு அருளும் தேவனை நோக்கி இந்த வரத்தை பெற்றுக்கொள்ள கேளுங்கள்.

***லூக்கா 11:13***

> *பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, **பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா** என்றார்.*

குறிப்பு:

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

## குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

*குறிப்பு:*

# 12. தீர்க்கதரிசன வரம்

*தீர்க்கதரிசன ஊழியத்திற்கும் தீர்க்கதரிசனத்திற்கும் வித்தியாசம் உண்டு.*

*கர்த்தரின் சார்பில் பேசுகிறவர் தீர்க்கதரிசி எனப்படுவார்.*

*ஆசாரியன், ஜனங்களின் சார்பில் தேவனிடத்தில் பேசுகிறவர்.*

- ***பகுத்தறிதலும் அறிவும்**: ஜனங்களின் தற்போதய சூழலையும் நிலைமையையும் புரிந்துகொள்வது.*
- ***வெளிப்பாடு**: கர்த்தர் செய்யப்போகிற அல்லது செய்து மறைத்துவைக்கப்பட்டிருந்த காரியங்களின் வெளிபாடு.*
- ***தீர்க்கதரிசனம்**: தேவனிடம் கேட்டு அவற்றை முன்கூட்டியே பிரகடனப்படுத்துதல்.*

## பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்

*கர்த்தருடைய பிரதிநிதியாக அல்லது தூதுவராக இருந்து, கர்த்தருடைய வார்த்தையை அவருடைய ஜனங்களுக்கு அறிவிப்பதே பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசியின் பிரதான பணி. மெய்யான தீர்க்கதரிசிகள் தங்கள் அதிகாரமாய் தங்கள் கருத்தை பேசாமல், தேவன் கொடுக்கிற செய்தியை மாத்திரமே அறிவித்தார்கள்.*

***ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்." (யாத் 4:12).***

***உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார் (உபா. 18:18).***

***கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். (எரே 1:9).***

*குறிப்பு:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

***கலகக்காரராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு. (எசேக்கி. 2:7).***

*பல பழைய ஏற்பட்டு புத்தகங்களில் இந்த வார்த்தைகளை ஆரம்பத்தில் பார்க்கலாம், **அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, (ஓசியா 1:2; யோவேல் 1:1; மீகா 1:1; செப்பனியா 1:1**; cf. **யோனா 1:1)**. ஆமோஸ் கூறியது: **கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: (ஆமோஸ் 1:3).***

*தீர்க்கதரிசன ஊழியம் பழைய ஏற்பாட்டில் ஆண்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட ஊழியம் அல்ல. மோசேயின் சகோதரி மிரியம் தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டால் **(யாத்** 15:20), அதேபோல் தெபோராள் **(நியா** 4:4) மற்றும் உல்தாள் (2 **இராஜா** 22:14–20).*

*சில வேளைகளில் ஒரு கூட்டமான தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலில் ஊழியஞ்செய்ததை காண முடியும் (1 **சாமு** 10:5; 1 **இராஜா** 18:4), பொதுவாக இவர்கள் தீர்க்கதரிசிகளின் புத்திரர் என்றழைக்கபடுவர் (2 **இராஜா** 2:3, 5, 7; 4:38).*

*ஒரு தீர்க்கதரிசிக்கு எப்படி ஆண்டவருடைய வார்த்தை உண்டாகிறது என்று வேதத்தில் குறிப்பிடப்படவில்லை; பெரும்பாலும் உள்ளான மெல்லிய ஓசையின் மூலம் தேவன் பேசினார் என்றாலும் பல தருணங்களில் தரிசனங்கள் மூலமாகவும் (1 **சாமு** 3:1,15; 2 **சாமு** 7:17; **ஏசாயா** 1:1; **எசேக்கி** 11:24) அல்லது கனவுகள் மூலமாகவும் **(எண்ணா** 12:6) தேவன் வெளிப்படுத்துகிறார்.*

*இஸ்ரவேல் அடிமைகளாக போகும் காலம்மட்டும் பல தீர்க்கதரிசிகள் இருந்தனர்; பெரும்பாலும் அதில் எல்லாராலும் அறியப்பட்டவர்கள் எலியாவும் எலிசாவும். அடிமைகளாய் போன பிறகும் பல தீர்க்கதரிசிகள் எழும்பினர் அவர்களின் செயல்பாடுகள் ஏசாயா மல்கியா புத்தகங்களோடு கலக்காமல் தனிப்பட்ட புத்தகங்களாக காக்கப்பட்டுள்ளன.*

*வேதாகமத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவும் ஆதிகால ராஜ்யங்களாகிய பாபிலோன், நினிவே, தீரு மற்றும் ஏதோம் பட்டணங்கள் விழுந்ததிநிமித்தம் நிறைவேறியிருக்கின்றன. இந்த பட்டணங்கள் பரிசுத்த தேசாகிய இஸ்ரவேலையும், அதின் ஜனங்களையும், யூதர்களையும் அழிக்க நினைத்ததால் இவை அழிந்தன என்று வேதாகமம் மிக தெளிவாக குறிப்பிடுகிறது.*

*குறிப்பு:*

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*பாபிலோன் யுதாவை 70 வருடங்கள் ஆளும்.*

***எரேமியா 25:11-12***

> *11இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்.*
>
> *12எழுபது வருஷம் நிறைவேறினபின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்தியபாழிடமாக்கி,*

*இந்த தீர்க்கதரிசனம் கிமு 626 முதல் கிமு 586-குள் எழுதப்பட்டிருக்கும், சுமார் 50 வருடங்கள் கழித்து கிமு 609 முதல் கிமு 539-குள் வரை இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை.*

*எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் இஸ்ரவேல் 70 ஆண்டுகள் பாபிலோனிடம் சிறைபடும் என்றும், அதன் பிறகு பாபிலோன் தண்டிக்கப்படும் என்றும் தேவன் உரைத்திருந்தார். இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களுமே நிறைவேறின!*

*கிமு 609-ல் பாபிலோன் அசீரியாவின் கடைசி ராஜாவை வீழ்த்தி இஸ்ரவேல் தேசம் உட்பட அசீரிய ராஜ்ஜியத்தை கைப்பற்றியது. பாபிலோனியர் பின்னர் இஸ்ரவேலுக்கு நேராக தன கையை நீட்டி பல யூதர்களை அடிமைகளாய் எடுத்துக்கொண்டு எருசலேமையும் தேவாலயத்தையும் தகர்த்தனர்.*

*இஸ்ரவேலின் மேல் அவர்களுடைய ஆதிக்கம் கோரேசு எனப்படும் பெரிசிய ராஜா பாபிலோனை கைப்பற்றியபோது கிமு 539-ல் முடிவுக்கு வந்தது, பாபிலோனும் விழுந்தது. ஏசாயாவில் சொல்லப்பட்ட வேறொரு தீர்க்கதரிசனமும் அப்போது நிறைவேற்றப்பட்டது.*

## Cyrus Cylinder

***ஏசாயா 45:1***

*குறிப்பு:*

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

> *கர்த்தராகிய நான் அபிஷேகம்பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத் திறந்துவைக்கும்படிக்கும், அவனைப்பார்த்து, அவன் வலதுகையைப் பிடித்துக்கொண்டு, அவனுக்குச் சொல்லுகிறதாவது:*

*இந்த தீர்க்கதரிசனம் கிமு 701 முதல் கிமு 681-க்குள் உரைக்கப்பட்டது. சுமார் 100 ஆண்டுகள் கழித்து கிமு 539-ல் இது நிறைவேற்றப்பட்டது.*

*கோரேசுக்கு பாபிலோனின் கதவுகளை திறப்பேன் என்றும் அவனுடைய படையை குறித்தும் கர்த்தர் உரைக்கிறார். பாபிலோனின் மிகவும் பாதுகாப்பான ஒரு நகரம் – 70 அடி கணமும் 300 அடி உயரமும் 250-க்கும் மேற்பட்ட கோபுரங்களும் கொண்ட மிகவும் வலிமையான பாதுகாப்பு கொண்ட நகரம். ஆனாலும் கோரேசால் அதை மேற்கொள்ள முடிந்தது.*

*கோரேசும் அவன் படையும் ஐப்பிராத்து நதியின் போக்கை மாற்றி பெரும் ஏரிக்கு நேராய் திருப்பிவிட்டு, கொரேசும் அவன் படையும் நதிக்கரை வழியே சென்று பாபிலோனை கைப்பற்றினர்.*

### பாபிலோன் நிரந்தரமாக அழிக்கப்படும்

> ***ஏசாயா 13:19***
>
> *ராஜ்யங்களுக்குள் அலங்காரமும் கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும்.*

*இந்த தீர்க்கதரிசனம் கிமு 701 முதல் கிமு 681-க்குள் உரைக்கப்பட்டது கிமு 539-க்கு பிறகு நிறைவேற்றப்பட்டது.*

*கோரேசு பாபிலோனை வீழ்த்திய பிறகு பாபிலோன் ராஜ்ஜியம் மீண்டும் எழும்பவில்லை என்பதை வரலாறு உறுதி செய்கிறது.*

*குறிப்பு:*

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

___________________________________________________________________________

*யூதர்கள் பாபிலோனிய ராஜ்ஜியத்தை எறிந்துவிட்டு தங்கள் வீடுகளுக்கு திரும்புவார்கள்.*

***எரேமியா 32:36-37***

> *36இப்படியிருக்கையில் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும், பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போம் என்று நீங்கள் சொல்லுகிற இந்த நகரத்தைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:*
>
> *37இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லாத் தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பிவரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன்.*

*கிமு 626 முதல் கிமு 586-குள் எழுதப்பட்ட இந்த தீர்க்கதரிசனம் 536-ல் நிறைவேறியது.*

## நினிவே அக்கினியினால் அழிக்கப்படும்

***நாகூம் 3:15***

> *அங்கே அக்கினி உன்னைப் பட்சிக்கும், பட்டயம் உன்னைச் சங்கரிக்கும்; அது பச்சைக்கிளிகளைப்போல் உன்னைப் பட்சித்துப்போடும்; உன்னைப் பச்சைக்கிளிகளத்தனையாக்கிக்கொள், உன்னை வெட்டுக்கிளிகளத்தனையாக்கிக்கொள்.*

*தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 1800-களில் இடிபாடுகளை உள்ளடக்கிய சாம்பல் அடுக்குகளை நினிவே இருந்ததாக கூறப்படும் இடத்தில் கண்டறிந்தனர். Britannica Encyclopaedia கூறுகிறது "... நினிவே பெரும் வீழ்ச்சியை சந்தித்தது, அதிலிருந்து அந்நகரம் மீளவேயில்லை. சாம்பல்கள் நிறைந்திருப்பதற்கான விரிவான தடயங்கள் அங்கு காணப்படுகிறது; இது பாபிலோனியர், ஸ்கைத்தியர் மற்றும் மேதியர் ஆகியோர் அந்த நகரத்தை 612ல் கொள்ளையிட்டது அக்ரோபோலியின் பல இடங்களில் தெரியவருகிறது. 612-க்கு பிறகு அந்த நகரம் தனது முக்கியத்துவத்தை இழந்தது.... "*

*குறிப்பு:*

*Archaeologists unearthed the site during the 1800s and found a layer of ash covering the ruins. According to the Encyclopaedia Britannica: "...Nineveh suffered a defeat from which it never recovered. Extensive traces of ash, representing the sack of the city by Babylonians, Scythians, and Medes in 612 BC, have been found in many parts of the Acropolis. After 612 BC the city ceased to be important..."*

### தீரு பல ரஜ்ஜியங்களால் தாக்கப்படும்

***எசேக்கியல் 26:3***

> *நீலாம்பரந்தரித்த தலைவரும், அதிபதிகளும், சௌந்தரிய வாலிபரும், குதிரைகளின்மேல் ஏறுகிற வீரருமாயிருந்த சமீபதேசத்தாராகிய அசீரியர் என்கிற தன் சிநேகிதர்மேல் அவள் மோகித்து,*

*கிமு 587-586களில் தீரு தாக்கப்படும் என்ற இந்த தீர்க்கதரிசனம் கிமு 573-லும், கிமு 332-லும் மற்றும் கிபி 1291-லும் நிறைவேறியது.*

*இன்னும் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் இங்கு எழுதப்பட முடியாதவை நிறைவேறியுள்ளன. யூதர்களை ரட்சிக்க மேசியா வருவார் என்ற தீர்க்கதரிசனமும் சொல்லப்பட்டது. பழைய ஏற்பாட்டில் மேசியாவை குறித்து ஏராளமான தீர்க்கதரிசனங்கள் இருந்தாலும், ஒன்று மட்டும் பிரத்தியேகமான தீர்க்கதரிசனம்.*

## மேசியாவின் வருகை

### *பழைய ஏற்பாட்டில் இயேசுவை குறித்த தீர்க்கதரிசனங்கள்.*

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
|---|---|---|---|
| *1* | Messiah would be born of a woman.<br>மேசியா ஒரு ஸ்திரீயிடம் தோன்றுவார் | *ஆதியாகமம் 3:15* | *மத்தேயு 1:20 ; கலாத்தியர் 4:4* |
| *2* | Messiah would be born in Bethlehem.<br>மேசியா பெத்லகேமிலே தோன்றுவார் | *மீகா 5:2* | *மத்தேயு 2:1 ; லூக்கா 2:4-6* |

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
|---|---|---|---|
| *3* | Messiah would be born of a virgin.<br>மேசியா ஒரு கன்னிகையிடம் தோன்றுவார் | *ஏசாயா 7:14* | *மத்தேயு 1:22-23 ; லூக்கா 1:26-31* |
| *4* | Messiah would come from the line of Abraham.<br>மேசியா ஆபிரகாம் சந்ததியில் தோன்றுவார் | *ஆதியாகமம் 12:3 ; ஆதியாகமம் 22:18* | *ரோமர் 9:5 ; மத்தேயு 1:1* |
| *5* | Messiah would be a descendant of Isaac.<br>மேசியா ஈசாக்கின் வாரிசாக தோன்றுவார் | *ஆதியாகமம் 17:19 ; ஆதியாகமம் 21:12* | *லூக்கா 3:34* |
| *6* | Messiah would be a descendant of Jacob.<br>மேசியா யாக்கோபின் வாரிசாக தோன்றுவார் | *எண்ணாகமம் 24:17* | *மத்தேயு 1:2* |
| *7* | Messiah would come from the tribe of Judah.<br>மேசியா யூதா கோத்திரத்தில் தோன்றுவார் | *ஆதியாகமம் 49:10* | *லூக்கா 3:33 ; எபிரேயர் 7:14* |
| *8* | Messiah would be heir to King David's throne.<br>மேசியா தாவீதின் சிங்காசனத்திற்கு வாரிசாக இருப்பார் | *2 சாமுவேல் 7:12-13 ; ஏசாயா 9:7* | *லூக்கா 1:32-33 ; Romans 1:3* |

குறிப்பு:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
|---|---|---|---|
| *9* | Messiah's throne will be anointed and eternal.<br>மேசியாவின் சிங்காசனம் அபிஷேகிக்கப்பட்டதும் அநாதியுமானது | *சங்கீதம் 45:6-7 ; தானியேல் 2:44* | *லூக்கா 1:33 ; எபிரேயர் 1:8-12* |
| *10* | Messiah would be called Immanuel.<br>மேசியா இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் | *ஏசாயா 7:14* | *மத்தேயு 1:23* |
| *11* | Messiah would spend a season in Egypt.<br>மேசியா எகிப்தில் சில காலம் தங்கியிருப்பார் | *ஓசியா 11:1* | *மத்தேயு 2:14-15* |
| *12* | A massacre of children would happen at Messiah's birthplace.<br>மேசியா பிறந்த ஊரில் அநேக குழந்தைகள் சங்கரிக்கப்படுவர் | *எரேமியா 31:15* | *மத்தேயு 2:16-18* |
| *13* | A messenger would prepare the way for Messiah<br>ஒரு தூதுவன் மேசியாவிற்கு பாதையை ஆயத்தப்படுத்துவர். | *ஏசாயா 40:3-5* | *லூக்கா 3:3-6* |
| *14* | Messiah would be rejected by his own people.<br>மேசியா தமது ஜனங்களால் நிராகரிக்கப்படுவார் | *சங்கீதம் 69:8* | *யோவான் 7:5 ; யோவான் 1:11* |
| *15* | Messiah would be a prophet.<br>மேசியா ஒரு தீர்க்கதரிசி | *உபாகமம் 18:15* | *அப்போஸ்தலர் 3:20-22* |

குறிப்பு:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
|---|---|---|---|
| *16* | Messiah would be preceded by Elijah.<br>மேசியாவிற்கு முன் எலியா தோன்றுவார் | *மல்கியா 4:5-6* | *மத்தேயு 11:13-14* |
| *17* | Messiah would be declared the Son of God.<br>மேசியா தேவனுடைய குமாரன் என்னப்படுவார் | *சங்கீதம் 2:7* | *மத்தேயு 3:16-17* |
| *18* | Messiah would be called a Nazarene.<br>மேசியா நசரேயன் என அழைக்கப்படுவார் | *ஏசாயா 11:1* | *மத்தேயு 2:23* |
| *19* | Messiah would bring light to Galilee.<br>மேசியா கலிலேயாவிற்கு ஒளியை கொண்டுவருவார் | *ஏசாயா 9:1-2* | *மத்தேயு 4:13-16* |
| *20* | Messiah would speak in parables.<br>மேசியா உவமைகளினால் பேசுவார் | *சங்கீதம் 78:2-4 ; ஏசாயா 53:3 ; ஏசாயா 6:9-10* | *மத்தேயு 13:10-15, 34-35* |
| *21* | Messiah would be sent to heal the broken hearted.<br>உடைக்கப்பட்ட இருதயங்களை குணப்படுத்த அனுப்பப்படுவார் | *ஏசாயா 61:1-2* | *லூக்கா 4:18-19* |
| *22* | Messiah would be a priest after the order of Melchizedek.<br>மெல்கிசெதேக்கின் முறைமையின்படி ஆசாரியனாக இருப்பார் | *சங்கீதம் 110:4* | *எபிரேயர் 5:5-6* |

குறிப்பு:

______________________________________________________________________

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
|---|---|---|---|
| *23* | Messiah would be called King.<br>மேசியா ராஜா எனப்படுவார் | *சங்கீதம் 2:6 ; சகரியா 9:9* | *மத்தேயு 27:37 ; மாற்கு 11:7-11* |
| *24* | Messiah would be praised by little children.<br>சிறு பிள்ளைகளால் போற்றப்படுவார் | *சங்கீதம் 8:2* | *மத்தேயு 21:16* |
| *25* | Messiah would be betrayed.<br>மேசியா காட்டிக்கொடுக்கப்படுவார் | *சங்கீதம் 41:9 ; சகரியா 11:12-13* | *லூக்கா 22:47-48 ; மத்தேயு 26:14-16* |
| *26* | Messiah's price money would be used to buy a potter's field.<br>மேசியாவின் பரிசுத்தொகை ஒரு குயவனின் நிலத்தை வாங்க பயன்படும். | *சகரியா 11:12-13* | *மத்தேயு 27:9-10* |
| *27* | Messiah would be falsely accused.<br>மேசியா பொய்யாய் குற்றம் சாட்டப்படுவார். | *சங்கீதம் 35:11* | *மாற்கு 14:57-58* |
| *28* | Messiah would be silent before his accusers.<br>தம்மேல் குற்றம் சுமத்துபவர்கள் முன் அமைதியாக இருப்பார் | *ஏசாயா 53:7* | *மாற்கு 15:4-5* |
| *29* | Messiah would be spat upon and struck.<br>மேசியா உமிழவும் அடிக்கவும் படுவார். | *ஏசாயா 50:6* | *மத்தேயு 26:67* |
| *30* | Messiah would be hated without cause.<br>காரணமின்றி வெறுக்கப்படுவார் | *சங்கீதம் 35:19 ; சங்கீதம் 69:4* | *யோவான் 15:24-25* |

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
|---|---|---|---|
| *31* | Messiah would be crucified with criminals.<br>கள்ளர்களோடு சிலுவையிலறையப்படுவார் | *ஏசாயா 53:12* | *மத்தேயு 27:38 ; மாற்கு 15:27-28* |
| *32* | Messiah would be given vinegar to drink.<br>அவருக்கு குடிக்க காடியை கொடுப்பார்கள் | *சங்கீதம் 69:21* | *மத்தேயு 27:34 ; யோவான் 19:28-30* |
| *33* | Messiah's hands and feet would be pierced.<br>அவர் கைகளிலும் கால்களிலும் உருவக்குத்துவார்கள் | *சங்கீதம் 22:16 ; சகரியா 12:10* | *யோவான் 20:25-27* |
| *34* | Messiah would be mocked and ridiculed.<br>மேசியா பரியாசம்பண்ணப்படுவார் | *சங்கீதம் 22:7-8* | *லூக்கா 23:35* |
| *35* | Soldiers would gamble for Messiah's garments.<br>அவருடைய வஸ்திரத்தின்மேல் சீட்டுப்போட்டார்கள் | *சங்கீதம் 22:18* | *லூக்கா 23:34 ; மத்தேயு 27:35-36* |
| *36* | Messiah's bones would not be broken.<br>மேசியாவின் எலும்புகள் முறிக்கப்படுவதில்லை | *யாத்திராகமம் 12:46 ; சங்கீதம் Psalm 34:20* | *யோவான் 19:33-36* |
| *37* | Messiah would be forsaken by God.<br>மேசியா கர்த்தரால் கைவிடப்படுவார் | *சங்கீதம் 22:1* | *மத்தேயு 27:46* |

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

| வரிசை | தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது |
| --- | --- | --- | --- |
| *38* | Messiah would pray for his enemies.<br>மேசியா தமது எதிராளிகளுக்காக ஜெபிப்பார் | *சங்கீதம் 109:4* | *லூக்கா 23:34* |
| *39* | Soldiers would pierce Messiah's side.<br>போர் சேவகர்கள் அவருடைய விழாவிலே குத்துவார்கள். | *சகரியா 12:10* | *யோவான் 19:34* |
| *40* | Messiah would be buried with the rich.<br>மேசியா ஐஸ்வர்யவான்களோடு அடக்கம்பன்னப்படுவார் | *ஏசாயா 53:9* | *மத்தேயு 27:57-60* |
| *41* | Messiah would resurrect from the dead.<br>மேசியா மரித்தோரிலிருந்து எழும்புவார் | *சங்கீதம் 16:10 ;*<br>*சங்கீதம் 49:15* | *மத்தேயு 28:2-7 ;*<br>*அப்போஸ்தலர் 2:22-32* |
| *42* | Messiah would ascend to heaven.<br>மேசியா பரலோகத்திற்கு ஏறுவார் | *சங்கீதம் 24:7-10* | *மாற்கு 16:19 ;*<br>*லூக்கா 24:51* |
| *43* | Messiah would be seated at God's right hand.<br>தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பார் | *சங்கீதம் 68:18 ;*<br>*சங்கீதம் 110:1* | *மாற்கு 16:19 ;*<br>*மத்தேயு 22:44* |
| *44* | Messiah would be a sacrifice for sin.<br>மேசியா பாவத்திற்கு பலியாவார் | *ஏசாயா 53:5-12* | *ரோமர் 5:6-8* |

குறிப்பு:

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

## புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம்

***அப்போஸ்தலர் 2:17-18***

> *17கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;*
>
> *18என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.*

*தீர்க்கதரிசன ஊழியம் ஆதித்திருச்சபையில் [பரவலாக பல்வேறு தருணங்களில் வெளிப்பட்டது.*

> *அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடியபஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று.” (**அப்போஸ்தலர் 11:28**).*

*அந்தியோகியா சபையில் தீர்க்கதரிசிகள் அதிகமாய் செயல்பட்டார்கள். (அப்போஸ்தலர் 13:1). தீரு (அப்போஸ்தலர் 21:4), மற்றும் செசரியாவில் பிலிப்புவின் நான்கு மகள்கள் தீர்க்கதரிசனம் உரைத்தனர். (அப்போஸ்தலர் 21:8–9).*

*பரிசுத்த ஆவியின் வரங்களுள் ஒன்றான தீர்க்கதரிசனம், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை கட்டிஎழுப்பும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*எபேசியர் 2:20*

> *அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளென்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;*

*1 கொரிந்தியர் 14:1*

குறிப்பு:

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.*

*அப்போஸ்தலனாகிய பவுல், நாம் எல்லாரும் தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்தோடு கூறுகிறார்.*

## ***தீர்க்கதரிசனம் என்பது என்ன?***

***1 கொரிந்தியர் 14:3***

*தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்.*

*தீர்க்கதரிசனம் என்பது -*

1. **பலப்படுத்ததுதல், கட்டியெழுப்பதல் -** *Strengthen, Edification,*
2. **உற்சாகப்படுத்துதல் -** *Encouraging*
3. **தேற்றுதல் -** *Comforting*

## ***தீர்க்கதரிசனம் என்ன செய்யும்?***

***1 கொரிந்தியர் 14:4***

*அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.*

*இந்த வரம் சபையை கட்டியெழுப்பும், ஒரு தனி நபரை அல்ல முழு சபையையும்.*

*1 **கொரிந்தியர்** 14:24-25*

*24எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்.*

குறிப்பு:

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

> *25அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும், அவன்முகங்குப்புற விழுந்து, தேவனைப்பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.*

*ஒரு அவிசுவாசி தேவனுடைய மகிமையை காணும்படி அவனுடைய வாழ்க்கையை பற்றிய சத்தியங்களை இந்த வரம் வெளிப்படுத்தும்; யாரையும் வெட்கப்படுத்துவதற்கு அல்ல.*

*தீர்க்கதரிசன வரம் ஒருவனை பெரியவனாக்குவதில்லை!! அது எவரையும் தேவனுக்கு அருகில் இழுக்க வேண்டும். அதை கேட்கிற யாரும் தேவனை குறித்து ஆச்சரியப்பட வேண்டும்.*

*பகுத்தறிதலுக்கும் தீர்க்கதரிசனத்திற்கும் வித்தியாசம் உண்டு. பகுத்தறிதல் இதுவரை வாழ்வில் என்ன நடந்தது என்பதை அறிவது; தீர்க்கதரிசனம் இனிமேல் என்ன நடக்கப்போகிறது என்று வெளிப்படுத்துவது. தேவன் சில வேளைகளில் ஒருவரின் கவனத்தை ஈர்க்கும்படி அவருடைய வாழ்வைபற்றிய காரியங்களை வெளிப்படுத்துவதுண்டு; ஆனாலும் அதை ஒருவரை தண்டிப்பதற்கோ கீழே விழச்செய்வதற்கோ பயன்படுத்தக்கூடாது.*

*இந்த வரம் பழைய ஏற்பாடு காலத்தில் ஜனங்களின் பாவங்களை நினைவுபடுத்தியது.*

*1* ***இராஜாக்கள்*** *17:18*

> *அப்பொழுது அவள் எலியாவை நோக்கி: தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா என்னிடத்தில் வந்தீர்? என்றாள்.*

*சமாரிய ஸ்திரீயின் கவனத்தை ஈர்ப்பதற்காக பகுத்தறிதல் மூலம் தமக்கு வெளிப்பட்டதை இயேசு கூறினார்.*

*1* ***கொரிந்தியர்*** *14:29-31*

> *29தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்.*

*குறிப்பு:*

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

*30அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்.*

*31எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.*

*தீர்க்கதரிசன சபை (Prophetic assembly) என்பது சபையை பற்றி அறியாத மூன்று தீர்க்கதரிசிகளை அழைத்து தீர்க்கதரிசனம் உரக்க வைத்து ஜனங்கள் அதை சரிபார்ப்பது.*

*தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு நடைமுறை உதவிகள்.*

*பெண்கள் சபையில் பேசுவதும் தீர்க்கதரிசனம் உரைப்பதும்.*

*தீர்க்கதரிசன வரம் தீர்க்கதரிசியின் ஆளுகைக்கு உட்பட்டது.*

*1* ***கொரிந்தியர்*** *14:32*

*தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே.*

குறிப்பு:

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

**குறிப்புகள்**

*குறிப்பு:*

## குறிப்புகள்

*குறிப்பு:*

# குறிப்புகள்

*குறிப்பு:*